V53,1y7
N53
2338

00

# நெப்போலியன்



V53,1:87,
N53.
2338

# நெப்போலியன்

ஊகுருவி

கலைமன்றம்
சென்னை-1

வெளியீடு: 71
முதற்பதிப்பு: மே 1953
உரிமை உடையது

2338
9. 5. 28. V53,137
N53

விலை ரூ. 1.00

2338

விற்பனை நிலையம்:
. எஸ். ராமுலு ம்பெனி
6, சைனு பஜார், சென்னை-1

3

V53,1y7

## படித்துப் பாருங்கள்

—o—

ஒரு காலத்தில் உலகம் கண்டு அஞ்சிய மாவீரன் **நெப்போலியன்**. அவன் வீரம் எத்தகையது? அவன் வீரத்தில் மட்டும் சிறந்தவனா? ஒழுக்கத்திலும் உயர்ந்தவனா? என்ற பல கேள்விகளுக்கு இந்நூல் பதில் அளிக்கிறது.

ஒழுக்கத்தின் உறைவிடமான அந்தப் பெரு வீரனின் வரலாறு புதிய முறையில் எழுதப் பெற்றிருக்கிறது. நல்ல கருத்துக்கள் மலிந்த இந்த புத்தகத்தை எப்போதும் போல் அனுப்புகின்றோம் உங்கள் முன். படித்துப் பாருங்கள்.

வணக்கம்

**கலைமன்றத்தினர்**

## ஆசிரியரின் பிற நூல்கள்

—o—

ஆராய்ச்சி

- கோயில்கள் (இங்கர்சால்)
- உண்மை ,,
- மக்கள் உரிமை ,,
- அறியாமை ,,
- கடவுள் ,,
- அரசாங்கம் (லெனின்)
- மாஜி கடவுள்கள்
- தொழிலாளர் (மாஜினி)

வரலாறு

- கலிங்கப்போர்
- வீரமங்கை ஜோன்
- உலகைத் திருத்திய உத்தமர்கள் (1-ம் பாகம்)
- ஒளி விளக்குகள் (2-ம் பாகம்)
- சீனத்துச் சிங்கம்
- ரஸ்புடீன்

கதைகள்

- ரோமியோ-ஜூலியத் (ஷேக்ஸ்பியர்)
- லைலா - மஜ்னு
- நாநா (எமிலிஜோலா)

# நெப்போலியன்

"இந்தக் கதியும் வரலாமா?"

"யாருக்கப்பா?"

"யாருக்கா? நம் நாட்டுக்கு."

"எதை குறிப்பிட்டு கூறுகிருய்?"

"உலகின் பூஞ்சோலையல்லவா நமது பிரான்சு?"

"ஏன் அதைப்பற்றி சந்தேகம் கொள்ளுகிருய்?"

"சந்தேகம் கொள்ளவில்லை; சங்கடப்படுகின்றேன் நண்பா."

"விளக்கமாகச் சொல்லமாட்டேன் என்கிருயே?"

"விளக்கமா வேண்டும்; கேள்! நீ மட்டும் கேட்டு என்ன பயன்? கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் கேளாதவர்களாய் இருக்கும் பிரான்சு மக்களும் கேட்க வேண்டுமே! உலகப் பூந்தோட்டமான பிரான்சு நாட்டை உலுத்தர்கள் புகுந்து குலைத்துவிட்டார்களே! நந்தவனத்தில் மந்திகள் புகுந்து மலர்களைப் பறித்து கசக்கி மண்ணிலே வீசுவதுபோல்! இதை எண்ணும் போது நெஞ்சில் வேதனை அம்புகள் பாய்ந்து துளைக்கின்றனவே. மறுபடியும் அந்த மாவீரன் பிறந்தா வரப்போகிருன், வீழ்ந்த நாட்டை தன் வீரத்தால் தட்டி எழுப்பி, "என்நாடும், என் பொன்னுட்டுக்கு ஈடும் எடுப்பும் ஆகாது" என்று கூற!

"யாரைப் பற்றிய வர்ணனையப்பா இது?"

"மாவீரன் ஐரோப்பிய வல்லரசுகள் என்னும் நரிகள் கண்டு அஞ்சும் பிரான்சு நாட்டின் வெற்றிச் சிங்கம் நெப்போலியனைப் பற்றியதுதான்."

"ஆம்! அவன் மறைந்து ஆண்டுகள் ஒன்பது உருண்டோடின. அவன் உடம்புகூட பிரஞ்சு மண்ணில் புதைபட கொடுத்து வைக்கவில்லை. ஆறு ஆண்டுகளாக ஆங்கிலேயர்களால் சிறைவைக்கப்பட்ட அந்த வீரனைப் பிரஞ்சு நாடு விடுதலை செய்ய முடியாத கேவல நிலைமையில் இருக்கிறது. அவனும் அங்கே இறந்தான். அவன் உடம்பையாகிலும் நமது நாட்டில் புதைக்கவும் நம்மால் முடியவில்லையே! நாம் கோழைகள்போல வன்றோ இருக்கின்றோம்."

"நண்பனே! என் கருத்தும் அதுவே. நாம் கோழைகள் அல்ல; நெப்போலியனின் படைவீரர்கள். இன்று வரையில் நாட்களை வீணாக்கிவிட்டோம். இனியும் அப்படி இருக்கக்கூடாது. எப்படியும் நமது வாழ்நாட்களிலேயே வீர நெப்போலியனின் சவப்பெட்டியை இங்கிலாந்திலிருந்து பிரான்சுக்குக் கொண்டுவர வேண்டும் என்று சூளுரைத்துக் கொள்வோம்."

"ஆம்! உன் யோசனை சரியானதே. ஆனால் இதனை முடிப்பது எவ்விதம்?"

"சுலபத்தில் முடித்துவிடலாம். 'நெப்போலியனின் சவப்பெட்டி பிரான்சில் புதைபடவேண்டும். இதற்கு அரசாங்கம் தக்க முயற்சிகள் செய்யவேண்டும்' என்று நாட்டு மக்களிடம் கூறுவோம். இவ்விதம் விஷயத்தை சில தினங்களில் காட்டுத் தீயைப்போல பரப்பிவிடுவோம்."

ஆம்! நெப்போலியனை நேசிக்கும் மக்கள் அதிகம் உண்டு. ஆகவே நாம் வெற்றி பெறுவது நிச்சயம். இந்தக் கிளர்ச்சியை இன்றே செய்ய முற்படவேண்டும்."

"கிளர்ச்சி ஓங்குக! நெப்போலிய மன்னன் வாழ்க! என்ற முழக்கம் சீக்கிரம் தெருக்களில் முழங்கும். வெற்றி நிச்சயம்."

"ஆம் நண்பா. யாருக்கு வெற்றி! உண்மைக்கு வெற்றி! வீரத்துக்கு வெற்றி! நீ சென்று கிளர்ச்சிக் குரியவைகளைக் கவனி; நான் என் வேலைகளைத் துவங்கு கின்றேன்."

மேற்குறிப்பிட்ட உரையாடல் 1830-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் இரு நண்பர்களிடையே நிகழ்ந்தது.

o o o

சில தினங்களுக்குப் பின்னர் மக்கள் கிளர்ச்சி செய்தனர். நெப்போலியனின் சவத்தை பிரான்சு நாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று கூப்பாடு போட்டனர். இந்தக் கிளர்ச்சி பயன்தரவில்லை. 1831-ஆம் ஆண்டு நெப்போலியன் இயற்றிய சட்டங் கள் அமுலுக்கு வந்தன. நெப்போலியன் சவத்தை சீக்கிரம் கொண்டுவர முயற்சிப்பதாக ஆட்சியாளர் வாக்களித்தனர்.

1832-ஆம் ஆண்டு நெப்போலியனின் மகன் உயிர் துறந்தான். அதன்பிறகு பட்டத்திற்கு வரத் தகுதி உடையவர்கள் எவருமில்லை.

மக்கள் கிளர்ச்சி அடங்காமையால் 1833-ஆம் ஆண்டில் நெப்போலியனை மக்கள் மறந்துவிடாமலிருக்க ஓர் உருவச்சிலை செய்து அரண்மனை முன்னால் நிறுவி னார்கள். அத்தோடு நெப்போலியனின் உருவப்படங்கள் நீதிமன்றங்களில், அரசாங்க அலுவலகங்களில், மற்ற முக்கிய இடங்களில் மாட்டி மரியாதை செய்தனர்.

1840-ஆம் ஆண்டில் நெப்போலியனின் சவப் பெட்டி செயின்ட் ஹெலினா தீவிலிருந்து கொண்டுவர அனுமதிக்கப்பட்டது. ஆம்! பிரான்சு நாட்டுப் பெரு வீரன் நெப்போலியன் இறந்து பத்தொன்பது ஆண்டு கள்கழித்த பின்னர்தான் அவன் சவப்பெட்டி பிரான்சு நாட்டுக்கு வரமுடிந்தது.

1840-ஆம் ஆண்டு அக்டோபரில் பிரான்சு நாட்டுப் பெருமன்னன், பிரான்சு நாட்டு இளவரசனை இரண்டு கப்பல்களுடன் செயின்ட் ஹெலினு தீவிற்கு அனுப்பி, அங்கே துயிலும் பெருவீரன் நெப்போலியனை தன் நாட்டிற்கு கொண்டுவரப் பணித்தான்.

இளவரசன் செயின்ட்ஹெலினுவிற்குச் சென்ருன். நெப்போலியனின் கல்லறையைக் கண்டு கண்ணீரால் கழுவினுன். பின்னர் அப்பெருவீரன் சவப்பெட்டியைத் தோண்டி எடுத்தான். அந்தச் சவப்பெட்டியை பிரான்சு நாட்டு கொடியால் மூடினுன். அந்த ஐரோப்பிய சிங்கம் தூங்கும் சவப்பெட்டியை சுமந்து சென்றபோது மனித இதயம் படைத்த அனைவரும் கண்ணீர் வடித்தனர். மன்னனுக்குரிய மரியாதைகளுடன் அந்தச் சவப் பெட்டியை வழியனுப்பினர். கப்பலில் சவப்பெட்டியை வைத்தபின்னர் மரியாதை முழக்கம் செய்யும்போதும் அனைவரும் தங்கள் வருத்தம் கலந்த வணக்கத்தை அந்த மாவீரனுக்கு கடைசிமுறையாகச் செலுத்திப் பிரிந்தனர்.

கப்பல் பிரான்சு நாட்டை நோக்கி நகர்ந்தது. பிரான்சு நாட்டை அடைந்து சீன் நதிக்குள் கப்பல் நுழைந்தபோது, ஆற்றின் இரு மருங்கிலும் மக்கள் வரிசை வரிசையாய் அணிவகுத்து நின்றனர். பீரங்கி களும், துப்பாக்கிகளும் அணிஅணியாய் வைக்கபபட் டிருந்தன. கப்பல் ஆற்றினுள் நுழைந்தபோது அரச அணிவகுப்புகள் மரியாதை செய்தன; மரியாதை முழக் கங்கள் முழங்கின; மக்கள் கண்மாரி சொரிந்து ஆற்று நீரை உப்பு நீராக மாற்றிக்கொண் டிருந்தனர்.

அன்று பிரான்சு அரசாங்கம் மக்களுக்கு ஓர் அறிக்கை விடுத்தது. அதில், "நமது மதிப்பிற்குரிய பெருவீரன் நெப்போலியனின் உடலைப் பிரான்சுக்கு கொண்டுவர நமது மன்னர் கட்டளையிட்டார். அதன் படியே வந்துகொண் டிருக்கிறது./அந்த வீரனின் நினை

வுக்காக பெரியதொரு கட்டிடம் எழுப்ப வேண்டியது நமது முதற்கடமை. நமது நாட்டுப் பெருவீரர்களை அடக்கம் செய்த இடத்திலேயே நெப்போலியனையும் வைக்க ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. அவனுடைய கல்லறையை வந்து காண்பவர்களுக்கு உண்மையான வீரம் உண்டாகும் என்பது எங்கள் துணிவு. அவனின் வீரப் புகழைப் போலவே நாம் அவனுக்காக எழுப்பும் நினைவுக் கட்டிடமும் என்றும் நிலைத்திருக்க வேண்டும். இந்தப் பொன்னுளை நன்னுளென ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும்."

இந்த வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்த நெப்போலியனின் சவத்தைத் தாங்கிச் சென்ற கப்பலுக்குப் பின்னுல், பன்னிரண்டு கப்பல்கள் ஊர்வலமாகச் சென்றன. அப்போது ஒவ்வொரு கப்பலும் இருபத்தொரு குண்டுகளை வெடிக்கச் செய்து மரியாதை செய்தன. நெப்போலியனின் சவப்பெட்டியைச் சுற்றிலும் விளக்குகள் அணிவகுத்து நின்றன. மன்னர் சூடும் மணிமுடியும், செங்கோலும் அருகில் இருந்தன. இந்தக் காட்சியைக் கண்ட ஆண்களும், பெண்களும், முதியவரும், வாலிபரும், ஏழையும், பணக்காரனும் உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் தங்கள் நிலைகளை மறந்து நெப்போலியனின் வீர உடலுக்கு வணக்கம் செலுத்தினர்.

நெப்போலியனின் வீர உடல் சீன் ஆற்றின் வழியாக ஊர்வலமாக வருவது பற்றிப் பொதுநிலை மன்றத்தினர் பிரஞ்சு மக்களுக்கு ஒரு அறிக்கை விடுத்தனர். அந்த அறிக்கை:

"நகர மக்களே நமது மதிப்புக்குரிய மாவீரன் நெப்போலியனின் உடல் சீன் ஆற்றின் வழியாக ஊர்வலமாகச் சென்று தலைநகரை அடையும். இன்று நமது பெருவீரருக்கு நடைபெற விருக்கும் விழாவினைப் போல் நம் நாட்டில் என்றும் நடந்திருக்க முடியாது.

நெப்போலிய வீரனுக்கு நாம் பெரிதும் கடமை பட்டவர் களாவோம். நமது நன்றி அறிகலைச் செலுத்த இதை விடச் சிறந்த ஒரு சமயம் நிச்சயமாக வாய்க்காது. இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் நம்மைவிட்டுப் பிரிந்த நம் அன்புக்குரிய நண்பனை—தாய்நாட்டின் காவலனை மீண்டும் பெற்றிருக்கிறோம், உயிரற்று, நமது நாட்டை உலகறியச் செய்த அந்த உத்தமனை, பிரஞ்சு நாட்டின் வீரத்தை, உலகம் தன் தங்கக் கரத்தால் எழுதி கொண்டது 'சரித்திரம்' என்ற பொன்னேட்டில்! அந்தப் பெருமையை நம் நாட்டுக்களித்த நல்லவன், நாயகன் நெப்போலியன். அந்த சுத்தவீரனுக்கு, எல் லோரும் வணக்கம் செலுத்துங்கள்."

என்ற விளக்கத்தைத் தாங்கி வந்தது.

அறிக்கை வெளியானதும், நகர்ப்புறத்திலுள்ள மக்கள் ஆயிரக்கணக்கில் கூடிவிட்டனர், தங்கள் வீரத் தலைவனைக் காண. ஆற்றின் இரு மருங்கிலும் மக்கள் உட்காருவதற்காகப் பலகைகள் அமைக்கப்பட்டன. பட்டுப்பாய்கள் விரிக்கப்பட்டன. சிலர் கோபுரங்களை எழுப்பினர்—சிலர் அதில் நெப்போலியனின் வெற்றி களைப் பொறித்தனர். எப்பக்கம் திரும்பினாலும் கொடி களும் தோரணங்களும் காட்சி யளித்தன.

நெப்போலியனின் சவத்தைச் சுமந்துவரும் கப்பலை எதிர்நோக்கி மரியாதை செய்து வரவேற்க அலங்காரங் கள் செய்யப்பட்ட இரு பெரும் கப்பல்கள் வந்தன. நெப்போலியனுடன் போர்க்களத்தில் கலந்து கொண்ட பிரஞ்சு வீரர்கள் ராணுவ உடையணிந்து போர்முழக் கம் புடைசூழ தங்கள் தலைவனை எதிர்நோக்கி வரவேற்க வந்தனர். தங்கள் தலைவனின் சவப் பெட்டியைக் கண்டு கண்ணீர் மல்கினர். பீரங்கிகளின் முழக்கம் ஒருபுறம், மக்கள் ஆரவாரம் ஒருபுறம். இவ்விதம் எங்கும் பேரொலி நிரம்பியது.

மக்கள், இறந்துபோன நெப்போலியன் உயிர் பெற்று எழுந்து வந்திருக்கிறார் என எண்ணியே வரவேற்றனர். அந்தப் பெருவீரரின் சவத்தைக் கண்டு மக்கள் உணர்ச்சி வயமாகி மனங்கலங்கி நின்றனர். மக்கள் அனைவரும் காணும் பொருட்டுக் கப்பல்கள் மிகவும் மெதுவாகச் செலுத்தப்பட்டன. வீரர்கள் நெப்போலியனின் காலடியில் மலர்தூவி "மன்னர் வாழ்க" என்று வாழ்தினர்.

கப்பல்கள் தலைநகரை அடைந்தன. நெப்போலியன் சவப் பெட்டியைக் கப்பலிலிருந்து இறக்கும்போது, மணிகள் ஒலித்தன; சங்குகளும், முரசுகளும் முழங்கின. அணிவகுத்து நின்ற வீரர்கள் துப்பாக்கிகளைத் தாழ்த்தி ராணுவ வணக்கம் செலுத்தினர். காவற்படை வீரர்கள் நூற்றொரு குண்டுகளைச் சுட்டு மரியாதை செலுத்தினர்.

சவப் பெட்டியைப் பதினறு குதிரைகள் பூட்டிய தேரில் ஏற்றினர். அந்தத் தேர் பொன் தகடுகளால் அழகு செய்யப்பட் டிருந்தது. பாரீஸ் பட்டணத்தின் கல்லறையை நோக்கித் தேர் நகர்ந்தது. சுமார் நான்கு மைல் நீளத்திற்கு மக்கள் ஊர்வலம் நீண்டிருந்தது. கல்லறையில் அரசனும் தன் குடும்பத்துடன் காத்திருந்தான். அரசன் கட்டளைப்படி படைத் தளபதி நெப்போலியனின் பட்டாக்கத்தியை சவப் பெட்டியின் மீது, வைத்தான். முந்நூறு இசைக் கருவிகள் ஒலித்தன. நெப்போலியனின் விருப்பப்படியே அவன் உடல் பிரஞ்சு மண்ணிலே மிகச் சிறப்புடன், மரியாதையுடன் அடக்கம் செய்யப் பட்டது. இந்த அடக்க விழா நன்கு முடிந்தது.

அந்த இடத்தில் நினைவு மண்டபம் எழுப்பத் தீர்மானித்தனர். இந்த நாளை ஆண்டுதோறும் "நெப்போலி

யன் நினைவு விழா" என்ற பெயரால் கொண்டாடத் தீர் மானித்துச் செயல் முறையில் கொண்டுவந்தனர்.

o o o

"அப்பா நேற்று ஊர்வலத்தில் கலந்துகொண்டோ மல்லவா?"

"ஆமாம் அதைப் பற்றி என்ன?"

"அந்த பெருமதிப்புக்குரிய நெப்போலியன் யார்? அவன் வரலாறு என்ன? என்பதை விளக்க வேண்டு கின்றேன்."

"மகனே நமது மரியாதைக் குரிய மாவீரனைப் பற்றி நானே உனக்குச் சொல்லி யிருக்க வேண்டும். நீயே விரும்பிக்கேட்டது குறித்து நான் மகிழ்ச்சி அடை கின்றேன். ஆனல், நான் சொல்லப் போவது ஒரு பாட்டிக் கதை என்று எண்ணிக் கேட்டுவிடப் போகி ருய். கதை கதை என்று கதை பேசியே காலங் கழிப்ப வர்கள் பட்டியலில் நீ சேரக் கூடாது"

"அப்பா கதை கேட்பது தவருன செய்கையா?"

"கதை கேட்பது தவறு என்ரு நான் சொன் னேன்? இல்லை அப்படிச் சொல்லவில்லை. கதை சொல் பவர்களில் பல இரகங்கள் உண்டு! அதைப் போலவே கதை கேட்பவர்களிலும் பல இரகங்கள் உண்டு!"

"சற்று விளக்கமாய் கூறுங்கள் தந்தையே"

"பொழுது போக்குவதற்காக கதைகள் சொல்வார் கள் சிலர். பணம் பறிப்பதற்காகக் கதை சொல்லுவார் கள் சிலர். கதை எழுதிப் பணம் சம்பாதிப்பார்கள் சிலர். இதைப் போலவே, "பொழுது போகவில்லை ஏதாவது சொல்லுங்கள்" என்று சிலர் கூறுவர். பரலோகக் கதியை அடைவதற்காகப் பக்தி கதைகளைக் கேட்பர் சிலர். இதைப் போல பல ரகங்கள் உண்டு! கதை சொல்லுபவர்கள், கேட்பவர்கள் இவர்களின் எண்ணங்

களும் நோக்கங்களும், பணம்—பதவி—காலப்போக்கு இவைகளையே அடிப்படையாகக் கொண்டவை."

"அப்பா! எல்லோரும் அப்படித்தான் என்று நிச்சயமாக கூறமுடியுமா?"

"முடியாது தான். ஆனல், பெருவாரியானவர்கள் நான் சொன்ன நோக்கங்களையே தெரிந்தோ, தெரியாமலோ, அடிப்படையாக்கிக் கொண்டிருக்கின்றனர்."

"அப்படி யென்றால் உங்களுடைய நோக்கம் என்ன?"

"கதைகளைச் சொல்லுபவர்கள் கேட்பவர்களின் கருத்துகளை அழகுபடுத்துதல் வேண்டும். கதைகளை எழுதுபவர்கள் அந்தக் கதைகளைப் படிக்கும் மக்களின் அறிவு விளக்கைத்தூண்டி விடவேண்டும். நூல்கள் மங்கிக் கிடக்கும் மக்களின் அகக்கண்களுக்கு நன்றாக, தெளிவாக பொருள்களைக் காட்டும் கண்ணாடியைப் போலிருக்க வேண்டும். கதைகளை சொல்பவர்களும் எழுதுபவர்களும் மக்களுக்கு உண்மையை, நேர்மையை, நீதியை, கற்பிக்கும் ஆசிரியர்களாக இருக்கவேண்டும். கதைகளைக் கேட்பவர்களும், படிப்பவர்களும், உண்மையின் தோழனாய், நேர்மையின் நண்பனாய், நீதியின் காதலனாய், இருக்கவேண்டும். இந்த ஒரே ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டால் போதும். நாடு சீர்படும், உலகமும் ஒழுங்கு படும். இதைவிட சிறந்ததோ உயர்ந்ததோ நிச்சயமாக இல்லை.

"உண்மை, நீதி, நேர்மை இவைகள்தாம் உலகில் உயர்ந்தவை என்றுதானே கூறுகின்றீர்கள்."

"ஆம்! நிச்சயமாக, உண்மை, நீதி, நேர்மை, இவைகளால் தீர்த்து வைக்க முடியாத பிரச்சனையே உலகில் கிடையாது. இந்த மூன்றும் குடி கொண்டிருக்கும் மனிதனிடம், நாட்டினிடம் நிச்சயமாக களங்கம் இருக்காது, சண்டை சச்சரவுகள் இருக்காது பொய்

பொல்லாங்குகள் இருக்காது. ஆகவே இந்த நல்ல தன்மைகள் உலகெங்கும் பரவவேண்டும் என்பது என் நோக்கம், குறிகோள், ஆசை; எண்ணம் எல்லாம்!

"அப்பா! உங்கள் புத்திமதிகளுக்கு நன்றி! நல்ல முறைதான் தாங்கள் சொல்வது. ஆனல் சீக்கிரம் பரவமுடியாத—சங்கடமான—கஷ்டமான—ஒரு காரியம்!"

"இவ்விதம் நீ மட்டுமா சொல்கிருய்? அறிஞர்கள், படித்தவர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கின்றனரே அவர்கள் கூடத்தான் இவ்விதம் கூறுகின்றனர். "ஏன்" என்று கேட்டால், எந்தக் காரியத்தையும் முயன்று பாராமல், மனித பலத்தின் தன்மையை உணராமல் தன்னைப் பலவீனனுகக் கருதிக்கொண்டும் பயந்த மனம் படைத்த வர்கள். அதனுல்தான் இதில் தைரியமாக முன் வந்து பணியாற்ற விரும்புவதில்லை. ஆனல் நெப்போலியன் இந்த இலக்கணத்துக்கு மாறுபட்டவன். ஒரே மனிதன்! ஆனல் அவனை கண்டு - இல்லை; அவன் பெயரைக் கேட்டு ஐரோப்பிய வல்லரசுகள் பயந்து நடுங்கின. எப்படி முடிந்தது அவனுல்? சிந்தித்துப் பார். அப்போது தான் மனித பலம் சிறிதாகிலும் தெரியும் உனக்கு."

"அப்பா நெப்போலியனின் வரலாற்றை கூறுங்கள் என்று கேட்டேன். அவன் இந்த ஆண்டில் பிறந்தான். இன்னின்ன காரியங்கள் செய்தான் இத்தனையாவது ஆண்டில் இறந்தான் என்று கூறிவிட்டிருந்தால் நான் கேட்டுத் தெரிந்து கொள்வதுடன் தான் நின்று விட்டிருப்பேன். ஆனல் கதையை சொல்லும் முன் எத்தனையோ கேள்விக்குறிகளைப் போட்டு சிந்தனையைக் கிளரி, இத்தனை நாள் என்னுள் அடங்கிக் கிடந்த எதோ ஒரு உணர்ச்சியைத் தூண்டி விட்டீர். மனித ஆற்றல், நீதி, நேர்மை,

உண்மை இவைகளைப் படித்திருக்கிறேன் — கேட்டிருக்கிறேன். ஆனால் உணரவில்லை என்பதை இன்று உணர்கின்றேன். கதைகள் எப்படி சொல்வது, எப்படி கேட்பது என்பதையும் தெரிந்துக்கொண்டேன். பள்ளியாசிரியரிடம் கற்றுக்கொள்ளாத பாடம் இன்று கற்றுக் கொண்டதற்காக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். தயவுச் செய்து தாங்கள் அந்த மாவீரன் நெப்போலியனின் வீர வரலாற்றை நேர்மையுடனும்-நீதியுடனும், தொடர்பு படுத்தி உண்மையை விளக்கிக் காட்டுங்கள். நான் என்னால் முடிந்த வரை நீதியாளனாக, நேர்மை விரும்பியாக, உண்மை விளம்பியாக இருக்க முயல்கின்றேன்."

"மகனே! எந்த உணர்ச்சியோடு ஒருவன் நெப்போலியனின் வீரக் கதையைக் கேட்க வேண்டுமோ அந்த உணர்ச்சி உன்னிடம் இருப்பது கண்டு மகிழ்கின்றேன். கதையை தொடர்கின்றேன் கவனத்தோடு கேட்டு, கருத்தில் பதிய வைத்துக் கொள்!"

"மக்களை மதியாதவர்களை—மமதையாளர்களை—இன்னும் உயிருடன் விட்டுவைப்பதா? உழைப்பவர் நாம்; உண்டு உப்பி உல்லாசப் பொழுது போக்குவது அவர்களா? கஞ்சியின்றி-கட்டக் கந்தையின்றி-எலும்பெல்லாம் வெளியில் தெரிய - கண்கள் குழி விழுந்திருக்க - வயிறு ஒட்டிக் கிடக்க வாழ்கின்றோம் நாம். இல்லை, சிறுகச் சிறுக செத்து மடிந்து கொண்டிருக்கிறோம் நாம். சித்திரவதை செய்யப் படுகின்றோம், செல்வந்தர்களால்! அரசபீடம் அலட்சியம் செய்துவிட்டது நம்மை. இந்த நிலை இன்னும் வளரக்கூடாது. ஒன்று அவர்களேவாழட்டும், அல்லது நாம் வாழ்வோம். புறப்படுவோம் "புல்லை தின்" என்று கூறிய புல்லனை பொசுக்குவோம். நாய்களுக்கு நல்லுணவளித்து மக்களை புறக்கணித்த-சுட்டுத்தள்ளிய அரக்கர்களை அழிப்போம் புறப்படுங்கள்! இன்றே புறப்படுங்கள்! கொல்

லுவோம் அந்த கொடியவர்களை - குத்துவோம். அந்த சித்தமற்றவர்களை! வெட்டித் தள்ளுவோம். அந்த வீணர்களின் தலைகளை! வீழ்த்துவோம் அவர்கள் போக வாழ்வினை! சிதைப்போம் சிறுமதியாளரின் சிங்கார வாழ்வை. இவ்விதம் செய்வதன் மூலம் நமது வாழ்வை நிலைநிறுத்திக் கொள்வோம் வாரீர்! கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு வாரீர்! புரட்சிப் போர்க்களத்தில் அணிவகுக்க வாரீர்! ஆண்களே வாரீர்! அம்மையீர் வாரீர்! வீரரே வாரீர்! வீணருக்கு பாடம் கற்பிக்க வாரீர்!"

என்ற கூக்குரல் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரஞ்சு நாட்டில் ஒவ்வொரு ஏழை மக்கள் வாயிலிருந்தும்வெளிவந்தன. இதன் விளையாக ஏழைமக்களின் தடிகளும்—ஆணவம் பிடித்த பிரபுக்களின் துப்பாக்கிகளும் ஒன்றை ஒன்று மோதிக் கொள்ளும், பல தலைகள் தரையிலே உருளும். இரத்தம் ஆறாகப்பெருக்கெடுத்து ஓடும்.

இந்தப்போர் துப்பாக்கிக்கும்,கலப்பைக்கும் நடந்த போர்! ஒட்டிய வயிற்றுக்கும், உப்பின தொந்திக்கும் நடந்த போர்! பட்டினிப் பட்டாளத்திற்கும், பளபளக்கும் அணிகள் அணிந்த பிரபுக்களுக்கும் நடந்த போர். இதுதான் சரித்திரப் புகழ்பெற்ற பிரஞ்சுப் புரட்சி.

இதன் முடிவு மன்னர் ஆட்சி மடிந்து மக்கள் ஆட்சி நிலைத்தது.

ஆத்திரத்தால் நிறுவப்பட்ட இந்த ஆட்சியை அமைதியாக நிர்வகிக்க முடியாமல் அவதியுற்றனர். மக்களாட்சியின் தலைவர்கள்.

அனுபவம் இல்லாதவர்கள், அறிவில்லாதவர்கள், ஒழுக்கம் தெரியாதவர்கள், ஆத்திரக்காரர்கள், ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தனர். இந்த ஆட்சியில் அகப்பட்ட மக்கள், தங்கள் ஆட்சியை சிறப்படைய செய்ய,

அமைதியும், இன்பமும் நிலைபெறச் செய்ய தகுதியும் திறமையுமுள்ள ஒருவன் தோன்றமாட்டானு என்று ஏங்கிக் கொண்டிருந்தனர். அந்தக் காலத்தில் அவர்கள் எண்ணப்படி தோன்றிய பெருவீரன்தான் நெபோலி யன்

இவன் தோன்றிய பிறகுதான் பிரஞ்சுநாடு சற்று நிம்மதியாக இருக்க முடிந்தது.

"அப்பா அந்த வீரன் பிறந்த ஆண்டு எது? அவன் தாய் தந்தையர் பெயர் இவைகளை........"

"சொல்ல வேண்டும் அவ்வளவுதானே! சொல்கி றேன் கேள்!"

1769-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் நாள் பிறந்தான். இந்தப் பெருவீரனை பெற்றெடுக்கும் பாக்கியம் "சார்லஸ் போனபார்ட்டி, லதீதாரமோலி" என் னும் தம்பதிகளுக்கே கிடைத்தது. இந்தப் பெற்றோர் களின் இரண்டாம் மகன் நெப்போலியன்.

"இவன் பிறந்த ஊர் பெயர்?"

"கார்சிகா (Corsica) என்னும் தீவின் தலைநகரான அஜாகியோ"

"அஃது இருக்கும் இடம்"

"கார்சிகா எனும் தீவு மத்தியதரைக் கடலில் இருக் கிறது. பிரஞ்சு நாட்டின் கடலோரத்திலிருந்து நூறு மைலுக் கப்பாலுள்ளது. அந்தத் தீவு நெப்போலியன் பிறப்பதற்கு முன்வரையில் இத்தாலிக்கே உரியதா யிருந்தது. 1767-ஆம் ஆண்டுதான் அந்தத் தீவு பிரஞ்சு மன்னருக்கு உரிமையாக்கப்பட்டது. நெப்போலியன் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்திருந்தால் அவன் ஒரு இத்தாலியனுக இருந்திருப்பான். ஆனல் சூழ்நிலை அவனை பிரஞ்சுக்காரனுக்கியது.

நெப்போலியனின் தந்தை இத்தாலிய வக்கீல்; நெப்போலியன் பிரஞ்சு நாட்டு வீரப் பெருமகன். விந்தையான விஷயம்!

நெப்போலியனின் பெற்றோர்கள் பதிமூன்று குழந்தைகளை பெற்றனர். அவற்றில் எட்டுக் குழந்தைகள் மட்டுமே உயிர்வாழ முடிந்தன. மூத்தவன் பெயர் ஜோஸப், இரண்டாம் மகன் பெயர் தான் நாம் ஆராய விரும்பும் நெப்போலிய வீரன்!

நெப்போலியனின் தந்தையான சார்லஸ் போனபார்ட்டி வழக்கறிஞராக பணியாற்றி தன் குடும்பத்துடன் சுகமாகவே வாழ்ந்து வந்தார். நெப்போலியன் தாய் வயிற்றில் கருவுற்றிருந்த சமயத்தில் பிரஞ்சுப் படைகள் கார்ஸிகாவில் புகுந்து போர் முழக்கம் செய்தன. அப்போது தன் தாய் நாட்டின் நன்மைக்காக சார்லஸ் போனபார்ட்டி தன் தொழிலையும் உதறித் தள்ளிவிட்டு வாளேந்தி போர்க்களஞ் சென்றார். அவர் பயோலி என்னும் தளகர்த்தரிடம் படைவீரராகச் சேர்ந்து பணியாற்றினர். கணவன், வக்கீல் தொழிலை விட்டு வாளேந்தி போர்களம் சென்றபோது கருவுற்றிருந்த மனைவியாகிய 'லதீமா'வும் அவரைப் பின் தொடர்ந்து சென்றாள். தன் கணவர் போர் புரிந்த போது அவருக்கு பணி செய்தும் போர் நிகழ்ச்சிகளைக் கண்டும், அணிவகுப்புகளைப் பார்த்தும், பழக்கப்பட்டிருந்தாள். அந்த வேளையில் வீர நெப்போலியன் அவள் வயிற்றில் கரு உருவிலிருந்தான். இவ்வித வீர நிகழ்ச்சிகளைக் கண்டும், அனுபவித்தும் வந்த தாயின் உணர்ச்சிகள் அந்த கருவில் பாய்ந்து அதை வளர்த்து வந்தது போலும்! இதனால்தான் நெப்போலியன் பெரு வீரனாய் திகழ்ந்தான் போலும்! இந்த யுத்தத்தில் அந்தத் தீவு பிரஞ்சு மக்கள் வசம் சிக்கிவிட்டது. அதன் பிறகுதான் நெப்போலியன் பிறந்தான்.

சிறிது காலத்திற் கெல்லாம் நெப்போலியனின் தந்தை இறந்து விட்டார். தாய் தான் பெற்ற எட்டுக் குழந்தைகளுடன் அந்தத் தீவில் அவருக்கு இருந்த உயர்ந்த பண்பாட்டாலும், மன தைரியத்தாலும் வறுமை நோய்வாய்ப்பட்டும், வாழ்ந்து கொண்டிருந்தாள்.

நெப்போலியனின் அண்ணன் பெயர் ஜோசப் என்று முன்னரே குறிப்பிட்டேன். மற்றும் ஆறு உடன் பிறந்தவர்களின் பெயர் லூசியன், லூயி, ஜரோமி, எலிஜா, பாலன், கரோலீன் என்பன. தன் னுடன் பிறந்தவர்கள் மீது அதிக அன்புடையவன் தான் நெப்போலியன். ஆனல் அவன் எல்லோரிடமும் கூடி வீண் விளையாட்டுகளில் கலந்து கொள்ளமாட் டான். எப்போதும் தனித்திருக்கவே ஆசைப்படுவான்; ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிய வண்ணமே தன் ஏகாந் தத்தைக் கழிப்பான். பரந்த கடல், விரிந்த விண்; இவைகளை மணிக்கணக்காக ஆச்சரியத்தோடு பார்த் துக் கொண்டிருப்பான். தன் ஏகாந்தம் கலைந்தால் உடனே புத்தகங்களுடன் உறவு கொள்வான். அதி லும் சற்று வெறுப்புத் தட்டினல், தன் பெற்றோர்க ளிடம் போர் வரலாறுகளையும், வீரர்களின் வரலாறு களையும் கேட்டுத் தெரிந்து கொள்வான்.

சிறுவயது முதல் அவன் எதையும் கண்டிப்பாக பேசியே பழகினன். நியாயத்தின்படியே நடப்பவனாக வும் திகழ்ந்தான்.

நெப்போலியன் பிறர் செய்த குற்றத்திற்காகத் தண்டனை அனுபவித்திருக்கிறான்.

ஒருநாள் வேறு ஒரு குழந்தை செய்த குற்றம் சிறு வன் நெப்போலியனின் மீது சாட்டப்பட்டது. ஆனல் நெப்போலியன் குற்றம் செய்த குழந்தையைக் காட்டிக் கொடுக்கவில்லை. தண்டனையும் ஏற்றுக் கொண்டான். அத்துடன் மூன்று தினங்கள் பட்டினி கிடக்கவேண் டியுமிருந்தது. இவைகளையும் ஏற்றுக் கொண்டான்.

அஞ்சாமல், தளராமல்! ஏன் குற்றவாளியைக் காட்டிக் கொடுக்க வில்லையென்றால், "நான் அந்தக் குற்றவாளியைக் காட்டிக் கொடுத்தல் அவர்கள் அளிக்கும் தண்டனைகளைக் கண்டு பயந்துவிட்டேன் என்று கருதிவிடுவார்கள். அதற்காக நான் காட்டிக் கொடுக்கவில்லை" என்றான் அந்த வீர நெஞ்சம் படைத்த சிறுவன்.

அவனுக்கு தோல்வி என்ற வார்த்தையைக் கேட்கவே பிடிக்காது! வெற்றி வீரம் என்பவைகள் தான் அவனுக்கு விருப்பமான சொற்கள்.

ஒரு நாள் பள்ளிக்கூடத்தில் விளையாட்டுச் சண்டையொன்று நடைபெற்றது. அதில் நெப்போலியன் தோல்வியடையும் படையில் நடிக்க வேண்டி யிருந்தது. நெப்போலியன் தயங்கித் தயங்கி நின்றான். இவன் தயக்கத்தின் காரணம் தெரிந்த ஆசிரியர் அவனை வெற்றிப் படையில் நடிக்கச் செய்தார் சந்தோஷத்துடன் நடித்து வெற்றி பெற்றான். விளையாட்டிலும் தோல்வியை விரும்பாத சுத்த வீரன் அவன்.

போர் வீரர்களின் அணிவகுப்பை கண்டவுடன் அவனுள்ளே தூங்கிக் கிடக்கும் வீரஉணர்ச்சி விறுவிறுப்புடன் வேலை செய்யும். அவன் கண்களுக்கு அழகு செய்வது போர் வீரர்கள் அணியும் உடை; அவனை மகிழச் செய்வன போர்க்கருவிகள்; அவன் விரும்பி விளையாடும் விளையாட்டுச் சாமான்கள் மரத்தால் செய்த துப்பாக்கி; ஈட்டி, வாள் முதலியன.

உண்மை பேசுதல், ஏழைகளிடம் இரக்கம் காட்டுதல், பணிவு காட்ட வேண்டியவர்க ளிடத்தில் பணிவு காட்டுதல் முதலிய நல்லொழுக்கங்களை நெப்போலியனுக்குப் போதித்தாள் அவன் தாய்.

நெப்போலியனுக்கு வயது பத்து. அவன் வசித்து வந்த தீவுக்கு பிரான்சிலிருந்து கோண்டுமோர்போ என்பவர் கவர்னராக வந்தார். அவர் நெப்போலியனின்

தாயின் நல்ல பண்புகளையும், அற ஒழுக்கத்தையும் கண்டு அந்த குடும்பத்துடன் தொடர்பு கொண்டார். அப்போது பத்து வயதுடைய பாலன் நெப்போலியன் அவர் கண்களுக்கு எதிர்கால பெருவீரனைகத் தெரிந் தான். ஆகவே அவருடைய பேருதவியால் நெப்போலி யன் தான் வசித்துவந்த தீவைவிட்டு தாயையும், தன் னுடன்பிறந்தவர்களையும் பிரிந்து பாரீஸ் பட்டணத்திற் கருகிலுள்ள "பிரயன்" (Brinne) என்னும் இடத்தி லுள்ள இராணுவக் கல்விச்சாலையில் மாணவனைகச் சேர்ந்தான்.

அந்த இராணுவப் பள்ளியில் படிக்கும் மாணவர் கள் டாம்பிக வாழ்வு விரும்பிகள். செல்வந்தர்கள். அத்துடன் கார்ஸிகாத் தீவுவாசிகள் என்ருல் அலட்சிய மாகக் கருதும் இழிகுணம் படைத்தவர்கள். ஆகவே டம்பமற்ற — டம்பத்தை விரும்பாத — செல்வமற்ற நெப்போலியனை கேவலமாகக் கருதினர். அவனை, "அந்நியன்" என்று எண்ணி அலட்சியப்படுத்தி வந்தனர்.

பிரபு வீட்டுப் பிள்ளைகள் படிக்கும் இராணுவப் பள்ளியில் ஏழைமகன் நெப்போலியன் படித்தால் எப்படியிருக்கும்? நெப்போலியன் தன் தாயால் நல்ல முறையில் பழக்கப்படுத்தப்பட்டவ னுகையால் அவர் களின் செயல்களை துச்சமாக மதித்து வந்தான்.

"இந்த பிரஞ்சு மாணவர்கள்மீது எனக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இவர்களுக்கு நான் இன்றில்லை, என்ரு கிலும் ஒரு நாளைக்கு என்னல் முடிந்த அளவு தொல்லை கொடுப்பேன்" என்று கூறிக்கொண்டான் ஒருநாள். இந்த எண்ணத்திலிருந்துதான் நெப்போலிய னுக்கு அரசியல் கொள்கை ஏற்பட்டது என்று கூறு வது பொருந்தும்.

அவன் ஒரு அரசியல் தருமத்தை தன் உள்ளத் தில் அன்றே உருவகப்படுத்தி அதை வளர்த்துக்

கொண்டே வந்தான். அஃது என்னவென்ருல், "மக்க ளாய் பிறந்தவர் யாராயிருந்தாலும் பிறப்பால், பணத் தால் உயர்வு தாழ்வின்றி எல்லா பதவிகளையும் எல்லோ ரும் அடையவேண்டும். அஃதே என் அரசியல் தருமம்" என்பதாகும்.

இந்த எண்ணங்களுடன் கருத்தூன்றி தன் பாடங் களைப் பயின்ருன். மற்ற மாணவர்களுடன் பழகாமல் போர் முறைகளையும், இராணுவ நுணுக்கங்களையும் தனித்திருந்து சிந்திப்பான். இந்தக் காரணங்களால் அந்த இராணுவப் பள்ளியில் மிகவும் திறமையுள்ள மாணவனகச் சிறந்து விளங்கினன். இராணுவ சம்பந் தப்பட்ட இதர கலைகளான சரித்திரம், ஆட்சிமுறை தத்துவம், பூகோள சாத்திரம், தேசப்படங்கள் மற்ற விஷயங்கள் முதலியனவற்றிலும் பெரிதும் சிறந்து விளங்கினன்.

நாள்தோறும் புதப்புது விஷய நுணுக்கங்களைக் கண்டறிவான். அப்படி புது விஷயங்களை ஒருநாளைக்கு காணவிட்டால் அந்த நாளை வீணள் என்று கூறுவான். அவன் கண்களை மூடிக்கொண்டு சிந்தனைக் கடலில் மூழ்கியிருக்கும்போது அவன் மனக்கண்களில், புளு டார்க்கு எழுதிய வீரர்களின் வரலாறு, கிரீஸ், ரோம் முதலிய நாட்டு வீரச்சரித்திரங்கள் படித்த யுத்த தந்திரங் களின் இரகசியங்கள் தோன்றி அவனுக்குப் பல உண்மைகளைக் கற்பிக்கும். இவ்வித பயிற்சிகளினல் அவனுக்கு மனேபலம் விருத்தியடைந்தது. கூர்மையான கண்களுடன், அரிய விஷயங்களை பெரியவர்கள் வியக் கும்படி சொல்லும் ஆற்றலுடைய நெப்போலியன் மெலிந்த உருவில்தான் காட்சி அளித்தான். அதற்கு காரணம் அளவுகடந்த அபாரமான மூளை வேலையே யாகும்.

"பள்ளியில் செய்த செயற்கரிய காரியங்கள் பல. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றேன்."

"அப்பா! நெப்போலியன் மூர்க்க குணம்படைத்த முரட்டு வீரனாக இருப்பான் என்று நான் எண்ணினேன் ஆரம்பத்தில். ஆனால் அவன் ஒழுக்கத்தின் உறைவிடமாகவும், அன்போடு திகழ்கின்றானே! தொடருங்கள் பள்ளியில் செய்த பால லீலைகளை!"

"மகனே! இராணுவப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு கொஞ்சம் நிலம் கொடுப்பார்கள். அதை அவர்கள் கல்வி பயிலும் வரையில் எப்படி வேண்டுமானாலும் உபயோகிக்கலாம்." அதுபோலவே நெப்போலியனுக்கும் மற்றவர்களுக்கும் அளிக்கப்பட்டது. அதை மற்ற மாணவர்கள் வீணாக்கி வைத்திருந்தனர். ஆனால் நெப்போலியன் தன் நிலத்தை ஒரு சிறு அழகிய தோட்டமாகச் செய்து அதன் மத்தியில் தான் படிப்பதற்காக ஒரு அறையும் அமைத்துக் கொண்டான்.

இந்தக் கல்லூரியில் நெப்போலியன் ஐந்தாண்டுகள் வரை படித்தான். அதாவது 1779 முதல் 1784 வரையில் கடைசி ஆண்டில் குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

1784-ஆம் ஆண்டு மழை காலத்தில் கடும் பனி பெய்து துன்புறுத்திக்கொண்டிருந்தது. ஆகவே எவரும் வெளியில் செல்ல முடியவில்லை. ஏதாவது விளையாட்டுகளில் ஈடுபட்டு பொழுது போக்க மாணவர்கள் விரும்பினர். அப்போது நெப்போலியன் ஒரு விளையாட்டை விளையாடி காட்டினான்.

பனிக்கட்டிகளால் ஒரு கோட்டையைக் கட்டி முடித்தான், மாணவர்களின் துணைகொண்டு. இவன் தான் கோட்டையை எப்படி அமைக்க வேண்டும், வழி எப்புறம் இருக்க வேண்டும் என்பவைகளை யெல்லாம் சொல்லி மேற்பார்வை பார்த்து சிறந்த முறையில் கட்டி முடித்தான். அதன்பின்னர் அங்கிருந்த மாணவர்களை இரு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவினரை

கோட்டைக்குள்ளிருந்து தற்காத்துக் கொள்ளும்படி பணித்தான். அடுத்த பிரிவினரை கோட்டையை முற்றுகையிடச் செய்தான். இந்த இரு படைகளுக்கும் நெப்போலியனே தலைமை தாங்கி திறம்பட நடத்தினன். இந்த விளையாட்டு யுத்தம் பல வாரங்கள் வரை நடைபெற்றது. இந்த யுத்தத்திற்கு வெடிகுண்டு கள் உண்டு. அவை யனைத்தும் பனிக்கட்டிகளே. இந்த வீர விளையாட்டைக் காண நகர மாந்தர் கூடி பார்த்து மகிழ்வர். இவ்வித வீர மிக்கப் போர்த்தலைவ னுகவே அவன் சிறுவயதில் விளையாடிப் பழகிக் கொண்டான்.

இராணுவக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போதுதான் நெப்போலியனின் தந்தை மாண்டார். தந்தை யிறந்த செய்தி கேட்டு மிகவும் வருந்தினன் மகன்.

“அன்புள்ள அம்மா! தங்கள் உதவியை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம். தங்களுக்கு எங்கள் மீதுள்ள அன்பு எல்லை கடந்தது என்பது நன்கு அறிந் திருக்கிறேன். தந்தை பிரிந்துவிட்டார் மனம் தளரா தீர்கள். நானும் தங்களைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டமைக்கு வருந்துகின்றேன். தந் தையை இழந்தபின் தாங்கள் வேறு ஆதரவின்றி குடும்பத்தை சிக்கனமாக நடத்தி வருகிறீர்கள். எங்கள் நல்வினை தங்களைத் தாயாகத் தந்தது. இன்பதுன்பங் களைச் சமமாகக் கொள்ளும் மனம் படைத்த தங்களுக்கு நான் என்ன சொல்லப் போகிறேன். தங்களின் சொற் படி நடந்து எங்கள் நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். என் தாய்போல் உத்தமி கிடைக்க மாட்டாள் என்று உலகுக்குச் சொல்லுகிறோம். நோயற்று தாங்கள் வாழவேண்டும் இஃதே எங்கள் உள்ளக் கிடக்கை” என்னும் கருத்துள்ள கடிதத்தை தந்தையார் இறந்தபின் தன் தாய்க்கு எழுதி ஆறுத லளித்தான்.

நெப்போலியனின் தாய் தன் மகன் நல்லமுறையில் படித்து உயர்வடைகின்றான் என்பதை கேட்டுப் பூரித்தாள். ஆசிரியர்கள் நெப்போலியனைப் பற்றி நன்றாக புகழ்ந்து கூறியுள்ளனர்.

ஒரு ஆசிரியர் "நல்ல பழக்க வழக்கங்களுடையவன் பணிவாக நடக்கும் பண்பினன், கணக்கில் வல்லோன்; பூகோளத்திலும் சரித்திரத்திலும் நிபுணன். வன்" என்று கூறியிருக்கிறான்.

மற்றொருவர் "விளையாட்டை விரும்பாதவன், அறிவாளி, புத்தகமும் கையுமாகவேதான் நான் அவனைப் பார்க்கிறேன்; எதையும் கருத்தூன்றி செய்பவன். இராணுவ இலட்சணங்களுக்கு மிகவும் தகுதி உடையவன் திறமைசாலி" என்றார்.

இவ்விதம், எல்லோராலும் பாராட்டப் பெற்றவன்.

பள்ளி விடுமுறை காலங்களில் தான் பிறந்த இடமாகிய கார்ஸிகாத் தீவிற்குச் சென்றுவருவான். அந்தத் தீவில் பயோலி என்னும் போர் வீரன் ஒருவன் இருந்தான். அவன் நெப்போலியனின் தந்தையின் நண்பன். அந்தத் தீவு பிரஞ்சுக்காரரிடம் சிக்குவதற்கு முன் இத்தாலியின் பக்கம் நின்று போர் புரிந்தவன். அந்தத் தீவை பிரஞ்சுகாரர்கள் கைப்பற்றிய பின்னர் அவன் இங்கிலாந்துக்கு நாடுகடத்தப்பட்டான். சிறிது காலம் இங்கிலாந்தில் தங்கியிருந்த பின்னர் மறுபடியும் கார்ஸிகா தீவுக்கு போக அனுமதி அளிக்கப்பட்டது. அதன் பிறகு அந்த விருத்தாப்பிய வீரன் தன் இறுதி காலத்தை அங்கு கழித்து வந்தான். அவனிடம் நெப்போலியனுக்குப் பெரு மதிப்புண்டு! அவனை யுத்த சம்பந்தமாகப் பல கேள்விகள் கேட்பான். பயோலியும் நெப்போலியனின் குணப் பண்புகளைக் கண்டு அவன்பால் அன்பு செலுத்தி யுத்த ரகசியங்களை கூறுவான்.

ஒருதடவை "நீ உலகம் மதிக்கும் பெருவீரர்கள் பட்டியலில் நிச்சயமாக வீற்றிருப்பாய்" என்று கூறி ஞன்.

தன் மனதில் எழுந்தவைகள் உண்மையாயின் அதனை மாற்றியோ, மறைத்தோ பேசமாட்டான். தனக்கு நியாயமென்று பட்டதை தெளிவாக அஞ்சாமல் கூறுவான். பள்ளியில் பலமுள்ள மாணவர்கள் பலவீன மானவர்களை துன்புறுத்திஞல், நெப்போலியன் அந்தப் பலவீனர்களின் பக்கம் நின்று நீதிக்காகப் போராடு வான்.

பிரான்சு நாட்டின் பன்னிரண்டு மாகாணங்களி லிருக்கும் ஒவ்வொரு ராணுவக் கல்லூரியும் மூவர் வீதம் தேர்ந்தெடுத்துப் பாரீஸ் நகர கல்லூரிக்கு அனுப்புவது வழக்கம். ஒவ்வொரு மாணவனுக்கும் குறைந்தது பதி ணைந்து வயது நிச்சயமாக இருக்க வேண்டும். 1785-ஆம் ஆண்டு பியொன் கல்லூரியிலிருந்து பாரீஸுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் முதல்வன் நெப்போலி யன்.

பாரிஸ் நகரில் ராணுவக் கல்லூரியில் சேர்ந்துவிட் டான் நெப்போலியன். அந்தக் கல்லூரியில் பணம் படைத்தவர்கள் வீட்டுப் பிள்ளைகளே அதிகம் படித்த னர். அந்தப் பள்ளியில் முந்நூறு மாணவர்கள் இருந் தனர். இவர்கள் சகல வசதிகளோடும் வாழ்ந்து வந்த னர். இவைகளைக் கண்ட நெப்போலியன் "என்ன இது! ராணுவப் பள்ளியா? அல்லது டாம்பிகப் பள் ளியா? இங்கு பயிலும் மாணவர்களுக்கு கால்பிடிக்க ஒருவன், கைபிடிக்க ஒருவன், குதிரை தேய்க்க ஒரு வன், குளிப்பாட்ட ஒருவன் இவ்விதம் பணியாட்களை வைத்துக் கொண்டு உடம்பு நோகாமலிருந்தால் எப்படி யுத்த களத்தில் இவர்கள் தைரியமாக இறங்கி பணி யாற்ற முடியும். பதினைந்து வயதிலேயே சுகபோகங் களை அனுபவித்தால் யுத்த நடவடிக்கைகளில் ஏற்படும்

மாறுதல்களை சாமாளிப்பதெங்ஙனம்? ஆகவே இந்த முறையே தவறு" என்று தீர்மானித்து விட்டான் சிறுவன் நெப்போலியன். உடனே கவர்னருக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொண்டான். அதில் தன் மனதில் பட்டதை திட்டவட்டமாக குறிப்பிட்டிருந்தான். முக்கியமாக "பள்ளியில் பயிலும் மாணவர்கள் தங்கள் குதிரைகளை தாங்களே தேய்த்துக்கொள்ள வேண்டும், வேலையாட்கள் செய்ய வேண்டிய காரியங்களை தாங்களே செய்து பழக்கப்பட வேண்டும். இவ்விதம் செய்வதே மிகவும் சரியானதும் பொருத்தமானது மாகும்" என்று அதில் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டிருந்தான். இவ்விதமாக அவன் நினைப்பு, செயல், சொல் எல்லாம் வீரத்தை வளர்ப்பதாகவே இருந்தது. அவனுக்குத் தான் ஒரு பெருவீரனாக மாறவேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறு எதுவும் தோன்றவில்லை.

ராணுவக் கல்லூரியில் 1785-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் வகுப்பில் தேறினான். உடனே அவன் இராணுவப் பீரங்கிப் படையில் இரண்டாம் லெப்டினண்டாக நியமிக்கப்பட்டான். அதாவது உதவி சேனைத் தலைவனாக தேர்ந்தெடுக்கப்பட்டான். அப்போது அவன் வயது பதினாறு. இந்தச் சிறுவயதில் வேறு எவர்க்கும் அன்றுவரையில் இவ்வளவு பொறுப்பு வாய்ந்த பதவி கிடைத்ததில்லை."

"அப்பா சிறுவயதில் பெரும் பொறுப்பு வாய்ந்த பதவிகள் கிடைத்தவுடன் ஆணவம், தற்பெருமை முதலியவைகளால் சிலர் பீடிக்கப்படுவார்கள் என்று கூறுகின்றனரே அதுபோல்......."

"நெப்போலியன் பதவிப் பித்துக் கொண்டானா என்றுதானே கேட்கிறாய்?"

"ஆம்!"

"இல்லை! அவன் பதவிப் பிரியனல்ல! புகழ் விரும்பும் பேதையல்ல! புத்திமான்! செய் நன்றி மற

வாத மனித சிரேட்டன். அவன் இந்த உயரிய பதவி யைப் பெற்றுக்கொண்டு "வேலன்ஸ்" நகரிலுள்ள தன் படைகளுடன் சேர்ந்து கொள்வதற்காக சென்றான்.

அங்கு அவன் மிகவும் மரியாதையுடன் வரவேற் கப்பட்டான், மதிப்பு வாய்ந்த முக்கியஸ்தர்கள் இவனைக் கண்டு ஆச்சரிய முற்றனர் மதிப்பளித்து உபசரித் தனர்.

அந்த இடத்தில் மிகவும் கௌரவமுள்ளவள் என்று எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்தாள் ஒரு பெண், அவள் பெயர் "மாடம் தே கோலம்பியா". அவள் நெப்போலியனிடம் அன்பு பாராட்டி வந்தாள். மேலும் அவனை அடிக்கடி தன் வீட்டிற்கு வர வழைத்துப் பல பிரமுகர்களை அறிமுகம் செய்து வைத்தாள். அவள் உதவியால் நெப்போலியனுக்கு மிகவும் நல்ல உயர்ந்த பிரமுகர்களின் நட்பு எளிமை யில் கிடைத்தது.

நெப்போலியனுக்கு 'மாடம் தே கொலம்பியர்' வீட்டிற்கு அடிக்கடி செல்லும் வாய்ப்பு நேர்ந்தது. அப்போது கொலம்பியரின் குமாரிகளில் ஒருத்தியிடம் அதிகமாகப் பழகும் சந்தர்ப்பமேற்பட்டது. அடிக்கடி நெப்போலியன் அவளுடன் வெளியே உலவச் செல்லு வான். இவ்விதம் அவன் இளம் பெண் ணொருத்தி யுடன் தனியாக உலாவச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்து அதை அவன் தவறாக உபயோகிக்க வில்லை. மிகவும் கண்ணியமாகவே நடந்து கொண்டான். அவர்கள் இருவரும் சம வயதுடைய வர்கள் தான்; இருந்தும் காதல் கட்டத்தில் கால் எடுத்து வைக்க வில்லை.

ஆனல் ஒன்று மட்டும் நிச்சயமாய் தெரிகிறது. அதாவது அப்போதுதான் அவன் ஒரு பெண் மீது முதன் முதலாக அன்பைச் செலுத்தக் கற்றுக் கொண்டான்.

சிறிது காலத்தில் இவர்கள் பிரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அவளும் வேறு ஒருவனை மணந்து கொண்டு வாழ்ந்தாள்.

நெப்போலியன் மன்னனாக அரசோச்சிய போது அந்த பெண் ஏழ்மைக் கோலத்தில் நெப்போலியனைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது நெப்போலியன் அந்தப் பெண்ணை ஏழை என்று ஒதுக்கவில்லை. தான் ஒரு மக்கள் மதிக்கும் மன்னன் என்று மமதை கொள்ளவில்லை. அவள் தன் சிறு வயதுத் தோழி என்பதை மறவாமல் அவளுடைய நிலைமையை விசாரித்து, அவளுடைய கணவனுக்கு ஒரு நல்ல உத்தியோகம் தந்து உதவினான். அந்தஅளவுக்கு நல்லவன் நெப்போலியன்.

சரி! நாம் கதையைத் தொடர்வோம்.

நெப்போலியன் தான் ஏற்றுக் கொண்ட உத்தியோகத்தின் மூலம் கிடைத்த பொருள் அவனுக்குப் போதவில்லை. என்ன செய்வான் பாவம்! பல தொல்லைகளுக்கு ஆளானான். குடும்பத்தினர் ஒருபுறம், அவன் ஒருபுறம், அவனுடைய அருமை அன்னையார் பதினேழு வயதுக்கு மேற்படாத ஆறு குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றிருந்தாள். அவளும் காலம் என்னும் வண்டியில் துன்பம், தொல்லைகள் என்னும் காளைகளைப் பூட்டி சகிப்புத் தன்மை என்னும் சவுக்கால் அடித்து ஓட்டிக் கொண்டே சென்றாள்.

நெப்போலியன் உத்தியோக நிமித்தமாக, "லியான்ஸுக்கு" செல்ல வேண்டியிருந்தது. முன்பின் பழக்கமில்லாத அந்த ஊருக்குச் சென்றான். அந்தத் துணையற்ற இடத்தில், காட்டு வழியில் செல்லும் செல்வந்தனைக், கள்வர்கள் பிடித்துக் கொள்வது போல திக்கற்ற நெப்போலியனை நோய் பிடித்துக் கொண்டது. என்ன செய்வான், தன் உடலை சுகப்படுத்திக் கொள்ள

தேவையான பணமும் இல்லை, பழக்க முள்ள மனிதர் உதவியுமில்லை. இந்த சங்கடமான நிலையில் அவனுக்கு ஒரு எதிர்பாராத உதவி கிடைத்தது. நீரில் மூழ்கி யவன் இறந்து விடுவோடும் என்று தீர்மானித்து விட்ட அதே நொடியில் அவனைக் கரை சேர்க்க ஒரு மரத்துண்டு கிடைத்ததுபோல, திக்கற்று உணவு விடு தியில் உழன்றுக் கொண்டிருந்த நெப்போலியனுக்கு ஒரு பெண் உதவிசெய்து உபசரித்தாள்.

"அப்பா யார் அந்தப் பெண்?"

"நெப்போலியன் தங்கியிருந்த அந்த உணவு விடுதிக்கு 'ஜனிவா' விலிருந்து வந்து தங்கியிருந்தாள் அவள். அவள் ஒரு சீமாட்டி. அவள் நெப்போலியன் நோயுற்று வருந்துவதைக் கண்டு அவன் மீது இரக்கம் கொண்டு உண்மையான அன்புடன் அவனுக்கு வேண்டிய உதவிகள் புரிந்து வந்தாள்" நெப்போலி யன் அவள் உதவியால் உடல் நலமுற்றான். அவள் செய்த அந்த உதவிக்குத் தன் நன்றி அறிதலை தெரிவித்துவிட்டுத் தன் காரியங்களைக் கவனிக்க லானான்.

நெப்போலியன் மன்னர் மன்னனாக முடியாட்சி செலுத்திய காலத்தில், அவன் நோயுற்றிருந்தபோது அவனுக்கு உதவிய அந்தச் சீமாட்டி வறுமை நிலையில் இருந்தாள். அவள் நிலைமையை நெப்போலியனுக்குக் கடிதம் மூலம் தெரிவித்தாள். அதைக்கண்ட மன்னன் நெப்போலியன், செய் நன்றி மறவாத வீரன். அவ ளுக்கு, பதினாயிரம் பிராங்குகள் அனுப்பி உதவினான்.

நெப்போலியன் சாதாரண மனிதனாய் இருந்த போதும், படைத் தலைவனாகப் பணியாற்றிய நேரத்தி லும், மன்னன் என்ற பெயருடன் ஆட்சி செலுத்திய காலத்திலும், தனக்கு நன்மை புரிந்தவர்கள், நண்பர் கள், முதலியவர்களிடம் கண்ணியமாக நடந்து

கொண்டதுடன், தேவையான உதவிகளையும் அவர்களுக்குச் செய்து வந்தான்.

வியான்ஸ் நகரில் அவன் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அந்நகரிலிருந்த "கலைஞர் கழகத்தார்" மக்கள் கூட்டத்திற்கு மேலான நன்மைகளைச் செய்ய வல்ல அரசியல் ஸ் தா ப ன லட்சணத்தைப்பற்றி வியாசம் எழுது வோருக்கு பரிசு வழங்குவதாக விளம்பரப்படுத்தி யிருந்தார்கள். அந்த வியாசம் எழுதி அதில் முதல் பரிசை பெற்றான் வீர நெப்போலியன். நெப்போலியன் முரட்டு வீரனாக கா ல ம் தள்ளவில்லை. அறிவுள்ள வீரனாக, ஆக்க செயல் புரியும் தீரனாக விளங்கினான். அவன் நாட்டு வரலாறுகள், இயற்கையின் படைப்பு, மதம், கலாச்சாரங்கள் மு த லி ய வற்றை அலசி ஆராய்ந்து எ ழு தி வைத்துக் கொள்வான். அவை இன்னும் அப்படியே பத்திரமாக இருக்கின்றன.

அன்புள்ள மகனே இதுவரையில் நெப்போலியனைப் பற்றி உனக்குச் சொல்லிக் கொண்டே வந்தேன். இப்போது நான் ஒரு முக்கிய வேலையாய் வெளியில் செல்ல வேண்டும். ஆகவே நான் வந்த பின் கதையைத் தொடர்கின்றேன்.

"அப்பா! நல்ல கட்டத்தில் விட்டு விட்டுச் செல்கின்றீரே" "ஆம்!உணர்ச்சியோடுகேட்டுக்கொண் டிருந்தாய் உன் ஆர்வத்தை கலைக்க விரும்பவில்லை. நமது தலைவன் நெப்போலியனின் வரலாற்றை நான் எழுதி வைத்திருக்கிறேன் நூல் வடிவமாக்க. அதனைத் தருகிறேன், நான் விட்ட இடத்திலிருந்து தொடங்கு, உன் உணர்ச்சி கலையா முன்னம்."

என்று கூறி ஒரு கை எழுத்துப் பிரதியை கொண்டு வந்து மகனிடம் கொடுத்து, "இதிலிருந்து படி" என்று ஒரு தாளைச் சுட்டிக் காட்டிவிட்டு தந்தை

சென்ருர். தனயன் தந்தை காட்டிய இடத்திலிருந்து படிக்கத் தொடங்கினன்.

அதில்:—

"பிரான்சு நாட்டில் ஏற்பட்ட பெரும் புரட்சியின் காரணமாக நாடு இரண்டு பட்டுக் கிடந்தது. மன்னர் கட்சி; மக்கள் கட்சி என இரு வகைக் கட்சிகள் இருந்தன. மன்னர் கட்சியில் செல்வந்தர்களும், பெரும் அதிகாரிகளும் சேர்ந்திருந்தனர். மக்கள் கட்சியின் மேல் ஏழைகளும், தொழிலாளர்களும், உழவர்களும் சேர்ந்திருந்தனர்." இந்த இருகட்சிகளும் ஒன்றை ஒன்று விரோதித்துக் கொண்டே யிருந்தன; விரோதம் நாளுக்கு நாள் வளர் பிறையாகும்; திடீரென்று ஒரு நாளைக்கு ஒருவரை ஒருவர் தாக்குவர். இந்த நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே யிருந்தது.

இவ்விதம் கலகம் நடைபெறுவதும் அதன் காரணமாக மக்கள் துன்புறுவதும் நெப்போலியனின் கண்களில் மட்டுமல்ல கருத்திலும் பட்டுக் கொண்டுதான் இருந்தது. இவன் உள்ளம் இயற்கையாகவே மக்கள் கட்சியினர் பக்கமே சென்றது. ஆகவே அவன் தன் உதவியை தைரியமாக மக்கள் கட்சிக்குக் காட்டிக் கொண்டே வந்தான்.

ராணுவத்தில் பணியாற்றி வந்த அனைவரும் பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவர்க ளாதலால், எல்லோரும் மன்னர் கட்சியை ஆதரித்தனர்; அத்துடன் மக்கள் கட்சியை ஆதரித்து வந்த நெப்போலியனின் மீது விரோத கணைகளை வீசியே வந்தனர். ஆனல் அவன் அவைகளைப் பொருட்படுத்தாமல் நாட்டின் நிலைமையையும், கலவரத்தின் போக்குகளையும் மிகவும் ஜாக்கிரதையாகவே கண்காணித்து வந்தான்.

ஆனல் அவன் ஒன்றை மட்டும் மறந்து விடவில்லை நீண்ட காலமாக நடைபெற்று வரும் அதிகார வர்க்

கத்தை நீக்கும் முயற்சியில் பேராபத்துகள் உண்டு என்று அவன் நன்கு தெரிந்திருந்தான்.

1791-ஆம் ஆண்டு எம். நெக்கார் என்பவர் வீட்டில் பெரிய விருந்தொன்று நடை பெற்றது. அந்த விருந்தில் பாரீஸ் நகரத்துப் பெரிய மனிதர்கள், செல்வச் சீமான்கள் சிங்காரச் சீமாட்டிகள் கலந்து கொண்டனர்.

அந்த விருந்தில் நெப்போலியனும் கலந்து கொண்டான். அப்போது அவனுக்கு வயது இருபத்தொன்று. அந்த விருந்தில் நாட்டு நிலவரங்களைப் பற்றிய பிரச்னைகள் தர்க்கத்திற் கெடுத்துக் கொள்ளப் பட்டன. அந்த தர்க்கத்தில் கலந்து கொண்ட நெப்போலியன் கீழ்வருமாறு கூறினன்.

"அன்புள்ளவர்களே! அரசியல் கைதிகளை மாடுகள் போல் அடைக்கப்பட் டிருந்த பாஸ்டைல் சிறை மக்கள் சக்தியால் தகர்க்கப்பட்டுத் தரைமட்ட மாயிற்று. அன்று வரையில் பதவிகளைப் பற்றி ஒரு கனவு கூட காணுத மக்கள் புதுப் பதவிகளின் மோகத்தில் மூழ்கி நாம் செய்வது சரியா தவரு என்று எண்ணம் சிறிது மின்றி வெறி கொண்டு மனம் போன போக்கில் ஓடிக் கொண் டிருக்கின்றனர். பழைய ஸ்தாபனம் என்ருல் போதும் அவை இன்று தேவையா? இல்லையா என்பதைப் பற்றியும் சிந்திக்காமல் அவற்றை தகர்த் தெரிந்தார்கள். செல்வந்தர்களை கண் மண் தெரியாமல் துரத்தி அடித்தனர். இதனுல் பிரபுக்கள், டாம்பீகப் பிரியர்கள், கனவான்கள் என்ன செய்வதென்று தோன்ருமல் நாட்டை விட்டே ஓடினுர்கள் உயிர் பிழைத்தால் போதும் என்ற ஒரே நோக்கத்துடன். இந்த கொடிய கோரத்திருவிளையாடல்கள் பிரான்சு நாட்டில் தாண்டவமாடின. ஆனுல், பிரான்சு நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் அவ்வளவு கொடுமைகள் நடை பெறவில்லை. அந்த நகரம் தான் "பாரீஸ்". அது தலைநகர மாதலின் அங்கு காவல் அதிகம், ராணுவப் படைகள் குவிந்திருந்

தன. இதனால் கலவரம் நிகழ முடியவில்லை. அப்படி நிகழ்ந்தாலும் உடனே தடுத்துவிடும் வன்மை ராணு வத்தினருக்கு இருந்தன. பாரீஸ் பட்டினத்து வாசிக ளான பணக்காரார்கள் சற்று நிம்மதியாகவே யிருந்த னர்.

இன்று இவ்வித சிக்கலான சூழ் நிலையில் சிக்கித் தவிக்கும் நம் நாட்டைப் பற்றிப் பேச்சே எங்கும் பேசப் படுகிறது. ஆனல் இவைகளைப் பற்றிக் கவலைக் கொள் ளாது விருந்து வைபவங்களில் கலந்து கொளவதிலேயே நாம் கவனம் செலுத்துகின்றோம்'' என்று கூறினன்.

மேலும் ஒரு பாதிரியார் வீண் பெருமை அடித்துக் கொண்டதைக் கண்டிக்கும் முகத்தால் கீழ் கண்டவாறு ஒரு குட்டி பிரசங்கம் செய்தான்.

"கனவான்களே! என்னை மன்னிக்க வேண்டும் உங்களுடைய பேச்சுக்களுக்குக் குறுக்கே நிற்க வேண்டி யிருக்கிறது. ஏனென்றால் நானும் ஒரு ராணுவ உத்தியோகஸ்தன். எனக்கும் என் கருத்தை வெளி யிடும் உரிமை உண்டு. நான் சிறுவன் என்று நீங்கள் கருதலாம் அதில்வியப்பொன்றுமில்லை. அத்துடன் இவ் வளவு பெரியார்களின் முன்னர் துணிவுடன் நான் பேசுவது கண்டு என்னை ஆணவம் பிடித்தவன் என் றும் கூறலாம். நான் எதற்கும் கவலைப்படவில்லை. ஆனல் கடந்த மூன்று ஆண்டுகளாக நமது நாட்டின் நிலைமை எப்படி இருந்து வருகிறது என்பதை நான் பல தடவைகள் ஊன்றி கவனித்து வந்திருக்கிறேன். நம் நாட்டு நடப்புகளைக் கண்டு மிகமிக வருந்தி யிருக்கிறேன். ஆகவே என் மனதில் பட்டவைகளை எடுத்துக் கூறவே நான் விரும்புகின்றேன். நமது நாடு அநீதிகளையே புரிந்து வருகிறது. ஆட்சியை கவிழ்க்கும் சூட்சிகளைக் கண்டு வருகின்றேன் அவற்றை என்னல் சொல்லாம லிருக்க முடியவில்லை. நான் சொல்லி முடித்த பின், நீங்கள் கூறும் மறுப்பு மொழிகளையும் நான் கேட்டுக்

கொள்ளவே ஆசைப்படுகின்றேன். ஆனல் உண்மையை என்னல் மறைக்க முடியவில்லை.

அன்பர்களே! தவருன முறைகளைக் களைந்து எறிந்துவிடுவதில் எனக்கும் மிகவும் ஆர்வம் இருக்கத்தான் செய்கிறது. பழங்கால முறைகளை வெறுக்கவே தான் நானும் விரும்புகின்றேன். பிறர் பதவியைப் பறித்து அனுபவிப்பதைக் கண்டித்து அவற்றை ஒழித்துவிடவேண்டுமென்பதே என் எண்ணம். எனது உத்தியோகமும், வாழ்க்கையின் நிலையும் இப்போது தான் ஆரம்பக் கட்டத்திலிருக்கிறது. மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தை வாங்கித்தந்து அவற்றை வளர்க்கத்தக்க நல்ல சீர்திருத்தங்களைச் செய்து, நல்ல ஸ்தாபனங்களைப் போற்றி, நிர்வாக இலாகாக்களை நல்ல முறையில் நடத்தவேண்டும். இஃதே என் உயிரான கடமையாகவும் இருக்க வேண்டும். இதில் எனக்கு எவ்வளவோ ஆசை! இருந்தும் நிலைமை எப்படி இருக்கிறது? சென்ற ஓராண்டாக நடைபெற்றுவரும் பயங்கரமான குழப்பங்களைக் கண்காணித்துதான் வருகிறேன்- பெருமை வாய்ந்த பெரியோர்கள் பிளவுபட்டு விட்டனர். நாட்டில் பல நல்லவர்கள் பிளவுண்டு போயினர். சண்டையும் சச்சரவும், தீராத கலக்கங்களும், கொலைகளும் நாளுக்குநாள் மின்னல் வேகத்தில் முன்னேறுகின்றன. இவைகளைக் காணும்போது என் நெஞ்சில் ஏற்படும் நினைவுகள் பல. இந்த நேரத்தில் தான் இராணுவத்தில் மிகமிக தீவிரமான கண்டிப்புகள் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அரசாட்சி அலங்கோலமடையும், அமைதியே இல்லாமல் போய்விடும். இந்த நேரத்தில் படைகள் தம் பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டும். தங்கள் அதிகாரிகளின் ஆணைக்கு உட்பட்டு நடக்கவேண்டும். சிறிதளவாவது அவர்கள் பின்வாங்கினல், வெறிகொண்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் காரியத்தையே கெடுத்துவிடுவார்கள். அந்த நிலைமை நம் பிரான்சுக்கு நேரக்கூடாது. அப்படி

நேர்ந்துவிட்டால் பூவுலகில் நரகம் ஒன்று உண்டு என்ருல் அது பிரான்சு நாடாகவே இருக்கும் என்பதை படைவீரர்களும், மக்களும் மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டும்.

பாரீஸ் நகரத்தில் வாழும் மக்கள் நாளுக்குநாள் தங்கள் நாச காரியத்தை துரிதப்படுத்துகின்றனர். அதனை தலைகாட்டாமல், பலமாக நாம் அடக்கியே ஆக வேண்டும். அப்படி நாம் செய்யத் தவறிவிட்டால் பாரீஸ் பட்டணம் மட்டுமின்றி பிரான்சு நாட்டின் பல நகரங் களும் பெரிய பெரிய கலகங்களை உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை.

உண்மையான விடுதலையை—சுதந்திரத்தை விரும் பும் தலைவர்கள், நாட்டுப் பற்றுள்ள நல்லவர்கள் அனை வரும் அந்த வெறிகொண்ட சமூகத்தவர்களால் வெட் டுண்டு, நசுக்கப்பட்டு ஒழிவது நிச்சயம். இந்தச் செய்தியை மந்திரி சபைக்கு நாம் அறிவித்துவிட வேண்டும். சுதந்திரம் என்னும் அழகான மொழியை மாத்திரம் ஒலித்துக்கொண்டு, மக்களை சிறைக் கைதி களைப்போல் கொடுமைப்படுத்தும் மக்கள் தலைவர்கள் மன்னர்களைவிட கொடியவர்கள். ஆகவே நண்பர்களே நாம் நமது கடமையைச் செய்து கண்ணியத்தைக் காப் போமாக !"

என்று வீராவேசத்துடன், ஆனல் விவேகத்துடன் பேசி முடித்தான். அவன் சொற்பொழிவு எல்லோரை யும் மயக்கியது. அவனுடைய அறிவுத் திறனையும், கடமை உணர்ச்சியையும் எல்லோரும் போற்றினர்.

மன்னராட்சி குலைந்து, மக்களாட்சி மலர்ந்த நாடு களைப் போற்றிப் புகழும் நெப்போலியன் இன்று தன் நாட்டில் முடியாட்சி ஒழிந்து, குடியாட்சி ஏற்பட்டிருந் தும் அவன் அதை ஆதரிக்கவில்லை. ஏனென்ருல் மக்க ளாட்சி நீதியுடன் நடைபெறவில்லை; மற்றவர்களைக்

கொடுமை செய்வதே கடமை என்று கருதியது. ஆளத் தெரியாதவர்கள் ஆட்சி பீடத்திலிருந்து அரசோச்சுவ தால் ஏற்பட்ட கொடுமைகள் சொல்லிமுடியாது. அதனுல்தான் நெப்போலியன் அவர்கள் கொட்டத்தை அடக்கி நாட்டில் நல்ல ஆட்சியும், அமைதியும் நிலை பெறச் செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். "கொடுங்கோன்மை உற்பத்தியாகும் இடம், மன்ன ராட்சியானு லென்ன? மக்களாட்சியானு லென்ன? கொடுமையை நீக்கி, அமைதியையும், சட்டங்களை ஒழுங் கான முறையில் நிலைநிறுத்துவதும் உடனடியாக நாட்டிற்குத் தேவை" என்பதுதான் அந்த இளம் வீரனின் எண்ணம்.

1792-ஆம் ஆண்டு நிலைமை மிகவும் மோசமாய் விட்டது. அப்போது நடைபெற்ற அநீதிகளைக் கண்டு மனம் புழுங்கினுன். மக்கள் கூட்டங்களாகக் கூடினர்; குடித்தனர்; குடித்த வெறியால் அறிவிழந்த அவர்கள் கையிலகப்பட்டதை எடுத்துக்கொண்டு மன்னர் குடும் பத்தை விரட்டியடித்தனர். ஆம்! பல அரச பரம் பரையினரை கொஞ்சமும் இரக்கம் காட்டாமல் ஆடுகளை வெட்டுவதுபோல் வெட்டி வீழ்த்தினர். பலரை விரட்டி யடித்தனர்; மன்னரின் மெய்க்காப்பாளர்களைக் கொன்றனர். அரசனும், அரசியும் அல்லலுற்றனர். உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக சேனைகள் சிதறுண்டன. பாதுகாப்பில்லாத அரசனும், அரசியும் ஒருநாள் இரவு மாறு வேடமணிந்து நாட்டைவிட்டு ஓடிவிடத் தீர்மானித்து வெளியேறினர். ஆனுல் அவர் கள் எண்ணம் பலிக்கவில்லை. மக்கள் கூட்டம் அவர் களைப் பிடித்துக்கொண்டது. அவர்கள் சிறையிலடைக் கப்பட்டனர். மன்னன் மாளிகைகள் தரைமட்டமாயின. இந்த தகாத காரியங்களைத் தாறுமாருகச் செய்து வந்தனர் மக்கள். ஒருநாள் அரசனையும், அரசியையும் பிரான்சு நாட்டை அயலானிடம் காட்டிக்கொடுத்த குற்றம் சாட்டி தூக்கிலிட்டனர். இந்தச் செய்திகள்

நெப்போலியனை சும்மாயிருக்க விடவில்லை. அவன் மூளை சுழன்று வேலை செய்யத் தொடங்கியது.

"இன்று பிரான்சு நாட்டிற்கு ஒரு நல்ல அரசு வேண்டும். அது நல்ல அரசாக மட்டும் இருந்தால் போதாது. வல்லமை பொருந்திய அரசாகவும் இருக்க வேண்டும். குரங்கின் கையில் பூமாலை சிக்கிக்கொண்டதுபோல், பூனையின் கையில் பஞ்சவர்ணக்கிளி அகப்பட்டுக்கொண்டதுபோல் இந்தப் பொல்லாத மக்களிடம் பிரான்சு நாடு சிக்கிக்கொண்டு சீரழிகிறது. மக்கள் உரிமையை எடுத்து விளக்கி அதனை காப்பாற்றியாக வேண்டும். நம் நாட்டின் கல்வி அறிவை உடனே விருத்தி செய்ய வேண்டும். பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் ஏற்பட வழிசெய்ய வேண்டும். இந்தப் புரட்சிக்கு முன்னிருந்த அரசாங்கமே நல்லது என்று என் புத்தியில் படுகிறது. கல்வியும், நீதியும் இல்லாத மக்களிடம் பிரஞ்சு சமுதாய உரிமை யிருப்பது நாட்டிற்கே பேராபத்தை உண்டுபண்ணும். ஒரு பார்லிமெண்டும், அதற்கு கட்டுப்பட்ட ஒரு அரசனும் இருந்து ஆளும் ஆட்சியே சிறந்தது என்றும் நான் கருதுகிறேன். அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற ஆட்சியாயினும் சரி, வன்மை மிகுந்த அரியணையும், சிறந்த பிரபுக்கள் சபையும், ஈடு இணையற்ற படைபலமும் இருப்பதுடன் மக்கள் உரிமைகள் மிகவும் ஜாக்கிரதையுடன் மக்களிடம் இறக்குமதி செய்யவேண்டும் என்பதும் எனது ஆசை"

என்று தீர்மானித்துவிட்டான். எந்தவிதமான ஒழுங்கு முறையு மில்லாமல் வெறியின் காரணமாக இரத்தம் சிந்தும் ஸ்தாபனங்கள் அவனுக்குப் பிடிக்கவில்லை. வெறுப்பையே உண்டுபண்ணின. கண்டிப்பான ஒழுக்கமும், சுதந்திரமும் ஒன்று சேர்ந்து விளங்கினலன்றி நாட்டில் அமைதி நிலவுவது கடினம் என்று அவன் திட்டவட்டமாக தீர்மானித்துவிட்டான். அத்

துடன் நின்றுவிடாமல் தன் கருத்துக்களை நாட்டு மக்களிடம் தைரியமாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறி வந்தான்.

•வீர நெப்போலியன் எவ்வளவு எடுத்துக் கூறியும் எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அங்கு ஆட்சி செலுத்தி வந்த புரட்சி இயக்கம் தன் நாசவேலைகளை எப்போதும் போலவே செய்து வந்தன.

இந்த மிகக் கேவலமான நிலைமையை நோக்கி பிரான்சு சென்றுக் கொண்டிருந்ததை மற்ற வல்லரசு கவனித்துக் கொண்டுதான் வந்தன. இந்த பயங்கரப் புரட்சி பிரான்சிலிருந்து மற்ற ஐரோப்பிய நாடுகளில் பரவிவிடப் போகிறது என்றும் அந்த வல்லரசுகள் அஞ்சின. ஆகவே அவை ஒன்றுகூடி பிரஞ்சுநாட்டுப் புரட்சி இயக்கத்தை எப்படியாவது அடக்கி நசுக்கி விட வேண்டும் என்று தீர்மானித்தன. ஆங்கிலேயர்கள் பிரஞ்சின் மீது படையெடுத்து "தவுலன" என்னும் பெயருடைய துறைமுகப் பட்டினத்தை கைப்பற்றிக் கொண்டனர்.

இந்த எதிர்பாராத தாக்குதலைக் கண்டு குடியரசினர் இரண்டு படைகளைத் திரட்டி அனுப்பினர். குடியரசுப் படைக்கும், ஆங்கிலேயருக்கும் மூன்று மாதங்கள் வரைப் போர் நிகழ்ந்து கொண்டே இருந்தது. இருந்தும் ஆங்கிலேயரை விரட்ட முடியவில்லை. இந்த நெருக்கடியான நிலைமையில் என்ன செய்வது என்று தோன்றாமல் திகைத்தனர். இறுதியில் இந்தப் போரை நடத்த மிகவும் திறமை வாய்ந்தவன் யார் என்று ஆராய்ந்து பார்த்தனர். அப்போது அந்தப் போரைத் தலைமை தாங்கி நடத்த தகுதியும், திறமையும் வாய்ந்தவன் நெப்போலியன் ஒருவன்தான் என்று அறிந்தனர். அதன் படியே அவன் தலைமை பதவியை ஏற்றான்.

போர்த் தலைமை நெப்போலியனுக்குக் கிடைத்தது. அதனை அவன் நல்ல முறையில் நடத்திக் காட்டினான்.

போர் முறையை மாற்றி அமைத்தான். மூன்று பிரிவுகளாகப் படையைப் பிரித்து மூன்று பக்கங்களில் தாக்கப் பணித்தான். அவன் வேளைக்கு உணவின்றி உறக்கமின்றி பம்பரம்போல்சுழன்று போர் வேலைகளை கவனித்து வந்தான். அவனுடைய விடாமுயற்சியும், போர்த்திறமையும், இழந்த 'தவுலன்' நகர் மறுபடியும் பிரான்சுக்கே சொந்தமாயிற்று.

1793-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நெப்போலியன் தான் பிறந்த இடமாகிய 'கார்ஸிகாத்' தீவுக்குச் சென்றான். அங்கிருந்து அவனும், அட்மிரல் டர்காட்டும் இரண்டு படாலியன் படைகளுக்குத் தலைமை யேற்று "சார்டீனியா" என்னும் தீவுக்குச் சென்றனர். நெப்போலியனுடன் சென்ற அட்மிரலின் தவறால் அவன் குறிகோள் முழு வெற்றியைத் தரவில்லை.

இதற்கு பிரான்சு நாட்டில் கிளர்ச்சி அதிகரித்தது. மக்களின் கலகம் உச்சநிலையை அடைந்துவிட்டது. இந்த கலகம் நடை பெற்றபோது, கார்ஸிகாத் தீவுக்கு பயோலி என்ற வீரன் கவர்னராக இருந்தான். இவனிடம் நெப்போலியன் மிகவும் மதிப்பு வைத்திருந்தான். இந்தப் பயோலி பிரான்சு நாட்டு மக்களின் கலகம் அவனுக்குப் பிடிக்கவில்லை. கார்ஸிகாத் தீவை பிரான்சு ஆளக்கூடாது என்று தீர்மானம் செய்து விட்டான். எப்படியாகிலும் கார்ஸிகாத் தீவை இங்கிலாந்தின் வசம் ஒப்புவிக்கவே அவன் முற்பட்டான். இதற்காக அவன் ஒரு தனி படையையும் சேர்த்துக் கொண்டு வந்தான். இவ்வளவும் இரகசியமாகவே நடைபெற்றது. ஆனல் இந்த இரகசியம் நெப்போலியன் தன் புத்திக் கூர்மையால் அறிந்து கொண்டான். நெப்போலியனுக்கு "பயோலி"யினிடம் மதிப்புண்டு. என்றாலும் அவனுடைய அந்தரங்க இரகசியத்தை சற்றும் அஞ்சாமல் அவனிடம் தெரிவித்தான். ஆனல் 'பயோலி' நெப்போலியனையும் தன்பக்கம் சேர்த்துக்

கொள்ள எவ்வளவோ பாடுபட்டான். பயன் தரவில்லை. "கார்ஸிகாத் தீவு எந்தக் காரணத்தாலும் ஆங்கிலேயருடன் சேர்ந்து வாழ முடியாது. ஆங்கிலேயரின் நடை, உடை, பாவனைகளுக்கும் நமக்கும் ஒற்றுமையில்லை. ஆகவே மத்தியத் தரைக்கடலில் சுதந்திரமாக நமது தீவு வாழ முடியாது. ஆகையால் நாம் பிரான்சுடன் கூடியிருப்பதே நலம். இன்று பிரான்சு கலகக்காரர்களுடன் சிக்கியிருப்பது உண்மைதான் என்றாலும் இந்த நிலைமை நீடித்திருக்காது. சீக்கிரம் நீங்கிவிடும்" என்று பயோலியின் துரோகச் செயலை எடுத்துக் கூறி அவன் கருத்தை மாற்றிக் கொள்ளுமாறு வற்புறுத்தினான். பயோலி நெப்போலியனுக்கு நல்ல காரணங்கள் காட்டி தன் பக்கம் ஈர்த்துக் கொள்ள சக்தியற்றிருந்தான்.

எண்பது வயதுள்ள கிழவீரன் பயோலிக்கும், இருபத்துநான்கே வயதுள்ள நெப்போலியனுக்கும் இது சம்பந்தமாக பலத்த வாதங்கள் நடைபெற்றன. இறுதியில் ஒருவர் கருத்தை அடுத்தவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இருவரும் மிகவும் வருத்தத்துடன் பிரிந்தனர்.

பயோலியும், நெப்போலியனும், தந்தையும், மகனும் போலப் பழகியவர்கள் இருந்தும் இன்று பூனையும் எலியும் போலாகிவிட்டனர்.

நெப்போலியன் பயோலியிடம் பேசிவிட்டுத் தனியே திரும்புகையில் பயோலி அவனைக் கைது செய்ய முயன்றான். ஆனால் அஃது அவனால் முடியவில்லை.

தான் பிறந்த பொன்னாட்டிற்குத் துரோகம் செய்தான் "பயோலி". ஆம் கார்ஸிகாத் தீவை இங்கிலாந்தின் வசம் ஒப்புவித்தான் கவர்னர் பயோலி. இந்த செய்கையைக் கண்டு கொஞ்சமும் சகியாத நெப்போலியன் ஒரு சிறு படையைத் திரட்டிக் கொண்டு சென்று ஆங்கிலேயரைக் கலங்க வைத்தான். ஆனால் அந்த வீரச் சிறுவனால் வெற்றிபெற முடியவில்லை. இந்தப்

போராட்டத்தின் முடிவு நெப்போலியனும், அவனைப் பெற்றதாயும், உடன் பிறந்தவர்களும், ஓட்டாண்டியாய் ஊரைவிட்டே இரவோடிரவாய் படகிலேறி தப்பி ஓட வேண்டிய தாயிற்று.

தாய்நாட்டை விட்டு இத்தாலியிலுள்ள மார்சேல் ஸுக்குப் போய்ச் சேர்ந்தான்.

நெப்போலியன் பிறந்த கார்ஸிகாத் தீவு இரண்டு ஆண்டுவரையில் ஆங்கிலேயர் வசமிருந்தது. அப் போதுதான் வீரன் நெப்போலியன் கூறிய உண்மை கள் கார்ஸிகாத்தீவு மக்கள் மனதில் பட்டன. அதன் பிறகு ஆங்கிலேயர்களால் நிம்மதியாக அங்கிருக்க முடிய வில்லை.

இந்த சூழ்நிலையை மர்சேலில் இருந்த நெப்போலி யன் கவனித்துக் கொண்டிருந்தான். ஊர் இரண்டு பட் டுக் கிடப்பதை அறிந்தான். ஆங்கிலேயரிடம் மக்கள் வெறுப்பைக் காட்டுவதும் தெரிந்து கொண்டிருந்தான். இதே நேரத்தில் அங்கே ஆங்கிலேயருக்கு விரோதமாக கிளர்ச்சிகள் நடைபெற்றன. இந்த நல்ல சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்த நெப்போலியன் கார்ஸி காத் தீவுக்கு வந்து சேர்ந்தான். கிளர்ச்சியில் கலந்து கொண்டான். ஒரு படையைத் திரட்டிக் கொண்டான். ஆங்கிலேயரை விரட்டி அடித்தான். பிரான்சு நாட் டிற்கே கார்ஸிகாத் தீவு உரியது என்று முழங்கினன்.

இரண்டு ஆண்டுகள் வரையில் அட்டகாசம் செய்து வந்த ஆங்கிலேயர்கள் தீவைவிட்டு வெளியேற வேண் டியதாயிற்று. அவர்களுடன் பிரான்சு அரசாங்கத்துக் குத் துரோகம் விளைவித்த பயோலியும் சென்றான். அவன் செல்லும்போது, இந்த நிலைமை வரும் என்று முன்கூட்டியே எச்சரித்த மாவீரன் நெப்போலியனின் அறிவுத்திறனைப் பாராட்டிய வண்ணம் சென்றான்.

இவ்விதம் பிரான்சு நாட்டிற்கே பெருமை உண்டு பண்ணிய பெருவீரனை - அரும்பாடுபட்டு அல்லும் பக

னும் தன் தாய் நாட்டை விடுவித்த வெற்றி செல்வனை - பிரபுக்கள் விரோதித்து வந்தனர்.

1794-ம் ஆண்டில் வெற்றிவீரன் நெப்போலியன் இத்தாலியிலுள்ள பீரங்கிப் படைக்குத் தலைவனானான். இவன் தன் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், நைஸ் பிரதேசத்திலுள்ள ஆஸ்திரியா, ஸர்டீனியா என்னும் ஒரு சிறு நாட்டின் உதவியைக் கொண்டு, பிராஞ்சு படைகளோடு போராடி சில இடங்களைக் கைப்பற்றிக் கொண்டிருந்தது.

நெப்போலியன் பீரங்கிப் படைக்கு தலைமை தாங்கினான். உடனே, தான் எந்தெந்த நாடுகளை எப்படி எப்படித் தாக்கவேண்டும் என்று ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டான். அவன் தாக்க இருக்கும் நாடுகளின் அமைப்பைப்பற்றியும், அந்நாட்டு பழக்க வழக்கங்களைப் பற்றியும் ஆராய்ந்து தெரிந்து கொண்டான். மலைகளையும், ஆறுகளையும் நேரில் சென்று ஆராய்ந்தான். தன் படை வன்மையையும், எதிரிகளின் பலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான். அதன் பிறகு தன் சேனையை எப்படி பக்குவப்படுத்தினால் எதிரிகளை முறியடிக்க முடியும். என்ற உண்மையையும் தெரிந்து கொண்டு அதன்படியே படைகளைப் பழக்கினான்.

அப்போது அவனிடம் 15,000 வீரர்கள்தானிருந்தனர். இவர்களை இரு பிரிவுகளாகப் பிரித்து அனுப்பினான். அப்போது ஆஸ்திரியச் சேனை ஆற்றங்கரையோரத்தில் தங்கியிருந்தது. இந்தச் சேனையை விரட்டி அடிக்க நெப்போலியன் தன் னிருபடைகளையும் நடத்தி சென்றான்.

ஆற்றங்கரை யோரத்திலிருந்த ஆஸ்திரிய சேனையை நெப்போலியன் முன்னேற்பாட்டின் படியே திடீரென தாக்கினான். எதிர் பாராத இந்த திடீர் தாக்குதலைக் கண்ட ஆஸ்திர சேனை புயல் காற்றில் அகப்

பட்ட வைக்கோல் போர் போல பறந்தது. இந்தப் போரை மிகவும் சமர்த்தியமாகவும், வீராவேசத்துட னும் நடத்தி வாகை சூடினன். இதன் விளைவு ஆல்ப்ஸ் மலையும், அதனைச் சார்ந்த நாடுகளும் பிரான்சுக்கு சொந்தமாயின.

இந்தப் பெரிய வெற்றியை பிரான்சு நாட்டிற்கு வாங்கித் தந்த நெப்போலியன் மக்கள் மனதில் மிகவும் உயர்ந்த இடத்தைப் பெற்றுவிட்டான். வெற்றி மாலை யும், புகழ் மாலையும் ஏக காலத்தில் பெற்ருன் நெப் போலியன். பயிரின் வளர்ச்சிக்கு களைத் தடையா இருக்கவில்லையா? ரோஜா மலரைப் பறிக்கும் போது முள் குத்தாமலா இருக்கும்? அதுபோல நெப்போலி யன் வளர்ச்சி என்னும் மலரைப் பறிக்கும் நேரத்தில் பொருமை முள் குத்தியது.

மேல் பதவியில் இருக்கும் அதிகாரிகள் நெப்போ லியனின், வீரத்தையும், வெற்றியையும், கண்டு அவன் மீது வெறுப்பைக் காட்டினர், தங்களுக்கு அந்த பெருமையும் புகழும் கிடைக்கவில்லையே என்ற பொரு மையில்! எப்படியும் நெப்போலியனின் பெருமையைக் குறைக்க வேண்டும் என்று மனத்தில் தீர்மானித்துக் கொண்டு, அந்த சமயத்தை எதிர் நோக்கிய வண்ணம் இருந்தனர்.

நெப்போலியன் பீரங்கிப் படைத் தலைவனல் லவா? ஆகவே போர் முடிந்ததும் வெடி மருந்துகளை சேகரித்து வைக்க தகுதியான இடங்களை கண்டு பிடித்து அதனைச் சீர்திருத்தி அதனுள் வெடி மருந்து களை வைக்கத் தீர்மானித்தான். அதன்படியே மார்சேல்ஸ் நகரத்து சிறைச்சாலையில் வெடி மருந்துகள் வைக்க முடிவு செய்தான். அதற்கு தகுந்த முறையில், அந்தச் சிறைச்சாலையை சீர்திருத்தி அமைக்கும் வேலை யில் ஈடுபட்டான். ஏற்கனவே சமயம் பார்த்துக் கொண்டிருந்த அதிகாரிகளின் பொருமையின் காரண

மாக நெப்போலியன் கைது செய்யப் பட்டான். நெப் போலியன், தேச பக்தர்களைச் சிறையிலடைப் பதற் காவே சிறைச்சாலையை சீர்திருத்தம் செய்வதாகக் குற்றம் சாட்டப் பட்டான்.

இந்த எதிர்பாராத நிகழ்ச்சி நெப்போலியனின் மனதை மிகவும் உருக்கின. என்ருலும், "நான் எவ ரையும் சிறையிலடைக்கும் நோக்கத்தோடு செய்ய வில்லை; வெடி மருந்துக்களை பத்திரப் படுத்தவே செய் தேன்" என்று விளக்கமாகக் கூறினன். அதன் பிறகு அவன் விடுதலை யடைந்தான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நெப்போலியன் பீரங் கிப் படைத் தலைவன் பதவியைவிட்டுக் காலாட் படைக்கு தலைமை தாங்க வேண்டும் என்று அதிகாரி கள் உத்தர விட்டனர். ஆனல் வீர நெப்போலியன் "இந்த மாற்றம் என்னை அவமானப்படுத்துவதாகும்" என்று கூறி அந்த வினடியே தன் பதவியை உதறித் தள்ளிவிட்டுத் தன் தாயின் இருப்பிடத்தை நோக்கி நடந்தான்.

ஆனல் அவனுக்கு அங்கே பொழுதே போக வில்லை. எப்போதும் சுறுசுறுப்பாகவே வேலைசெய்து பழக்கப்பட்ட வீரனல்லவா அவன்? ஆகவே சோம் பேறித்தனமாக காலம் கழிக்க விரும்பவில்லை. பாரீஸ் பட்டணத்தை நாடிச் சென்ருன். வேலைக்காக அலைந் தான். அரசாங்க அதிகாரிகள் தங்களுக்கு வேண்டிய வர்களுக்கே வேலை கொடுக்கும் வழக்கமுடையவர்கள். அதனல் நெப்போலியனுக்கு வேலை கிடைக்கவில்லை. வேலைக்கு அவன் அலைந்து திரிந்தபோது அவனை பரிகசித்தனர். கையிலிருந்த சொற்ப பணம் செலவாகி விட்டது. என்ன செய்வான் பாவம்? ஏற்கனவே வசதி யற்று வாழ்ந்து வந்த நெப்போலியனின் தாயும், உடன் பிறந்தவர்களும் தாங்க முடியாத வறுமை நோயால் தாக்குண்டு தவித்தனர்!

வறுமை — கொடிய நோய், மாவீரர்களையும், அறிவுத்தெளிவு பெற்ற அறிஞர்களையும் அல்லற் படுத்தி அவதியுற செய்யும் ஆற்றலுடையது இந்த வறுமை என்னும் நோயை, இரக்கமற்ற பேயை, நீக்கவும் ஓட்டவும் சக்தியற்றவனானன் நெப்போலியன்.

வெளிநாடுகளுக்கு சென்று பொறுப்புள்ள உத்தியோகம் பெற்று வாழவேண்டும் என்று நெப்போலியன் எண்ணியிருந்தால் அவன் வறுமை அடியோடு ஒழிந்து விட்டிருக்கும், ஆனல், நெப்போலியன் அவ்விதம் செய்ய விரும்பவில்லை, தன் தாய் நாட்டை விட்டு வேறு நாட்டில் வேலை பார்ப்பதற்கு அவன் மனம் இடந்தரவில்லை. அவன் வறுமையிலேயே உழன்றாலும் தாய் நாட்டின் பற்றும், பாசமும் அவனை விட்டகலவில்லை. பெற்றதாயும், மற்றவர்களும் படும் துன்பமே அவனைத் துளைத்து வந்தது. அந்தச் சமயத்தில் அவன் தாயாரிடமிருந்து "வறுமையில் வாடிக் கிடக்கிறோம். வாழ வழி தெரியவில்லை, அணு அணுவாகத் தேய்ந்து கொண்டே வருகிறோம்" என்ற கருத்துகள் அடங்கிய கடிதம் வந்தது. இந்த கடிதம் அவனை மிகவும் வேதனைப் படுத்தியது. ஏற்கனவே துன்பம் என்னும் அம்புகளால் துளைக்கப்பட்டு இரத்தம் வடிந்துக்கொண்டிருந்த அவன் தூய உள்ளத்தில் இந்த கடிதம் நெருப்பை வாரிக்கொட்டியது போலிருந்தது.

பின்னர் தன் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும். என்னும் கடமை உணர்ச்சி 'துருக்கி' நாட்டிற்குச் சென்று வேலை தேட தூண்டியது.

ஆனல் அவனுடைய நாட்டுப்பற்று "அப்படி செய்யாதே உன் குடும்பத்தினர் படும் கஷ்டத்தைக் காணச் சகிக்கவில்லை யென்றால் தற்கொலை செய்து கொள்" எனத் தூண்டியது.

கடமை உணர்ச்சி ஒரு புறம் தள்ள—நாட்டுப்பற்று வேறு ஒரு திசை நோக்கி இழுக்க என்ன செய்வது என்னும் முடிவு தோன்ருமல் ஆற்றங் கரை யோரமாக உலவிக்கொண் டிருந்தான்.

எப்போதும் தெளிவோடு, சுறுசுறுப்புடன் இருந்தே பழக்கப்பட்ட நெப்போலின், பொலிவிழந்த முகத்துடனும் துவண்ட நடையுடனும் இருக்கும் கோலத்தை அவன் பழைய நண்பனெருவன் கண்டான். என்ன செய்தி என்றும் வினவினுன்.

நெப்போலியன் தன் நண்பனிடம் உண்மையை கூறினுன். உடனே அந்த உயர்ந்த பண்பும், உதார குணமும் கொண்ட நண்பன் நெப்போலியனுக்கு ஆரு யிரம் டாலர்களை தந்து உதவினுன்.

வறுமை என்னும் கொடிய அரக்கனிடமிருந்து தன்னை மீட்டிய நண்பனுக்கு நன்றி தெரிவித்து விட்டு, அந்த பணத்தை தன் அன்னைக்கு அனுப்பி துன்பத்தை துடைத்தான்.

அந்த நண்பனை அவன் மறந்து விடவில்லை. அவனை மறுபடியும் சந்திக்கப் பதினைந்து ஆண்டுகள் நகர்ந்தன. அப்போது அவனை அன்புடன் வரவேற்று உபசரித்து அவனிடம் ஆதியில் பெற்ற டாலர் ஆரு யிரத்துக்கு அறுபதினுயிரம் டாலர்கள் தந்து மகிழ்வித்தான். அத்துடன் ஆருயிரம் டாலர் வருமான முள்ள ஓர் உயர்ந்த பதவியும் அளித்து மகிழ்வித்தான். அந்த செய் நன்றி மறவாத சிறந்த சித்தமுள்ள சீமான் நெப்போலியன்.

நெப்போலியன், தலைமையை இழந்து விட்டிருந்த படைகள் தகுந்த தலைவனைப் பெற முடியாமல் தவித்துக்கொண் டிருந்தது. இதனுல் இத்தாலியிலுள்ளப் பிரான்சுப் படைகள் பலமற்றிருந்தன. இந்த சமயத்தை எதிர் பார்த்துக்கொண் டிருந்த எதிரிகளான

ஆஸ்திரியர்கள் பிரான்சுப் படையைத் தாக்கினர். அவர்களை எதிர்த்து நிற்க முடியாமல் பிரஞ்சுப் படையினர் தாங்கள் கைப்பற்றிய நாடுகளை விட்டு விட்டு ஓடினர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் பொருமை கொண்டு நெப்போலியனை விரட்டிய ராணுவ அதிகாரிகளுக்குப் புத்தி வந்தது. தங்கள் தவறை உணர்ந்தனர்; அவர்களிட மிருந்தப் பொருமை ஒழிந்தது; அத்துடன் நாட்டிற்கு நெப்போலியனின் சேவை மிகமிக முக்கியமானது என்றும் உணர்ந்தனர், உடனே நெப்போலியனை வரவழைத்துத் தலைமைப் பதவியை தந்தனர். அவனும் அந்தப் பதவியை ஏற்றான். எதிரிகளை விரட்டி யடித்து பிரான்சு நாட்டின் வீரத்தை நிலை நாட்டினன்.

பிரான்சு நாட்டின் சுற்றுப் புறங்களில் இவ்வித சூழ் நிலைகள் இருந்தன. ஆனல் உள்நாடு அதாவது பிரான்சு எப்படி இருந்த தென்றால் :—

பிரான்சு குடிமக்கள் ஒற்றுமை யற்றிருந்தனர்; எப்பக்கம் திரும்பினும் எதிர்ப்புகள், சண்டை சச்சரவுகள், இவைகளே மலிந்து கிடந்தன.

அரசியல் பொறுப்பை ஏற்று நடத்துவதற்கு ஒரு மன்றம் கூட்டப்பட்டது. அதன் பொறுப்பாளர்கள் ஐவர் என்றும் தீர்மானிக்கப் பட்டது. இந்த தீர்மானத்தின்படி நடக்க ஏழை மக்கள் உட்பட்டனர்; இராணுவ வீரர்கள் ஒப்புக் கொண்டனர். ஆனல் பணம் படைத்த செல்வர்கள் இதனை எதிர்த்தனர். இந்த எதிர்ப்பின் காரணமாக நாட்டில் பெருங் குழப்ப மேற்பட்டு விட்டது.

ஒரு பக்கம் மக்கள் கட்சியினரும், மற்றொரு பக்கம் பிரபுக்கள் கட்சியினரும் சேர்ந்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். பாரீஸ் பட்டினம் பயங்கரப் போர்க் களமாக மாறிவிட்டது.

ஏறக்குறையப் நாற்பதாயிரம் மக்கள், தங்கள் கைகளில் வாளும் துப்பாக்கியும் ஏந்திய வண்ணம் நகருக்குள் புகுந்து விட்டனர்: நீதி மன்றத்தை தாக்கினர். அந்தச் சமயத்தில் பிரஞ்சுப் படை கட்டுப்பாடில்லாமல் பல இடங்களிலும் சிதறுண்டு இருந்தது. அரசினர் என்ன செய்வதென்று புரியாமல் திகில் கொண்டு திகைத்து நின்றனர். அவர்களிடம் அப்போது ஐயாயிரம் வீரர்கள் அடங்கிய ஒரு சேனை மட்டும் இருந்தது. உடனே அவர்கள் 'பாராஸ்' என்பவரை கலகங்களை அடக்கும் பொறுப்பு தந்து அனுப்பினர். ஆனால் அவர் இந்த பெருங் கலகத்தைச் சிறு படையின் மூலம் அடக்கும் ஆற்றல்நெப்போலியன் ஒருவனுக்குத்தான் உண்டு என்பதை நன்கு அறிந்தவர். ஆகவே அவர் நெப்போலியனை அழைத்துக் கலகத்தை அடக்குமாறு வேண்டிக் கொண்டார். ஆனால் நெப்போலியன் ஒரு நிபந்தனையை விரும்பினன். "இந்தக் கலகத்தை அடக்கும் முழுப் பொறுப்பும் என்னிடமே இருக்க வேண்டும் என் வேலையில் எவரும் குறுக்கிடக் கூடாது." என்பது தான் நிபந்தனை.

அந்த நிபந்தனைக்குட் பட்டார் 'பாராஸ்' அதன் பிறகுதான் அந்தப் படைக்குத் தலைமை தாங்கினன். இந்தக் கலகத்தை அடக்கும் காரியத்தில் தான் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

தலைமை யேற்ற அந்தக் கண முதல் பம்பரமெனச் சுழன்றான். உடனே பாரிஸ் பட்டணத்திற்குள் நுழைய உதவி செய்யும் வாராவதிகளை உடனே உடைத்தெறியுமாறு உத்தரவிட்டான். இப்படிச் செய்தமையால் கலகக் காரர்களுக்கு வெளியார் உதவி கிடைக்கவில்லை. அன்று இரவெல்லாம் தூங்காமல் பணியாற்றினன். அரண்மனையைச் சுற்றிலும் பீரங்கிகளை அமைத்தான். எப்போது பொழுது விடியும் கலகக்காரர்களை

தாக்கி அடக்க என்று காத்திருந்தான். பொழுது விடிந்தது கலகப் படையினரைப் மிக மிக மூர்க்கமாகத் தாக்கினன். நெப்போலியனின் சேனை மிகச் சிறியதுதான் இருந்தும் அதன் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திணறி, திக்கு முக்காடி ஓட்ட மெடுத்தது கலகக்காரர்களின் பெரும் படை.

பெருங் காட்டில் ஓநாய்களும், குள்ளநரிகளும் ஒன்ருகச் சேர்ந்து காட்டில் வாழும் மற்ற மிருகங்களைக் கொன்று கிழித்துக்கொண் டிருக்கும்போது ஆண் சிங்கம் தன் புலிப்படையுடன் ஓநாய், குள்ளநரிக் கூட்டத்தை அடக்க முயன்ருல், அவை என்ன நிலைமையை அடையுமோ, அதே நிலையை அடைந்தனர் கலகப்படையினர், நேப்போலிய வீரச் சிங்கத்தின் முன் நிற்க முடியாமல்!

இந்த தாக்குதலினல் மாண்டவர் தொகை அதிகம். ஓடி மறைபவர்களின் எண்ணிக்கை ஏராளம். பிடியுண்டோர் கணக்குக்கும் பஞ்சமில்லை. அடிபட்டவர்களும் இல்லாமலில்லை. தாக்குதல் முடிந்தவுடன் இறந்தவர்களை அடக்கம் செய்யுமாறும், அடிபட்டவர்களை சிகிச்சை செய்யுமாறும் பணித்தான், மனிதத் தன்மையுள்ள மாவீரன் நெப்போலியன்.

பிடிபட்டவர்களை நிராயுதபாணியாக்கிவிட்டான். நெப்போலியனின் வீரத்தையும், போர் திறமையையும் புகழாத நாடே இல்லை; பேசாத நாவே கிடையாது. ஆனல் நெப்போலியனுக்கு இவைகள் கடுகளவும் மகிழ்ச்சியே தரவில்லை. ஏனென்ருல் இந்தப் பெரும் போராட்டத்தால், தன்நாட்டுச்சகோதரர்களே ஒருவரையொருவர் தாக்கி மாள நேர்ந்ததே என்று எண்ணி எண்ணி வருந்தினன்.

இந்தப் போராட்டத்திற்குப் பின்னர் பிரான்சு நாட்டில் புதியதாய் தோன்றிய அரசாங்கத்திற்கு பொறுப்புள்ள பெரும் படைத் தளபதியானன். இந்தப்

பெரும் உதவி அவனுக்குப் பெருமையை மட்டும் தரவில்லை. பணத்தையும் தந்தது. அந்தப் பொருளின் உதவியால் மார்ஸேலிஸ் நகரிலிருந்த தன் அன்னைக்கு இன்னும் அதிக சௌகரியங்களைச் செய்து தந்தான்.

போரும் பொல்லாங்கும் சூழ்ந்திருக்கும் நாட்டிலே பசிக்கும், பஞ்சத்திற்கும் குறைவா இருக்கும்? பிரான்சு நாட்டில் கொடிய பசிப்பிணி, கோரப் பஞ்சம், வேதனை தரும் வேலையில்லாத் திண்டாட்டம் இவைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது.

நெப்போலியன் கலகக்காரர்களை அடக்கிவிட்ட பின்னரும் பல குழப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருந்தது. அவற்றை மிகவும் சாமர்த்தியமாக அடக்கி வந்தான்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தைப் போக்க பலவழிகளில் ஏழை மக்களுக்கு உதவி வந்தான். தன் சம்பளத்தில் ஒரு பகுதியை ஏழை மக்களுக்குத் தந்து உதவினான். ஏழை மக்களுக்கு ரொட்டியும், விறகும் கொடுத்து உதவும்படி கட்டளையிட்டான்.

கலகம் மேலும்மேலும் வளராமலிருக்க நெப்போலியன் உத்தரவின்படி மக்களிடம் இருந்த போர்க் கருவிகளெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன.

அந்த நகரில் அழகிய இளம் கைம்பெண் ஒருத்தி இருந்தாள். அவளிடம் ஒரு வாள் இருந்தது. அதை நெப்போலியனின் உத்தரவின்படி அதிகாரிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

அவள் இரு குழந்தைகளுக்குத் தாய். அவளுடைய கணவன் கலகக்காரர்களால் கொல்லப்பட்ட ஒரு போர் வீரன். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். அவள் தன் கணவனின் ஞாபகார்த்தமாக அவனின் உடைவாளை வைத்திருந்தாள். அது பறிபோனது குறித்து மிகவும் வருந்தினாள். எவ்விதத்திலும் அந்த வாளை பெறவேண்

டும் என்று தீர்மானித்தாள். அதன்படி தன் மகனை நெப்போலியனிடம் அனுப்பி அதைப் பெறவேண்டும் என்று முடிவு செய்துகொண்டாள். அவள் பெயர் "ஜோஸபைன்."

உடனே தன் மகன் 'யூஜன்' என்பவனை நெப்போலியனிடம் அனுப்பினாள். அந்த வாளை திருப்பித் தரவேண்டும் என்று கேட்டு வாங்கிவரச் சொன்னாள். அந்த சிறுவன் நெப்போலியனிடம் சென்றான். "அந்த வாளைத் திருப்பித் தரவேண்டும், அஃது எங்கள் தந்தையின் ஞாபகார்த்தமாக வைத்திருக்கிறோம். ஆகவே தாங்கள் தயவு செய்து எங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்து வைக்க வேண்டும்" என்று பணிவுடனும், பரிவுடனும் கேட்டான் சிறுவன். சிறுவனின் வேண்டுகோளை மறுக்காமல் வாளைக் கொடுத்தனுப்பினான் நெப்போலியன். அவனும் அந்த வாளைக் கொண்டுபோய் தன் தாயிடம் சேர்த்தான். அவள் அதனைப் பெற்றுக் கொண்டு மகிழ்ந்தாள். நெப்போலியனின் பெருந்தன்மையை பாராட்டினாள். அவனுக்கு நன்றிகூற தானே நேரிலே சென்றாள்.

பிரான்சு நாட்டுத் தளபதி நெப்போலியனை அந்த அழகிய மோகனாங்க விதவை சந்திக்கச் சென்றாள். நெப்போலியன் இருந்த அறையைத் திறந்து உள்ளே புகுந்தாள், தன் உடம்பென்னும் பெட்டகத்தில் அடைத்து வைத்திருந்த அழகென்னும் பொருளை அள்ளி வீசிக் கொண்டே!

தலை நிமிர்ந்த நெப்போலியன் சிலையானான். காரிருளில் தோன்றிய பேரொலியென நிற்கும் மாதினைக் கண்டான். ஆம்! கண்கள் பெற்றதன் பயனை இன்றே அடைந்தேன்; இப்படியும் ஒரு உருவம் இருக்கிறதா? இவள் யாராய் இருக்க முடியும்? இங்கு ஏன் வந்திருப்பாள்? என்பது போன்ற பல கேள்விகள் அவன் உள்ளத்தில் ஒரு நொடிப்பொழுதில் தோன்றி மறைந்தன.

"உள்ளே வரலாமா" என்று தன் குயில் குரலால் கூறி அன்ன நடை நடந்து, ஆடுமயிலென அங்குச் சென்றாள்.

"அவன் பேசவில்லை. சுட்டிக் காட்டினான் ஒரு நாற்காலியை! அதில் அவள் உட்கார்ந்தாள் ஒய்யார மாக!

நெப்போலியனுக்கு என்ன பேசுவதென்றே தோன்றவில்லை. அவளுடைய ஒவ்வொரு உறுப்பும் அவன் கண்களை குத்தின; கருத்தை ஈர்த்தன. உடம் பெல்லாம் வாய்விட்டுச் சொல்ல முடியாத ஒரு உணர்ச்சி யின் சக்தியைப் போல் பாய்ந்தது. உடனே தன் உணர்ச்சிகளை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு,

"நீங்கள்" என்றான்.

"யார் என்று கேட்கிறீர்கள் அப்படித்தானே" என்றாள்.

தலையை அசைத்தான்

"தங்களுக்கு நன்றி தெரிவிக்க வந்த அனாதைப் பெண்"

"நான் உனக்கு ஏதாவது உதவி செய்ய வேண் டுமா?"

"நேற்று ஒரு சிறுவன் தங்களிடம் வந்து தாங்கள் பறிமுதல் செய்த வாளை திருப்பி வாங்க வந்தா னல் லவா?"

"ஆம்! அவன் தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்றான் நான் கொடுத்தேன்."

"அந்த பிள்ளையைப் பெற்ற, ஆனால் பரிதாபத் திற்குரிய தாய் நான்தான்"

"தாங்களா........தங்களுக்கு...."

"ஆம்! எனக்கு திருமணமாகி விட்டது, இரண்டு குழந்தைகளும் உண்டு!"

"தங்களை விதவைக் கோலத்தில் காண நேர்ந்தமைக்கு மிகவும் விசனிக்கின்றேன்."

"என்ன செய்வது?........" என்று ஒரு பெருமூச்சு விட்டாள்.

"நீங்கள் வேறு கலியாணம் செய்துக்கொள்ளலாகாதா"........

"செய்து கொள்ளலாம்,....நான் வருகிறேன். தங்களின் பெருந்தன்மைக்கும், இரக்க குணத்திற்கும் நான் மிகவும் கடமைபட் டிருக்கின்றேன். நன்றி!"

"அதற்கென்ன பரவாயில்லை...."

"நான் வருகிறேன்"

"உனக்கு ஏதாவது வேண்டுமா?"

"இல்லை! இப்போது வேண்டாம்! உங்களுடைய மாறாத குறையாத அன்பு இருந்தால் நாங்கள் பாக்கியம் செய்தவர்களே!"

"அன்பு என்பது பணம் கொடுத்து வாங்கும் பெருளா பஞ்ச மேற்பட? தாராளமாய் வேண்டிய போது பெற்றுக் கொள்ளலாம்."

"தாங்கள் சமயப்பட்டால் அடிக்கடி...."

"உன்னை வந்து சந்திக்கின்றேன்."

"மிக்க சந்தோஷம்"

"உன் விலாசம்"

"நாளை மாலை என் மகனை அனுப்புகிறேன். முடியுமானால்...."

"நிச்சயமாக வருகிறேன்" என்றான் நெப்போலியன்.

"அப்போது அவனை அவள் பார்த்தாள்; இல்லைப் பார்க்கவில்லை, நெப்போலியன் உருவத்தை கண்கள்

என்னும் கேமரா மூலம் உள்ளமெனும் தகட்டில் ஆழப் பதித்துக் கொண்டாள். அத்துடன் விட்டாளா? இல்லே. தன் உருவத்தையும், உள்ளத்தையும் அவன்பால் தந்து விட்டு வெற்றுள்ளத்தோடு வீடு நோக்கி நடந்தாள்.

நெப்போலியன் அவளே வழி யனுப்பினன். அவள் மறையும் வரையில் அவள் பின் அழகினை, அங்க அசை வினே, கண்டு ரசித்துக் கொண்டிருந்தான். அவ ளுடைய அங்கத்தின் ஒவ்வொரு சிறு அசைவும் அவ அவனுக்கு அமுதத்தை காட்டிலும் இனித்தது.

அவள் மறைந்தாள். "ஜோஸபைன்" என்று உச் சரித்தான் ஒருதடவை. அந்த உச்சரிப்பில் என்னமோ ஒரு புதுமை இருப்பதை உணர்ந்தான். அது அவ னுக்கு அதற்கு முன் தோன்ருத அனுபவம். ஜோஸ பைன் மறைந்தாள். ஆனல், அவள் உருவம் அவன் மனதிலும் கண்களிலும் நின்று நடனமாடியது. அந்த அறையில் அவன் நிலே கொள்ளாமல் தவித்தான்.

"என்ன இது மோசமான நிலே, சே இதனே மறந்துவிட வேண்டும்" என்று தன் கவனத்தை வேறு விஷயங்களில் திருப்பிப் பார்த்தான். எவ்வளவு முயன் ருலும் அஃது அவனல் முடியவில்லே.

"நான் எத்தனே மாதர்களிடம் பேசியிருக்கிறேன்; எத்தனே சீமாட்டிகளிடம் பழகியிருக்கிறேன்; இளம் பெண்கள் எத்தனே பேர் என்னுடன் உலவி இருக்கின் றனர். அவர்களேக் கண்டபோது, அவர்களுடன் பேசிய போது, பழகிய போது ஏற்படாத இன்பானுப வம் இந்த எழிலரசியின் பால் ஏற்படுவானேன்? அவள் சென்றபோது என்னுள் இருந்த இதயத்தை பிய்த்து எடுத்துக்கொண்டு சென்றுவிட்டாளே அந்த சேல்விழி யாள். அவள் உடற்கட்டும், மின்னும் புன்னகையும், சங்கீதப் பேச்சும், தேன் சிந்தும் பவள நிற உதடுகளும், என்னே என்ன பாடு படுத்திவிட்டன. அவள் தன் விழி யினே உருட்டும்போது "வா! வா!" என்று ஆசையோடு

அழைப்பது போலன்றோ இருக்கிறது. அவள் தலையை அசைக்கும் போதும், கரங்களை அசைத்து நடக்கும் போதும் என் மீது மோக வலையை வீசி வலிப்பதுபோலன்று இருக்கிறது. என் செய்வேன் தேன் மொழியாள், சேல்விழியாள் சிங்கார நடையாள், முத்துகள் சிந்தும் புன்னகையாள், பூங்கொடி நடையினள் போய் விட்டாளே என்னை தவிக்க விட்டுவிட்டு! தங்கநிறத் தளிர் மேனியாளை பிரிந்து இருக்க முடியவில்லையே! இதுதான் காதலா! நான் அவளை அடைந்தாகவேண்டும், இல்லையேல் இறந்தாக வேண்டும். நாளை மாலை "வருக" என்று கூறிச் சென்ற கோமளாங்கி மறவாமல் தன் மகனை அனுப்புவாளோ அல்லது மறந்து விடுவாளோ! எப்படி கழிப்பது இந்த மிக நீண்ட காலத்தை!" என்று கூறிக் கொண்டான். பித்தனுனான்; பாலனுனான்; ஏன்? பேயனுனான். தான் ஒரு தளபதி என்பதை மறந்து தையல் ஒருத்தியின் மோக வலையில் வீழ்ந்து கட்டுண்டு கிடந்தான்வீரன் நெப்போலியன்!

அடுத்த நாள் ஜோஸபைன் அனுப்பி வைத்தாள் தன் மகனை. நெப்போலியன் வந்தான் தன் காதல் பொக்கிஷத்தை தேடி! சந்தித்தனர் இருவரும் முதலில் சங்கோஜம், பின்னர் பிணக்கு, அதன் பிறகு பேரின்பம் என்ற முறையில் இருவர் காதலும் முதிர்ந்தது. இருவரும் சந்தித்த பதினைந்து தினங்களுக்குள் இணை பிரியாத காதலர்களாயினர்.

இந்த இரகசியத்தை அறிந்த "பாராஸ்" என்னும் அதிகாரி இருவரையும் திருமணம் புரிந்து கொள்ளத் தூண்டினர். கேட்க வேண்டுமா? இரும்பு காந்தத் தோடு சேர்ந்தது. ஆம் நெப்போலியன் ஜோஸபையினின் இரண்டாம் கணவனுனான்.

6—3—1796 ஆம் அன்றுதான். சட்டப்படி மணம் புரிந்து கொண்ட தம்பதிகளாயினர். தேன் போல்

வாழ்ந்தனர்; தென்றல் போல் உலவினர்; பாலின் சுவையைவிட, பழத்தின் சுவையையவிட, புதிய தொரு தீஞ் சுவையை காதலில் கண்டு அனுபவித்தனர். அப்போது நெப்போலியனுக்கு வயது இருபத்தாறு, ஜோஸபைனுக்கு வயது இருபத்தெட்டு. மனைவி வயதில் இரண்டாண்டுகள் பெரியவ ளாயினும் அன்பில் இருவரும் சமமா யிருந்தனர்.

திருமணம் நிகழ்ந்த வெகு விரைவில் அதாவது 1796-ஆம் ஆண்டில், நெப்போலியன் இத்தாலியிலிருந்த பிரஞ்சு-சேனைக்கு தலைவனுக்கப் பட்டான்.

இருபத்தாறு வயதுடைய இளைஞன் நெப்போலியன் பெரும் பொறுப்பை ஏற்று திறம்பட நடத்துவதைக்கண்டு சில இராணுவ வீரர்கள் பொறாமை அடைந்தனர்! இருந்தும் நெப்போலியன் அனைவரையும் தன் இன்ப மொழிகள் மூலமும் புன்சிரிப்பின் மூலமும் அவனுக்கு கீழ்படிந்து நடக்கும்படி செய்து கொண்டான்.

அந்தச் சமயத்தில் தான் அமெரிக்காவில் ஏற்பட்டிருப்பதைப் போல் குடியரசு பிரான்சிலும் ஏற்பட்டது. இந்த குடியரசின் எதிரொலி மற்றெல்லா ஐரோப்பிய நாடுகளிலும் கேட்கலாயிற்று. இந்த குடியரசு என்னும் கூப்பாடு மற்ற நாடுகளில் கேட்கவே முடி மன்னர்கள் பயந்தனர்; பிரபுக்கள் பிரமித்து நின்றனர். பணக்காரர்கள் படபடத்த நெஞ்சின ராயினர். முதலாளிகளின் முகம் சுருங்கி விட்டது. எனவே அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 'குடியரசு' என்னும் உயர்ந்த உன்னதமான கொள்கை தங்கள் நாடுகளில் பரவாமல் தடுத்து நிறுத்த முயன்றனர்.

அத்துடன் நின்று விடவில்லை. பிரான்சில் ஏற்பட்டிருக்கும் குடியரசு என்னும் குழந்தையைக் கொல்லவும் தீர்மானித்து விட்டனர்! சுற்றிலுமிருந்த பிரபுக்கள் அரச வம்சத்தினருக்கு உதவி செய்தனர். இவர்களின்

தீவிர முயற்சியால் பிரஞ்சுக் குடியரசு ஆட்டங் கொடுக்க ஆரம்பித்து விட்டது.

இந்த சூழ் நிலைகளை உணர்ந்தான் நெப்போலியன். தன் நாட்டிற்காக, குடியரசை நிலை நாட்டுவதற்காக தன் வாழ்க்கையை தியாகம் செய்யத் தீர்மானித்து விட்டான்.

நெப்போலியனும் அவன் படைவீரர்களும் போதிய அளவு வசதியற்று இருந்தனர். வீரர்கள் பனியாலும் பசியாலும் அவதியுற்றனர். இந்த நிலைமையை உணர்ந்த நெப்போலியன் தன் படை வீரர்களிடம்:—

"அன்புள்ளவர்களே! அஞ்சாத நெஞ்சம் படைத்த மாவீரர்களே! உங்கள் நிலைமையை அறியாதவனல்ல நான். உணவும், உடையும் இன்றி தவிப்பது, பனியால் வாடுவது அனைத்தும் எனக்கு நன்கு தெரிகிறது. நமது அரசாங்கம் நமக்குச் செய்ய வேண்டிய வசதிகளை சரியாகச் செய்து கொடுக்க வில்லை என்பதும் சரிதான். அவர்கள் ஏன் செய்யவில்லை? என்பது தான் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய பிரச்னை. அவர்கள் நமக்கு உதவி செய்யக் கூடிய நிலைமையில் இல்லை. நமது தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வசதியும் வழியும் அவர்களுக்கு இப்போது தோன்ற முடியாது. என்ன செய்வது. இருந்தும் இந்த வேதனையான நிலைமையை பொறுமையுடன் தாங்கிக் கொள்ளும் உங்கள் சகிப்புத் தன்மையை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

வெஞ்சமரில் நெஞ்சு நிமிர்ந்து போர் புரியும் வீரர்களே! நீங்கள் கவலையை ஒழியுங்கள் வளம் பொருந்திய பல நாடுகளை உங்களுக்கு சொந்தமாக்கி வைக்கின்றேன். நல்ல உணவும், விருப்பமான உடையும் நிச்சயமாக கிடைக்கும் தோழர்களே கிடைக்கும்! வெற்றிமாது புகழ் மாலை தன் கரத்தி லேந்திக் கொண்டு உங்களை நோக்கி வரப் புறப்பட்டு விட்டாள். இந்த நல்ல சமயத்தை நெகிழ விடாதீர்கள் வீரர்களே நீங்கள் விவேக

முள்ளவர்கள்! சிந்தியுங்கள்!"என்று உருக்கமான உரைகள் மூலம் வீரர்களின் உடம்பில் மறைந்திருந்த வீர உணர்ச்சியை கிளறிவிட்டான் நெப்போலியன். இந்த உரைகளை காது கொடுத்து கேட்ட வீரர்கள் புத்துயிர் பெற்று போருக்கு எழுந்தனர்.

இந்த வீரர்களின் முதல் தாக்குதல் ஆஸ்தீரியர், சார்டீனியர் மீது ஆரம்பமாயிற்று; எவராலும் எளிதில் அசைக்க முடியாத "மண்டுவா" கோட்டையை மூன்றே நாட்களில் தரைமட்ட மாக்கி விட்டான் வீரன் நெப்போலியன். அவன் முன்னர் நிற்க முடியாமல் ஓட்டம் பிடித்தனர் எதிரிகள். சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டவுடன் சார்டீனிய மன்னன் சரணடைந்தான் நெப்போலியனிடம். அத்துடன் ஓர் ஒப்பந்தமும் செய்து கொண்டான்.

அந்த ஒப்பந்தப்படி மூன்று பெரிய கோட்டைகள் பிரான்சு நாட்டிற்கு சொந்தமாயின.

வீரத்தால் நெப்போலியன் பெற்ற இந்த பெரும் வெற்றி மற்ற நாடுகளை நடுங்க வைத்தது. ஆனால் பிரான்சு மக்கள் நெப்போலியனை போற்றிப் புகழ்ந்தனர். இந்த வெற்றிகளுக்குக் காரணம் வீரர்களின் பலமல்ல, நெப்போலியனின் உள்ள உரமும், அவன் கையாண்ட யுத்த தந்திரங்களுமே யாகும்.

ஒரு தடவை, "போ" ஆற்றங் கரையில் ஐம்பதினாயிரம் வீரர்களைக் கொண்ட ஆஸ்திரிய சேனை தங்கியிருந்தது. இதை அறிந்த நெப்போலியன் தன் சேனைகளை இரவோடிரவாய் அந்த ஆற்றின் கரையோரமாகவே அழைத்துச் சென்று ஆற்றைக் கடந்து அணி வகுத்து நின்றான். அவர்களுக்குத் தெரியாமல் ஆற்றைக் கடந்து விட்டது பிரஞ்சு சேனை என்பதை அறிந்த ஆஸ்திரியர்கள் ஆத்திரத்தால் விரைந்து சென்று தாக்கினர். இருபடைகளும் கடுமையாக போர் புரிந்தன. முடிவு நெப்போலியன் வெற்றி பெற்றான்.

நெப்போலியன் போர் புரிவதற்குக் காரணம் சுயநலமல்ல; தற்காப்பு என்று கூறுவதும் தவறு. தன் பொன்னுட்டை எந்நாடும் தாக்கக்கூடாது—பிரான்சு மற்ற நாடுகளால் அலக்கழிக்கப்பட்டு அடிமையாகக்கூடாது என்ற பரந்த நோக்கமும், விரிந்த மனப் பான்மையுமேயாகும். இந்த அடிப்படை காரணத்திற்காக நெப்போலியன் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டு வந்தான்.

நெப்போலியன் பிரான்சு நாட்டுப் படைத் தலைவனுகப் பணியாற்றி வந்தான். ஆனல் அவனுக்கும், அவன்பால் ஒப்படைக்கப்பட் டிருக்கும் வீரர்களுக்கும் பிரான்சு அரசாங்கம் தேவையான உணவுப் பொருள்களை அனுப்பவில்லை. வேறு எந்தவிதமான வசதியும் செய்து தரவில்லை. இதனல் பெரும் படையினை காப்பாற்றவேண்டிய முழு பொறுப்பும் நெப்போலியனுக்கு ஏற்பட்டுவிட்டது.

என்ன செய்வான்? ஆயிரக் கணக்கான வீரர்களின் வயிற்றை நிரப்ப வேண்டு மல்லவா? மிகவும் வருந்தினன்.

இந்தச் சிக்கலான சமயத்தில் மிலான் நகர மாந்தர் பொருளுதவி செய்ய முன்வந்தனர். காலமறிந்து உதவி புரிந்த மிலான் நகர மக்களை மாவீரன் மனமார வாழ்த்தி, அவர்கள் அளித்த பொருளுதவியின் துணைகொண்டு தன் வீரர்களுக்கு உணவு, உடை முதலியவைகளைத் தந்து மகிழ்ந்தான். அந்தப் பணத்தைச் சிக்கனமாகச் செலவழித்து, இடையிடையே போருக்கு வேண்டிய கருவிகளையும் வாங்கினன்.

இந்தச் சமயத்தில் நெப்போலியன் தன் படை வீரர்களிடம் மிகவும் அன்பாகப் பேசுவான்; அவர்களின் மனதை எப்போதும் சந்தோஷமாகவே வைத்துக்கொண் டிருந்தான். அவன் ஒரு நாளைக்கு

இரண்டு மணி நேரம் மட்டும் தூங்குவான். மற்ற காலங்களில் அவன் மூளை சுழன்று சுழன்று வேலை செய்யும்.

நெப்போலியனை ஆஸ்திரிய சேனைகள் பலமுறை தாக்கியும் ஒருமுறையும் வெற்றி பெறவில்லை. நெப்போலியன் ஆறு ஆண்டுகளாக ஆஸ்திரியர்களுடன் போர் புரிந்ததன் விளைவாக இத்தாலி முழுவதும் பிரான்சுக்குச் சொந்தமாயிற்று. இத்தாலியிலுள்ள மிலான் நகரில் நெப்போலியன் தன் மனைவி ஜோஸபைனுடன் ஒரு அரண்மனையில் வாசம் செய்தான்.

நெப்போலியன் தனக்கு மட்டும் வசதிகள் தேடிக் கொள்வதில் கவனம் செலுத்தவில்லை. நாட்டு மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் சரிவரச் செய்து தந்தான். தரைப்படையை சீர்திருத்தம் செய்தான். கடற்படையில் சில மாற்றங்களைச் செய்தான். இந்தச் சமயத்தில் நெப்போலியனின் வீரப்படையின் முன் எந்த நாட்டுப் படையும் நிற்கமுடியாத அளவுக்கு பலமும், ஒற்றுமையும் உடையதாயிருந்தது.

வீர நெப்போலியன் இத்தாலியில் தன் வேலைகளைச் சரிவர செய்து முடித்துவிட்டு 1797-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பாரீஸ் நகரை அடைந்தான். நகர மக்கள் அவனை மிகவும் மரியாதையுடனும், அன்புடனும் ஆரவாரத்துடனும் வரவேற்று உபசரித்தனர். அந்த மாவீரனுக்கு, பிரான்சு நாட்டின் மானத்தைக் காப்பாற்றிய வீரனுக்கு சிறந்த பட்டங்களை தந்து மகிழ்வித்தனர்.

மக்கள் நெப்போலியனிடம் காட்டிய அன்பு நாளுக்குநாள் வளர்ந்தது. பிரான்சு நாட்டிற்கு அவனே அரசனாக வேண்டும் என்றும் மக்கள் எண்ணத் தொடங்கினர். இவ்விதம் நெப்போலியன் மக்கள் மனதில் மன்னனாக காட்சி அளிக்கும் தோற்றம் அன்றிருந்த அரசியல் சபை உறுப்பினர்கள் மனதில் பொறாமைப்

புயலைக் கிளப்பிவிட்டது. என்ன செய்வது என்று எண்ணிக்கொண் டிருந்தனர் அரசியலில் அமர்ந்தோர்.

அப்போது மன்னனாக வேண்டும் என்ற மக்கள் கருத்தும், அரச பதவி ஆசையும் அவன் மனதை கவரவில்லை. வீரனல்லவா அவன். வீரன் மட்டுமல்லவே விவேகமும் உடையவனன்றோ! ஆகவே அவன் தன் வெற்றியையும் புகழையும் நிலைநிறுத்திக் கொள்ளவே விரும்பினான்.

உடனே நெப்போலியன் அரசியலாரிடம்.சென்று "முதன் முதலில் "எகிப்து" நாட்டின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றிக் கொண்டபின், இந்தியாவின் மீதும் படையெடுத்துச் செல்லப்போகிறேன்" என்றான்.

நெப்போலியன் பிரான்சு நாட்டைவிட்டு வெளி யேறினால்போதும் என்று எண்ணிக்கொண் டிருந்த அரசியலார் அவனுக்கு நாற்பதினாயிரம் வீரர்களும், முப்பது கப்பல்களும், மற்றும் வேண்டிய வசதிகளும் தந்து வழியனுப்பினர்.

நெப்போலியன் பெரும் படையுடன் பிரான்சு நாட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டான் என்ற செய்தி பல நாடுகளுக்கும் பறந்து சென்றது. இதனைக் கேள்வி யுற்ற எல்லா நாடுகளும் நெப்போலியன் எங்கே செல் கிறான், எந்த நாட்டைத் தாக்கப் போகிறான் என்பதை அறியாமல் திகைத்தனர். சிலர் தங்கள் நாடுகளுக்கு ஆபத்து வரக்கூடாது என்று கருதி பயந்தனர். இவர் களில் சிறப்பாக நெப்போலியன்மீது மிகவும் நாட்டம் செலுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள். அவர்கள்தான் நெப்போலியனின் உண்மையான வலிமையையும், அறிவுத் திறனையும் நன்கு உணர்ந்தனர். "நெப்போலியன் இருக்கும் வரையில் பிரான்சு நாட்டில் காலெடுத்து வைக்க முடியாது. அதுமட்டுமல்ல நாமும் நிம்மதியுடன் இருக்க முடியாது" என்று சொல்லிக்கொண்டனர்.

அதனல் அவனை ஒழித்துக்கட்ட மற்ற நாடுகளைக் காட்டிலும் தீவிர முயற்சி எடுத்தனர்.

நெப்போலியன் புறப்பட்டான் என்றறிந்த ஆங்கிலேயர்கள் மிகவும் திறமை வாய்ந்த "நெல்சன்" என்னும் பெருவீரனை ஆற்றல் மிகுந்த கடற்படைக்கு தலைமை தாங்கச்செய்து நெப்போலியனை பின்தொடர்ந்து சென்று தாக்க பணித்தனர். அவனும் நெப்போலியனை நெடுங்கடலில் தேடியலைந்துகொண் டிருந்தான்.

புயலென போர்க்களம் நோக்கி புறப்பட்ட நெப்போலியன் தன் படை வீரர்களுக்கு, "வெற்றி வீரர்களே! நாம் இப்போது முகம்மதியர்களின்மேல் படையெடுத்துச் செல்கிறோம். படைவீரர்களாகிய நாம்-உலகில் மக்களாக வாழநினைக்கும் நாம் - நம்போன்ற மனிதனை மரியாதையுடன் நடத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் சிறப்பாக பிறநாட்டவர்களை அவமதிக்கும் புத்தி நம்மிடம் நிச்சயமாக இருக்கக்கூடாது. நீங்கள் அவர்களிடம் மதவாதம் செய்தல் கூடாது. "எங்கள் கிறித்துவமதம் உயர்ந்தது, எங்கள் வேதம் ஈடு இணையற்றது; உங்கள் முகம்மதிய மதம் குறைவானது, தாழ்வானது; உங்கள் 'குர்ஆன்' குறைவுபாடுடையது" என்றெல்லாம் கூறக்கூடாது. எல்லோரையும் சமநோக்குடன் பார்த்துப் பழகவேண்டும். மனிதன் அவனவன் அறிவுக்குத் தகுந்தவாறு பழக்க வழக்கங்களை உண்டாக்கி வைத்துக்கொண்டான். அது யாருடைய குற்றமுமல்ல, உலகில் மனிதன், மனிதனை மனிதனுகக் கருதி பழகவேண்டும். இந்தச் சிறந்த மனிதப் பண்புடன் நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். வேற்று நாட்டான், வேறு மொழியான் என்ற விரோத மனப்பான்மை கொள்ளாமல் அனைவரிடமும் அன்போடு பழகுங்கள்" என்று நல்லுரைகளை புகட்டினன்.

அதன் பிறகு நெப்போலியன் "மால்ட்டா" என்னும் தீவின் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றிக் கொண்டான். "அலெச்சாண்டரியா" என்னும் நகரை தாக்கினன். அங்குள்ள பெருஞ் சேனை நெப்போலியனைத் தாக்கிற்று; இருந்தும் இறுதியில் அலெச்சாண்டரியா நெப்போலியனைச் சரணடைந்தது. பெரும் வெற்றி பெற்ற வீரன் நெப்போலியன் உடனே ஒரு அறிகை விடுத்தான்.

அதில் :—

"அன்புள்ள எகிப்த்து நாட்டு மக்களே! அஞ்சாதீர்கள் நெப்போலியன் நாசவேலை மட்டும் செய்யும் நய வஞ்சகன் அல்ல! உங்களுடைய உரிமைகள் அனைத்தும் பத்திரமாகப் பாது காக்கப்படும். உங்களுடைய மதம், பழக்க வழக்கங்கள், மொழி இவைகளை நாங்கள் மாற்ற மாட்டோம். அஃது எங்களுக்கு சம்மதம். பெரும் கவலையோ, கலக்கமோ அடையாமல் தைரியமாக இருக்கலாம்." என்று இருந்தது.

அதன் பிறகு அந்த நாட்டில் கல்விச் சாலைகளை அதிகமாக்கினன். கைத்தொழிலை அபிவிருத்தி செய்தான். வியாபாரம் முன்னேற்ற மடையச் செய்தான். இந்த நல்ல காரியங்களைச் செய்து மக்களால் புகழப்பட்டான்.

மக்கள் புகழ்மாலையும், வெற்றிமாலையும் மார்பிலே புரள மாவீரன் நெப்போலியன் தன் படையை நடத்திக் கொண்டு "கெய்ரோ" என்றும் நகரை நோக்கிப் பயணமானன்.

வழியில் நீண்ட தொரு பாலைவனத்தைக் கடக்க வேண்டியிருந்தது. அதன் நீளம் ஏறக்குறைய அறுபது மைல். வெப்பத்தின் கொடுமையைத் தாங்க முடியாமல் தவித்தனர் வீரர்கள். நீர் கிடைக்காமையால் நாவறண்டு மனந் தளர்ந்தனர். அவர்கள் தளர்ச்

சியைக் கண்ட நெப்போலியன் ஊக்கமூட்டிய வண்ணம், நடத்திச் சென்றான். அந்தப் பெருங் கஷ்டங்களைத் தாண்டி கெய்ரோ நகரை அடைய பன்னிரண்டு நாட்கள் சென்றன.

கெய்ரோவில் நடந்த போரில் பிரஞ்சு சேனையே வெற்றி பெற்றது. உடனே நெப்போலியன் அந்த நாட்டை புது முறையில் சீர்திருத்தம் செய்தான். புதிய சட்டங்களையும் உண்டாக்கினான். மருந்துவச் சாலைகள், கல்விக் கழகங்கள், தொழிற்சாலைகள், முதலியவற்றை நிறுவினான். எல்லா மக்களிடம் அன்பைக் காட்டி, அவர்களுடைய அன்பையும் பெற்றுக்கொண்டான். இதனால் எகிப்த்து நாட்டு மக்கள் மாவீரன் நெப்போலியனை மனமார வாழ்த்தினர்.

பிரஞ்சுப் படையைத் தேடித்திரிந்து கொண்டிருந்த ஆங்கில நாட்டு கப்பல் தலைவன் நெல்சன், திடீரென்று ஒரு நாள் பிரஞ்சுப் படையைத் தாக்கினான். அப்போது சூரியன் மறைந்து விட்டான். எதிர்பாராத தாக்குதலைக் கண்ட பிரஞ்சுப் படை திகைத்தது. பிரஞ்சுக் கடற்படை வீரன் "புரூயீஸ்" என்பவன் செய்வதொன்றும் தெரியாது விழித்தான். நெல்சன் திறமையாகத் தாக்கி பிரஞ்சுக் கப்பல்களைத் தீக்கிரையாக்கினான். இறுதியில் பிரஞ்சுப் படை தோல்வியுற்றது. பிரஞ்சுப் படை தலைவன் "புரூயீஸ்" தாக்குதலில் சிக்கி உயிர்துறந்தார்.

அப்போது பிரான்சில் நெப்போலியன் இல்லை. "புரூயீஸ்" நெப்போலியனின் உயிர் போன்ற நண்பன்-அவன் இறந்த செய்தியும், நிகழ்ந்த போரும் அவனை கலக்கமடையச் செய்தன.

பின்னர், நெப்போலியன் சிரியா நாட்டிலுள்ள ஆக்கர் நகரை நோக்கித் தன் படையுடன் புறப்பட்டான். சிரியாவை கைப்பற்றிக் கொண்டு இந்தியாவை

கைப்பற்ற வேண்டும் என்று திட்டம் வகுத்துக்கொண்டான்.

தன் திட்டத்தின்படியே முற்றுகையை ஆரம்பித்தான். இரண்டு மாதங்கள் வரையில் முற்றுகை தொடர்ந்து நடந்தது.

நெப்போலியன் படையை, ஆங்கிலேயர்களும், துருக்கியரும் ஒன்று சேர்ந்து தாக்கினர். நெப்போலியனுக்கும் பல இடையூறுகள் செய்தனர். அதனால் அவன் திட்டம் வெற்றி பெறமுடியவில்லை. அத்துடன் அவனிடமிருந்த உணவுப் பொருள்கள் தீர்ந்துவிட்டன. பிளேக் நோய் பல வீரர்களை மண்ணிலே சாய்த்தது. இதனால் நெப்போலியன் முற்றுகையை நிறுத்திவிட்டு எகிப்த்துக்கே செல்ல வேண்டி நேர்ந்தது.

நெப்போலியன் கெய்ரோ நகரில் இருந்த போது, இத்தாலியில் இருந்த பிரஞ்சு சேனைகள் துரத்தப் பட்டன. மேலும் எல்லா வல்லரசுகளும் சேர்ந்து பிரான்சு நாட்டைத் தாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறது." என்ற செய்தி கிடைத்தது. பொறுப் புணர்ந்த நெப்போலியன் உடனே பிரான்சுக்குப் போகத் தீர்மானித்தான். ஆனால் தான் போவது எவருக்கும் தெரியக்கூடாதெனக் கருதி, நைல் நதியை பார்வையிடச் செல்வதாகச் சொல்லிவிட்டுத் தன் உண்மையான நண்பர்களுடன் கப்பலேறிப் புறப்பட்டான். அவன் பிரான்சை அடைய நாட்கள் ஐம்பது நகர்ந்தன.

"வருகிறான் வீரன்; தாய் நாட்டின் புகழ் கொடியை தரணி முழுவதும் பரப்பிய வெற்றி வீரன் வருகிறான்" என்று நாடெங்கும் விழாக்கள் கொண்டாடி நெப்போலியனை வரவேற்றனர் பிரஞ்சு மக்கள்.

நெப்போலியன் எகிப்திலிருந்து பிரான்சுக்கு வந்தபோது, பிரான்சு மிகவும் மோசமான நிலைமை

யில் இருந்தது. ஆட்சி பீடத்தில் அமர்ந்தோர் ஒற்றுமை யற்றவர்களாய் ஒருவரை ஒருவர் பகைத்து வந்தனர். நாட்டின் நன்மையையும் குடிகளின் முன்னேற்றதையும் கருதாமல் கொடுங்கோலாட்சி புரிந்தது வந்தனர். வரிகள் என்னும் பாணத்தை மக்கள் மீது இரக்கமின்றி எய்தனர். இதனால் மக்கள் மன நோயாலும், வறுமை நோயாலும் ஏக காலத்தில் தாக்கப்பட்டு தவித்தனர்.

இந்த சீர்கேடான நிலைமையைக் கண்டான் நெப்போலியன். நாட்டில் நல்ல சூழ்நிலைமை உண்டு பண்ண வேண்டும் என்று தீர்மானித்தான். பொது மக்கள் ஆதரவு தனக்கிருப்பதைப் பயன் படுத்தி நாட்டை சீர்திருத்த முடிவு செய்துகொண்டான். அரசியல் மன்ற உறுப்பினர்களை ஒவ்வொருவராகத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான். இதன் முடிவு நெப்போலியன் முதன் மந்திரியானான்.

நெப்போலியன் மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டவுடன் அரசியல் கைதிகளை விடுதலை செய்தான். உயிருக்குப் பயந்து வெளி நாடுகளில் சென்று வாழ்ந்து வந்த இருபதாயிரம் மக்களை மீண்டும் பிரான்சுக்கு அழைத்துக் கொண்டான். நாட்டின் முன்னேற்றத்திற்காக இரவும் பகலும் இடைவிடாது வேலை செய்தான். பெண்கள் முன்னேற்ற வேலைகளை ஜோஸபைன் கவனித்துக் கொண்டாள்.

நெப்போலியனின் வேலைகளைக் கவனித்து வந்த 18-ஆம்-லூயி மன்னன் "எனக்கு மீண்டும் அரசுரிமையை அளிக்க விரும்பினால் நான் உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் நல்ல பதவியில் வைத்து சந்தோஷப் படுத்துவேன்." என்று கடிதம் எழுதி அனுப்பினான். அதற்கு "நாட்டின் நன்மையைக் கருதி நீங்கள் மன்னராதல் கூடாது" என்று பதில் எழுதி அனுப்பி விட்டான்.

அத்துடன் நில்லாமல் அரச குடும்பத்தினர் அரசு பெற வேண்டி, அழகிய இளம் பெண் ஒருத்தியைத் தூதாக அனுப்பினர். அவள் நெப்போலியனிடம் சென்று அவனை மயக்க முயன்ருள். ஆனல் அவள் உட்கருத்தை உணர்ந்த நெப்போலியன் அவளை உடனே நாட்டைவிட்டே வெளியேறும்படி உத்தர விட்டான்.

அதன் பிறகு நாட்டில் சற்று அமைதியும் திருப்தி யும் நிலவின. ஆனல் அது நீடிக்கவில்லை. ஆங்கிலே யரின் கடற்படை பிரான்சுக் கடற்கரை யோரமாய் அணிவகுத்து நின்று பட்டினங்களின் மீது குண்டு மழையைப் பொழிந்துகொண் டிருந்தது.

இத்தாலியில் இருந்த பிரஞ்சு சேனை ஆஸ்திரியர் களிடம் தோற்று விட்டது. ஆஸ்திரியர்கள் பிரான்சு மீது படையெடுத்து வந்து விட்டனர்.

இந்த சிக்கலான நிலைமையை சமாளிக்க அறிவை யும் அதைவிடச் சிறப்பாய் தைரியத்தையும் முதலாகக் கொண்டு, அறுபதினயிரம் வீரர்களுடன் ஆஸ்திரியர் கள் மீது பாய்ந்து கடும் போர் நிகழ்த்தினன். மலை யோடு மலை மோதுவது போலும் கடலோடு கடல் மோது வது போலும் ஆஸ்திரிய சேனையும், பிரான்சு சேனை யும் மோதிக் கொண்டது. ஆனல் வழக்கம் போல் நெப் போலியன் வெற்றி பெற்ருன். ஐந்து வாரங்களுக்குள் இத்தாலியில் பிரான்சு இழந்த நகரங்களைக் கைப்பற் றிக் கொண்டான். பிரான்சு மக்கள் நெப்போலிய னின் வீரத்தைப் புகழ்ந்து மகிழ்ந்தனர்.

சில தினங்களுக்குள் ஆங்கிலேயர்கள் எகிப்து நாட் டின் மீது படை யெடுத்து அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற நெப் போலியன் உடனே இங்கிலாந்தின் மீது படையெடுக் கத் தீர்மானித்தான். அவனுக்கு உதவி செய்ய நூறுயி ரம் வீரர்கள் அணிவகுத்து நின்றனர். இவர்கள் துணை

கொண்டு கடற்படை ஒன்றைத் திரட்டினன். பிரான்சு நாடே போருக்கு எழுந்தது.

அந்தத் தருணத்தில் ஆங்கில நாடு ஐரோப்பாவில் ஒரு பெரிய கடலரசாய் விளங்கிற்று. ஆம்! ஐரோப்பாவி லுள்ள எல்லா நாடுகளும்ஒன்ருகச் சேர்ந்தாலும் அதனை வெல்ல முடியாது. அத்தகைய பேராற்றல் வாய்ந்த பெருநாட்டை முறியடிக்கப் புறப்பட்டான் நெப்போலிய வீரன்.

அந்தத் தருணத்தில் ஆங்கில நாடு பஞ்சத்தால் பீடிக்கப்பட் டிருந்தது. மக்கள் உணவின்றி வருந்தி னர். ஆகவே அவர்கள் போரை விரும்பவில்லை. சமா தானம் செய்து கொள்ளவே விரும்பினர். மக்கள் நிலைமையை நன்குணர்ந்த நெப்போலியன் அவர்களின் விருப்பத்திற்கிசைந்து அவர்களிடம் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான். அந்த ஒப்பந்தத்தின்படி பிரான்சுக்காரர்கள் எகிப்தை விட்டுவிட வேண்டும். ஆங்கிலேயர்கள் மால்ட்டாவைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். இந்த உடன்படிக்கைக்குப் பிறகு இரு நாடுகளி னிடையே நட்புணர்ச்சி நடமாடத் தொடங்கி யது. பல ஆயிரக் கணக்கான ஆங்கிலேயர்கள் நெப் போலியனைக் காணச் சென்றனர். “ஃபாக்ஸ்” (Fox) என்னும் ஆங்கில நாட்டுத் தலைவனும் பிரான்சுக்கு வந்து நெப்போலியனிடம் பேசி உண்மையான உறவு கொண்டான்.

இதன் பிறகு பிரான்சில் அமைதி நிலவியது. நெப்போலியன் தன் கவனத்தை ஏழைகளிடம் செலுத்தி அவர்களுக்கு நன்மைகள் செய்து வந்தான். அதனால் நெப்போலியனைத் தங்கள் பெருந் தலைவனாகக் கருதி கொண்டாடினர். அவனுடைய ஆற்றலைக் கண்டு வியந்து அவனுடைய நினைவு என்றும் இருக்கும் பொருட்டு ஐந்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிடம் ஒன்றை கட்டி அவனைப் பெருமை படுத்தினர்.

அதன் பிறகு பிரான்சு நாட்டு மக்கள் நெப்போலியனையே பிரான்சு நாட்டின் மன்னனாக முடி சூட்டிக் கொள்ள வற்புறுத்தினர். அவர்களின் வேண்டுகோள் படி அரசனாக இசைந்தான். 1804-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் நாள் நெப்போலியன் பிரான்சு நாட்டின் மன்னனானன். அவன் பக்கலில் ஜோஸைபன் அமர்ந்தாள் அரசி என்னும் பெயருடன்.

நெப்போலியன் அரசபதவியில் அமர்ந்ததும் புதிய சட்டங்களை உண்டாக்கினான். நாட்டின் நிலைமையை உணர்த்தினான். தலைமை யேற்று நடத்தும் காரியங்களில் திறமையாளனாகவே விளங்கினான். நெப்போலியன் போர்க்களத்தில் வீரனாக மட்டுமில்லை. அரச நிர்வாகத்திலும் சிறந்து விளங்கினான்.

போர் புரியாத காலங்களில்கூட அவன் ஓய்வெடுத்துக் கொள்வதில்லை. எழைகளின் குறைகளைத் தானே நேரில் சென்று கண்டு அவைகளைத் தீர்ப்பான். அடிக்கடி குதிரையில் சவாரி செய்வான். அப்போது அவனைப் பார்க்க மிகவும் அழகாக இருக்கும். அவன் தேநீர் குடிப்பானே யன்றி மற்றைய போதை தரும் குடிகளை உபயோகிப்பதில்லை. புகைப் பிடிக்கும் தீய பழக்கமும் அவன் பாலில்லை. காலை ஒன்பது மணிக்கு தன்னைக் காண வருபவர்களிடம் பேசுவான். காலம் கடந்து வருபவர்களைக் கண்டிப்பான். வீண் பேச்சுகளை பேசுவதும் வீண் விளையாடல்களில் ஈடுபடுவதும் அவனுக்குப் பிடிக்காது.

நெப்போலியன் அதிகமாக எழுதமாட்டான்; அப்படி எழுதினனும் அவன் கையெழுத்து மிகவும் கிறுக்கலாக இருக்கும். அதற்குக் காரணம் கையின் வேகத்தைவிட அவனுடைய மூளையின் வேகம் அதிகம். அதனால் ஓர் இடத்தில் அமைதியாக இருந்து எதையும் செய்ய முடியாது. அதற்குக் காரணம் அவனிடத்திலிருக்கும் அளவு கடந்த சுறுசுறுப்பேயாகும் அதனால் அவன்

சொல்வதை எல்லாம் அமைச்சன் எழுதிக் கொள்வான். நெப்போலியன் சொல்லும் போது அவன் உலவிக் கொண்டே சொல்லுவான். அவன் சொல்லுவதை சுருக் கெழுத்தாளனும் எழுத முடியாமல் தவிப்பான். அந்த அளவுக்கு விஷயங்களை மழையெனப் பொழி வான்.

அடிக்கடி புதிய புதிய அறிக்கைகள் விடுவான். படைத் தலைவர்களுக்கும், கல்லூரிகளுக்கும், ஆட்சி யினை நடத்துபவர்களுக்கும் தன் கருத்துக்களை அடிக்க டிக் கூறிக் கொண்டே யிருப்பான். இவ்விதமாக பல திறப்பட்ட வேலைகளையும் உற்சாகத்தோடும், சுறு சுறுப்போடும், திறமையோடும் செய்து கொண்டே யிருப்பான்.

ஒரு வேலையில் ஈடுபட்டால் அதனை முடிக்கும் வரையில் தன் கைகளுக்கும், கண்களுக்கும் ஓய்வுதர மாட்டான். அவனைப் போலவே அவன் பணியாளர் களும் இருந்தாக வேண்டும் என்று வற்புறுத்துவான்.

அவன் எளிய உணவை குறைந்த அளவு அதுவும் குறைந்த காலத்தில் சாப்பிட்டுவிட்டு அரசியல் காரியங் களில் ஈடுபடுவான். இரவில் படுக்கை அறையில் அவன் மனைவி நல்ல நூல்களைப் படிப்பாள். அதைக் கேட்டுக்கொண்டே உறங்கிவிடுவான். நாள் ஒன்றுக்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு மேல் அவன் உறங்குவதில்லை. அவன் தூங்கும்போது "நல்ல செய்திகள் வந்தால் என்னை எழுப்பாதே, ஆனல் தீய செய்திகள் வந்தால் உடனே எழுப்பிவிடு, என்று உத் தரவிட்டு விட்டுப் படுப்பான்.

நெப்போலியனிடம் சோம்பல் என்பது தலைகாட்டி யதேயில்லை. அவன் தன்னலம் கருதி எதையும் செய்வ தில்லை. நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வந்தான். உலக இன்ப நுகர்ச்சியில் அவன் ஈடுபடுவ தில்லை. அவனுடைய ஒரே ஒரு எண்ணம்—ஆசை—

குறிகோள் என்ன வென்றால் பிரஞ்சு நாடு உலகத்தில் முதன்மையானதாய் விளங்க வேண்டும் என்பதே யாகும்.

நெப்போலியனுக்கு ஆங்கில நாட்டின்மீது படையெடுக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் மாறவில்லை. அவ்வெண்ணம் வளர வளர அவன் செயல் முறையைக் கையாண்டான். நாற்புறமும் போர்க் கப்பல்களால் காவல் செய்யப்படும் ஆங்கில நாட்டின்மீது படையெடுப்பது என்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை அவன் உணராமல் இல்லை. இருந்தும் அவன் ஆசை அவனை அந்நாட்டின் மீது படையெடுக்கவே தூண்டிக் கொண்டிருந்தது.

நெப்போலியன் மூன்று இலட்சம் வீரர்களைத் திரட்டிக் கொண்டான், அத்துடன் இரண்டாயிரம் பீரங்கிப் படகுகளையும் தயார் செய்து கொண்டான். போலோன் என்னும் இடத்தில் தன் இராணுவ கடற்படைகளை அணிவகுத்துக் கொண்டு இங்கிலாந்தின் மேல் பாய சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால் நெப்போலியன் எதிர்பார்த்தபடி நிகழவில்லை. இவன் படைவீட்டில் தங்கித் தன் படைகளுக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாய் ருஷ்யாவும் ஆஸ்திரியாவும் பிரான்சின் மேல் பாய்ந்தன; இதை கண்ட நெப்போலியன் ஆங்கில நாட்டின் மீது பாய தயார் செய்து வைத்திருந்த தன் சேனையுடன் புறப்பட்டு சென்றான். ஆஸ்திரியர்களை விரட்டி யடித்தான். இதனைக் கண்ட ருஷ்ய மன்னன் நெப்போலியனுடன் போர் புரிய அஞ்சி போரை நிறுத்திக் கொண்டான். நெப்போலியன் வாகை சூடி பிரான்சுக்குத் திரும்பினான்.

இதன் பிறகு இங்கிலாந்துக்கு முதன் மந்திரியாக 'ஃபாக்ஸ்' என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் நெப்போலியனின் உண்மையான நண்பர். ஆகவே இருநாடுக

விடையே நட்பு உண்டாகும் என்று எதிர்பார்த்தனர் மக்கள். ஆனல் ஃபாக்ஸ் திடீரென மறைந்தார். தோன்றிவிட்டது மீண்டும் போர்.

பிரஷியாவும், ருஷ்யாவும் ஒன்று சேர்ந்து பிரான்சைத் தாக்கின. ஆங்கில நாட்டுக் கடற்படை கரையோரங்களில் இருந்த பட்டினங்கள் மீது குண்டுகளைப் பொழிந்தன.

நெப்போலியன் முதன் முதலில் பிரஷ்யர்களைத் தாக்கினன். திறமையாகவும் பலத்துடனும் தாக்கியமையால் ஒரு மாதத்திற்குள் பிரஷ்யாவைக் கைப்பற்றிவிட்டான். பின்னர் தன் படைகளை ருஷ்ய நாட்டை நோக்கி நடத்திக் கொண்டு சென்ருன். இரு நாடுகளும் குன்ருேடு குன்றுகள் மோதுவதுபோல் மோதிக் கொண்டன. ருஷ்யர்களுக்குத்தான் தோல்வி கிடைத்தது. ருஷ்ய மன்னன் நெப்போலியனிடம் உடன்படிக்கை செய்துகொண்டான்.

பிரஷிய நாட்டு மன்னனிடமிருந்து கைப்பற்றிய நாட்டில் பாதியை அவன் கேளாமலே அவனுக்குக் கொடுத்தான். நெப்போலியனின் உயர்குலச் சிறப்பைக் கண்டு உலகம் வியந்தது.

பிறகு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டான். கைத்தொழில், வாணிபம் இவைகளை வளர்த்தான். நாற்பதினயிரம் மைல் நீளமுள்ள பாதைகளை அமைத்தான். பதினன்கு பாலங்கள் கட்டினன். இரண்டு பெரிய கால்வாய்கள் வெட்டினன். அதன் பிறகு பிரான்சு விழிப்படைந்தது. நெப்போலியனைப் போற்ருதார் இல்லை.

நெப்போலியன் தன் தம்பி "லூயி" என்பவனை ஹாலந்து நாட்டின் அரசனுக்கினன். அப்போது அவனுக்கு, "ஒருவருக்கும் நீ தீங்கு செய்யாதே. மக்கள் இன்பமே மன்னன் இன்பம்" என்று புத்தியினைக் கூறினன்.

போர்ச்சுக்கல், ஸ்பெயின் என்னும் இருநாடுகளையும் கைப்பற்றிக்கொண்டான். ஒருசமயம் நெப்போலியன் ஸ்பெயினுக்குச் சென்றிருந்தான். உடனே ஆஸ்திரியச் சேனை பவேரியாவுக்குள் நுழைந்தது. இதனை அறிந்த நெப்போலியன் விரைந்து சென்று தாக்கினான். ஆஸ்திரியர்கள் புறங்காட்டி ஓடினர். அவர்களைத் துரத்திச் சென்று ரேட்டிஸ்பன் (Ratisbon) என்னும் கோட்டையைத் தாக்கினான். அங்கு போர் நடைபெற்ற போது நெப்போலியனின் காலில் அடிபட்டது. இருந்தும் குதிரையேறி தன் வீரர்களை ஊக்கப்படுத்திக் கொண்டேயிருந்தான். பலமான அந்தக் கோட்டையை எளிதில் தாக்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் நெப்போலியன், "இந்தப் போரில் தங்கள் முழுத் திறமையையும் காட்டுவோருக்கு பரிசு உண்டு" என்று கூறினான். அதன்படி பரிசும் அளித்தான். இந்தக் கோட்டைக்குள் நுழையப் பெருமுயற்சி செய்தவன் லான்சு என்னும் படைத்தலைவனாவான். அதன்பின்னர் வியன்னாவையும் நெப்போலியன் கைப்பற்றினான்.

ஒருசமயம் நெப்போலியன் ருஷ்ய மன்னனிடம் சிலகாலம் தங்கியிருந்தான். அப்போது ருஷ்ய மன்னன் தன் தங்கையை நெப்போலியனுக்கு திருமணம் செய்து கொடுக்க விரும்பினான். நெப்போலியனும் தான் அரச பரம்பரையைச் சார்ந்த ஒருத்தியை மணந்துகொண்டால் போர் ஓய்ந்து அமைதியுறலாம் என்று கருதினான். அந்த எண்ணத்தை தன் மனைவி ஜோஸபைனுக்கு எழுதி அனுப்பினான். அதில்:—

"அன்புள்ள காதலி ஜோஸபைன், நான் உன்னையன்றி எவரையும் காதலித்தறியேன். இன்னும் காதலிக்கின்றேன். கண்ணே! ஐரோப்பிய வல்லரசுகள் என்மீது பகை கொண்டிருப்பது நீ அறியாததல்ல. அரசவகுப்பினர் பிரான்ஸில் இழந்த அரச பதவிகளைக் கைப்பற்ற செய்யும் முயற்சிகளும் உனக்குத் தெரியும்.

எப்போதும் போர் போர் என்று இருப்பது தவிர்த்து நாடு அமைதியுற வேண்டும் என்பது என் எண்ணம். இது உனக்கு சரியென்றே தோன்றும். ஆகவே நான் அரசபரம்பரையைச் சேர்ந்த ஒருத்தியை மணந்தால் நாட்டில் நல்ல நிலைமை ஏற்படும். போர் ஒழியும். எனக்குப் பின்னர் இந்நாட்டை ஆள ஒரு மகன் தேவை. இல்லையேல் நாடு குழம்பிவிடும். ஆகவே ருஷ்ய மன்னனின் தங்கையையாயினும், ஆஸ்திரிய மன்னனின் மகளையாகிலும் நான் மணந்துகொள்ள வேண்டும். என் மகன் அரச பரம்பரையைச் சேர்ந்தவனாக இருந்தால்தான் மக்கள் அவனை அரசனாக ஏற்றுக்கொள்ள இசைவர். ஆகவே நாட்டின் நன்மையைக் கருதி நான் வேறு மணம் புரியத் துணிந்துள்ளேன். நீ இதில் குறுக்கே நிற்கமாட்டாய் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. இந்த நல்ல காரியத்தை நீ செய்தால் உன்னை உலகம் போற்றும்" என்று இருந்தது.

இந்தக் கடிதம் கண்டதுமுதல் பாவம்! ஏழைப் பெண் என்ன செய்ய முடியும்? ஏக்கமே வடிவமானாள். தூக்கமே பிடிக்காமல் இரவெல்லாம் அழுவாள். ஆறுதல் அளிப்பாரின்றி அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள்.

நெப்போலியன் வந்தான். அவளிடம் தான் அவளை விலக்க நேர்ந்தமைக்கு காரண காரியங்களை எடுத்து விளக்கினான். ஆனாலும் அவள் அதனால் ஆறுதல் பெறவில்லை. அடியற்ற மரம்போல் நிலத்தில் வீழ்ந்தாள். நெப்போலியனும் அன்றிரவெல்லாம் என்ன செய்வதென்று தோன்றாமல் சிந்தித்தான். கடைசியில் தன் மனைவி, அருமைக் காதலி ஜோசபைனைக் கைவிடவே தீர்மானித்தான்.

1809-ஆம் ஆண்டு டிசம்பர் பதினைந்தாம் நாள் மக்களை கூட்டி, தான் தன் மனைவியைப் பிரியவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறினான். அவன் பேசிய

பின்னர் ஜோசபைன் எழுந்து பேச முயன்ருள். எப்படி வரும் வார்த்தைகள்? பாவம் தூக்கம் அவள் தொண்டையை அடைத்துவிட்டது. ஆனல் அவள் கையில் வைத்திருந்த காகிதச் சுருள் வாசிக்கப்பட்டது. அதில், "நாட்டின் நன்மைக்காகவும், மக்களின் நலத்திற்காகவும் நான் என் உயிரினும் உயரிய கணவரைப் பிரிகிறேன். எங்கள் நட்பு சாதாரணமானதன்று. இந்தப் பிளவு எனக்குத் தரும் வேதனை சொல்லி முடியாது. இருந்தும் நாட்டு நலம் கருதி பிரிகிறேன். நாடு வாழ்வதாக" என்று எழுதப்பெற்றிருந்தது.

நெப்போலியன் கண்களில் நீர் பெருகியது. அவளைக் கட்டி அணைத்தான். ஆனல் அவள் மூர்ச்சையானள். பின்னர் பிரிவுச் சடங்கு நடைபெற்றது. ஜோசபைன் தனித்துவாழவேண்டிய வசதிகளெல்லாம் செய்துகொடுத்தான் நெப்போலியன்.

அதன்பிறகு யாரை மணப்பது என்ற பிரச்னை எழுந்தது. ஒருசிலர் ருஷ்ய மன்னன் தங்கையை மணப்பதே சரி என்றனர். பெரும்பான்மையோர் ஆஸ்திரியநாட்டு இளவரசி மேரி லூயிசா (Marie Louise) வையே மணந்து கொள்வது நல்லது என்று முடிவு கட்டினர்.

மேரிலூயிசா நல்ல அழகுடன், அறிவும் நிறைந்தவள். ஆகவே நெப்போலியன் ஆஸ்திரிய அரசனுக்குத் தன் கருத்தைத் தெரிவித்தான். இந்த செய்தி மன்னனுக்கு மகிழ்ச்சியை அளித்தது. ஆஸ்திரிய நாட்டு இளவரசியும் நெப்போலியனை மணக்க இசைந்தாள்.

1810-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் நெப்போலியனுக்கும், மேரிலூயிசாவுக்கும் திருமணம் மிக சிறப்பாக நடைபெற்றது. ஓராண்டு கழிந்ததும் நெப்போலியன் ஓர் ஆண் குழந்தைக்கு தந்தையானன்.

இந்த நல்ல செய்தி துப்பாக்கி வெடிகளின் மூலம் நாட்டுக்கு அறிவிக்கப் பட்டது.

இந்த நல்ல செய்தியைக் கேட்ட நெப்போலியனின் மாஜி மனைவி ஜோஸபைன் மகிழ்ச்சி யடைந்து "உங்களுடைய வாழ்க்கையில் இருந்த ஒரு பெருங்குறை நீங்கி விட்டது, தங்களுக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தி எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஊட்டுகிறது, தங்கள் குழந்தையைக் காண ஆவல் உள்ளவளா யிருக்கிறேன்" என்று கடிதம் வரைந்து அனுப்பினுள்.

நெப்போலியன் கடிதம் கண்டு மகிழ்ந்து ஜோஸபைனை வரவழைத்து குழந்தையைக் காட்டினுன். அவளும் கண்டு இன்புற்ருள்.

o o o

ருஷ்ய மன்னன் மீண்டும் நெப்போலியன் மீது பகைமை பாராட்டினுன். அதன் காரணமாக 1812-ம் ஆண்டில் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு போருக்கு எழுந்தான். இந்த செய்தியை அறிந்த நெப்போலியன் ஐந்து லட்சம் வீரர்களுடன் ருஷ்ய நாட்டை நோக்கி நடந்தான். நெப்போலியன் வருகையை அறிந்த ருஷ்யப் படை புறங்காட்டி ஓடி வில்ஞ என்னும் நகருள் நுழைந்து கொண்டது. நெப்போலியன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்ருன். உடனே ருஷ்ய மன்னன் அந்த நகரத்தை தீக்கிரை யாக்கிவிட்டு ஸ்மாலன்ஸ்க் என்னும் கோட்டைக்குள் நுழைந்து கொண்டான். அப்போதும் நெப்போலியன் அவர்களை விடாமல் பின் தொடர்ந்தான். நெப்போலியன் கோட்டையை நெருங்கியதும் அந்த நகரையும் தீக்கிரையாக்கி விட்டு மாஸ்கோ வுக்கு ஓடினர் ரஷ்யர்கள். இந்தக் கொடிய தீயால் பலர் மாண்டனர். வெடி மருந்துகள் வெடித்து பூமியை அதிரச் செய்தன. கை யிழந்தோர், காலிழந்தோர், முகம் தீய்ந்தோர், கண்ணிழந்தோர், கதியற்ருேர் இவர்களின் எண்ணிக்கை அதிகமாயின.

வீடிழந்து கோயில்களில் மக்கள் கூட்டம் அடைப்பட்டுக் கிடந்தது.

இந்த பரிதாப நிலைமையை எண்ணி மிகவும் வருந்தினன் நெப்போலியன். ருஷ்ய மக்களை துன்புறுத்தக் கூடாது என்று தன் வீரர்களுக்கு கட்டளை யிட்டான். அதன் பிறகு ருஷ்ய நாட்டின் மூலை முடுக்கெல்லாம் படையெடுத்து வெற்றியே கண்டான் அந்த அஞ்சாத நெஞ்சன்.

நெப்போலியன் வெற்றி பெற்ற போதிலும் அவன் பெரிய நஷ்டத்தையே அடைந்தான். அவனுடைய பெரும் படையிலிருந்த ஆயிரக் கணக்கானவர்கள் இறந்து விட்டனர். வழியில் ஏற்பட்ட தொந்தரவுகள் சொல்ல முடியாது. உணவின்றி — உடையின்றி பலர் நோயுற்றனர். பிரான்சுக்குச் செல்லவும் முடியவில்லை. அங்கே தங்குவதற்கும் வசதியில்லை. அதனல் அவன் மாஸ்கோவை நோக்கித் தன் படையுடன் நடந்தான்.

மாஸ்கோவில் உடை கிடைக்கும், உணவு கிடைக்கும் உண்டு மகிழலாம் என்று எண்ணி வந்தார்கள். ருஷ்ய நாட்டின் தலை நகரம் பாழடைந்து கிடந்தது. நெப்போலியனுக்குப் பயந்த அந்நகர மக்கள் நகரை விட்டு வெளியேறி விட்டனர். இதற்குள் குளிர்காலம் வேறு வந்து விட்டது. பனியாலும் குளிராலும் பல வீரர்கள் மாண்டனர். நாளுக்கு நாள் நெப்போலியனின் படையில் வீரர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது.

மாஸ்கோவுக்கு வந்தது தவறு என்று தெரிந்து கொண்டான். மாஸ்கோவைக் கடந்து செல்வது இதைவிடப் பெருந் தவறு என்று எண்ணிய நெப்போலியன் தன் படையை வந்த வழியே திருப்பி நடத்திக் கொண்டு சென்றான்.

இந்த சமயத்தில் பாரீஸ் பட்டினத்தில் சில போர் வீரர்கள் குழப்பம் உண்டு பண்ணுவதாகச் செய்தி வந்தது. உடனே அவன் செல்ல வேண்டி யிருந்தது. படை வீரர்களும் நாட்டின் அமைதிக்காக அவனைப் போக அனுமதித்தனர். இருப்பினும் மிகவும் கேவல மான நிலைமையில் பிரஞ்சுச் சேனையை விட்டுப் பிரிய மனமில்லாத நெப்போலியன் சில தினங்கள் வரை அவர்களுடன் தங்கி இருந்தான்.

வழியே ஏற்பட்டப் பல துன்பங்களைச் சமாளித்துக் கொண்டு 'வில்னு' நகரம் வந்து சேர்ந்தனர். அங்கு தான் அவர்களுக்கு உணவு கிடைத்தது. அதன் பிறகு தான் நெப்போலியன் தன் படைவீரர்களுக்கு ஊக்கம் அளித்துவிட்டு அவர்களிடம் விடைப் பெற்றுக் கொண்டு பாரீஸ் நகரை நோக்கிப் பயணமானன்.

பிரான்சு நாடு யுத்தத்தால் தாக்கப்பட்டு கேடுற்றிருக்கும் சமயத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வல்லரசுகள் இதுவே வெற்றிபெற தக்க சமயம் எனக் கருதி பிரான்சின் மீது படை யெடுத்தன.

நெப்போலியனிடம் மன்னிப்பைப் பெற்றவர்கள், அவனிடம் பணவுதவியைப் பெற்றவர்கள், அவனுக்குக் கடமைப் பட்டிருந்தவர்கள் அனைவரும் நன்றி மறந்தவர்களாய், மாறி போருக்கு எழுந்தனர்.

நெப்போலியனுக்குத் தன் மகளை மணம் புரிந்து வைத்த ஆஸ்திரிய மன்னன் கூட மருமகனுயிற்றே என்று கருதாமல் ருஷ்யருடன் கூடி நெப்போலியன் மீது படை யெடுத்தான்.

இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பெரும் படையுடன் பிரான்சை நெருங்கினர். நெப்போலியன் ஒரு புதிய படையைத் தயார் செய்துகொண்டு எதிரிகளைத் தாக்கினன். பகைவர்களை மூன்று இடங்களில் சிதற அடித்தான். சிதறியோடிய அவர்கள் மறுபடி

யும் ஒன்று சேர்ந்து லட்சம் வீரர்களுடன் போர் புரிய வந்தனர்.

அந்த சமயத்தில் நெப்போலியனிடம் இருந்த வீரர்கள் லட்சம் பேர்களே! இருந்தும் சற்றும் அஞ்சாமல் தன் படையைப் பெர்லின் மீது ஏவினுன். படைத் தலைவர்கள் லீப்ஸிக் மீது படையெடுக்க விரும்பினர். அதன்படியே லீப்ஸிக் நகருக்குச் சென்று கோட்டையைத் தாக்கினர். கடுமையான போர். இரு புறத்து வீரர்களும் மாண்டனர். நெப்போலியன் வீரர்களுக்கு ஊக்கம் கொடுத்துக் கொண்டுதான் இருந்தான். இருந்தும் வீரர்களின் எண்ணிக்கைக் குறைந்ததாலும், வெடி மருந்துகள் செலவழிந்து விட்டதாலும் நெப்போலியன் பின் வாங்க நேர்ந்தது.

உடனே நெப்போலியன் தன் படையைக் கலைத்து வீரர்களைத் தங்கள் வீட்டிற்கு அனுப்பிவிட்டுத் தானும் பாரிஸுக்குத் திரும்பினுன். அங்கு, நெப்போலியனின் மனைவி, 'லூயிஸா' தன் தந்தையின் வஞ்சகத்தை கண்டு கண்ணீர் பெருக்கினுள். ஆனல் நெப்போலியன் அவளுடைய கண்ணீரைத் துடைத்து இனிய வார்த்தைகளால் தேற்றினுன்.

சாதாரண நெப்போலியன் பேரசனுய் திகழ்வதைக் கண்ட மற்ற நாடுகள் எப்படியும் நெப்போலியனையும், அவனுடைய அரசையும் ஒழித்துவிடவேண்டும் என்று தீர்மானித்து பிரான்சு நாட்டின் மீது படையெடுத்தன. இந்த நிலைமையைக் கண்ட நெப்போலியன் தன் அமைச்சனுன கலின்கோர்ட்டு என்பவனை எதிரிகளிடம் தூதனுப்பினுன். அந்த அமைச்சன் அவர்களிடம் சென்று நெப்போலியனின் கருத்தைத் தெரிவித்தான். அவர்கள் அதற்கு இணங்குவதுபோல் நடித்தனர். ஆனல் அவரவர்கள் படைகள் வந்து சேர்ந்ததும் தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டு, நெப்போலியனுக்கு விரோதமாகவே கிளம்பினர்.

இதற்குள் வல்லரசுகள் ஒன்றுகூடி பத்தரை லட்சம் வீரர்களுடன் பிரான்சுக்குள் நுழைந்து விட்டன. அந்தப் பெரும் படையை எதிர்ப்பதற்கு வேண்டிய படை பலம் அப்போது நெப்போலியனிடமில்லை. ஏனென்றல் பல்லாயிரக் கணக்கான பிரஞ்சு வீரர்கள் ரஷ்யாவிலும், ஸ்பெயினிலும் மாண்டு போயினர். இருந்தும் நெப்போலியன் தன் முழுத் திறமையையும் பயன் படுத்தி இரண்டரை லட்சம் வீரர்களைத் திரட்டினன்.

அன்று இரவு மூன்று மணிக்கு தன் இளம் மனைவி " லூயிசா " என்பவளிடமும், தன் மைந்தனிடமும் விடைபெற்றுப் போர்களம் நோக்கி நடந்தான்.

ருஷ்யப் படைகளைத் தாக்கினன். பிரஷியப் படைகளைத் தவிடுபொடி செய்து இரு பெரும் வெற்றிகளைப் பெற்றன்.

பாரீஸ் பட்டணத்தின் கிழக்குப் பகுதியில் போர் புரிந்து வந்தான் நெப்போலியன். அப்போது மற்றோர் புறம் பகைவர்கள் அந்நகரைத் தாக்கினர். புகழ் வாய்ந்தப் பாரீஸ் பட்டணம் அழிந்து விடக்கூடாது என்பது அவன் எண்ணம் அதனல் அவன் தன் பகைவர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள முன் வந்தான். கலென்கோர்ட்டு என்னும் அமைச்சர் முன்னின்று ஒப்பந்தம் செய்தார். அதன்படி நெப்போலியன் மன்னன் ஆவதற்கு முன்பு பிரஞ்சு நாடு எவ்வளவு பரப்புள்ளதாக இருந்ததோ அதுவரையில் வைத்துக்கொண்டு மற்றவற்றை எதிரிகளுக்குக் கொடுத்துவிட நேர்ந்தது.

இத்துடன் திருப்தி அடையாத பகைவர்கள் இன்னும் சில பகுதிகளை ஒப்பந்தத்திற்கு முரணை முறையில் கேட்டனர். இதற்கு நெப்போலியன் இணங்கவில்லை. கண்டிப்பாக மறுத்து விட்டு

"நான் சுயநலம் கருதி என் பொன்னுட்டைப் பகைவரிடம் ஒப்படைக்க ஒருக்காலும் இசையேன். வெற்றி தோல்வியைப் பற்றியும், என் உயிரைப் பற்றியும் கவலையில்லை" என்று கூறிவிட்டான்.

அப்போது பாரீஸுக்கு இருபது மைல் தூரத்தில் எதிரிகள் இருப்பதாகக் கேள்வியுற்று ஓடினன் பாரீஸை நோக்கி. ஆனல் அவன் அங்கு வந்து சேருவதற்குள் பகைவர்கள் பாரீஸுக்குள் புகுந்து விட்டனர். அங்கிருந்த பிரஞ்சு வீரர்களால் எதிரிகளை தடுத்து நிறுத்த முடியவில்லை. அரசியும் இளவரசனும் பிளாயிஸ என்னும் இடத்திற்கு போய்ச் சேர்ந்தனர். "பாரீஸ் பகைவர் வசம் சேர்ந்துவிட்டது" என்ற செய்தியைக் கேட்டான் பவுண்டன் புளூ என்னும் இடத்திற்கருகில் வந்துகொண்டிருந்த நெப்போலியன். மனம் வெதும்பினன். உடனே 'கலேன்கோர்ட்' அமைச்சனை அழைத்து பகைவர்களிடம் உடன்படிக்கை செய்து கொள்ள அனுப்பினன்.

அப்போது நெப்போலியன் ஐம்பதினுயிரம் வீரர்களுடன் பவுண்டன் புளூ என்னும் இடத்தில் தங்கியிருந்தான். கலேன்கோர்ட் பார்ஸுக்குச் சென்ருன்.

பாரீஸில் கலேன் கோர்ட் ருஷ்ய மன்னனை கண்டு நெப்போலியனுக்கு ஏதாவது உதவிசெய்யுமாறு வேண்டினன், அதற்கு "நான் தனிப்பட்ட முறையில் ஒன்றும் செய்ய முடியாது." என்ருன். மறுபடியும் 'எப்படியாகிலும் ஒரு நல் முடிவு செய்ய முற்படுங்கள்' என்ருன் கலேன் கோர்ட்டு.

"இன்று நெப்போலியன் உடன்படிக்கைக்கு இணங்கி வரலாம், நாளைக்கு அவன் மனம் வைத்தால் இந்த ஐரோபாவையே தீக்கிரை யாக்கிவிட்டால் என்ன செய்வது என்று எல்லா வல்லரசுகளும் தீர்மானித்து விட்டன." என்ருர் ருஷ்ய மன்னர்.

"நெப்போலியனுக்கு எந்த நல்ல முடிவும் கிடைக்காதா" என்ருர் அமைச்சர்.

"நான் என்ன செய்வது எவ்வளவோ தடுத்துப் பார்த்தேன் எனக்கு இப்போது கூட நெப்போலியன் மீது பகைமை கிடையாது" என்ருர் மன்னர்.

"அப்படியானல் தாங்கள் மட்டுமாகிலும் உதவி செய்யலா மல்லவா?" என்ருர் அமைச்சர்.

"நான் செய்வேன் ஆனல் என் சொல் மற்றவர் கள் செவிகளுக்கு ஏருது" என்ருர் மன்னர்.

"தாங்கள் தயவு செய்து நெப்போலியனுக்காக மற்றவர்களுடன் வாதாடுங்கள். தங்கள் பேருதவியை என்றும் மறவோம்" என்ருர் அமைச்சர்.

"நான் என்ன செய்ய முடியும். அரச குடும்பத்தி னருக்கே நாட்டைக் கொடுக்க வேண்டும் என்று அவர் கள் விரும்புகின்றனர்" என்ருர் மன்னர்.

அமைச்சர் மிகவும் சாதுர்யமாக ருஷ்ய மன்ன னிடம் நெப்போலியனுக்காக வாதாடும்படிக் கேட்டுக் கொண்டான். அன்று இரவு நீண்ட நேரம் பேசிவிட்டு படுக்கைக்குச் சென்ருர்.

அடுத்தநாள் காலே ருஷ்ய மன்னர் அரசவைக்குச் சென்று, வந்தார். கலேன் கோர்ட் என்ன செய்தி கொண்டு வருவாரோ என்று காத்திருந்தார். அவரும் வந்தார் "என்ன செய்தி" என்ருர் அமைச்சர்.

"ஒரு வழியாக முடித்து விட்டேன்" என்ருர் மன்னர்.

"என்ன முடிவு"

"உடனே நெப்போலியன் தனது நாட்டை தன் மைந்தனிடம் ஒப்புவிக்க வேண்டும்"

"அப்போது நெப்போலியன் கதி"

"நான் நெப்போலியனை இழிவு படுத்துவதைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க மாட்டேன். உடனே சென்று நெப்போலியனின் கையெழுத்தைப் பெற்று வாருங்கள்" என்றார் மன்னன்.

அன்றிரவே அமைச்சன் நெப்போலியனைச் சந்தித்தான். விஷயங்களை விளக்கினான். அவ்வளவும் பொறுமையோடு கேட்டான். "தான் நாட்டைத் துறக்கவேண்டும்" என்ற செய்தி அவனை மிகவும் வேதனைக் குள்ளாக்கிற்று" என் வலிமையினால் நான் தேடி வைத்த அரசு இது. இதனை துறக்கவேண்டும் என்று முடிவு செய்ய அவர்கள் யார்? என் நாட்டையும் பிடுங்கிக் கொண்டு என்னை அவமானப் படுத்த முடிவு செய்திருக்கின்றனர்" என்று கோபக் கனல் பறக்கக் கூறினான். ஆனாலும் சற்று பொறுமையுடன் சிந்தனை செய்து பார்த்து கோபந்தணிந்து "பிரஞ்சு நாட்டின் முன்னேற்றத்திற்காக நான் பட்டபாடு, உழைப்பு, முயற்சி எல்லாம் வீணாயிற்றே! அந்தோ! கொடுமை! கொடுமை! சகிக்க முடியாத கொடுமை!" என்று வருந்தினான்.

பின்னர் தெளிந்து

"ஐரோப்பாவின் அமைதியை நிலை நிறுத்துவதற்கு நெப்போலியன் தடையாக இருப்பதாய் அரசியலார் முடிவு செய்திருப்பதால், நான் கடவுளின் முன்னிலையில் நாட்டின் அமைதிக்காக எனது அரசினைத் துறப்பது மன்றி என் உயிரையும் கொடுக்கத் துணிந்திருக்கிறேன். என் அருமை மைந்தனுக்குச் சட்டப்படி அரசை அளித்துவிட்டு துறவு பெறுகிறேன்." என்று எழுதிக் கொடுத்தான்.

நெப்போலியன் கொடுத்த கடிதத்துடன் கலேன் கோர்ட் ருஷ்ய மன்னனிடம் சென்றான். பகைவர்கள் ஒன்றுகூடி நெப்போலியனை அரச பதவியிலிருந்து

நீக்கச் செய்த சூழ்ச்சி மக்களுக்குத் தெரிந்து மனம் பதறினர். வேறு என்ன செய்ய முடியும் அவர்களால்?

நெப்போலியன் தன் மெய்க் காவலர்களையும், போர்ப் படைத் தலைவர்களையும் வரவழைத்து என்ன செய்வது என்பது பற்றி ஆராய்ந்தான். அங்கு மர்மண்டு என்னும் படைத் தலைவன் மட்டும் வரவில்லை. உடனே அவனை அழைத்து வர ஆள் அனுப்பப்பட்டது. அவன் பன்னீராயிரம் வீரர்களுடன் பகைவர்களுடன் சேர்ந்து விட்டான் என்ற செய்தி கிடைத்தது.

அந்த வஞ்சகனின் செயலை நினைத்து வருந்தினன். பாரீஸ் நகரை, தன்னைப் பெற்றெடுத்த தாய்நாட்டை, அந்த தாயின் மடியிலேயே பிறந்த மக்கள் பகைவர்களிடம் காட்டிக் கொடுக்கும் நிகழ்ச்சியை நினைக்கும் போது நெப்போலியன் நெஞ்சு புண்ணாயிற்று.

ருஷ்ய மன்னனிடம் சென்று நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறி, நெப்போலியன் தந்த கடிதத்தையும் காட்டினன் கலென் கோர்ட்.

ருஷ்ய: ஐயா! நீங்கள் என்னிடம் வந்த போது நெப்போலியனின் வல்லமைக்கு பயந்திருந்தன வல்லரசுகள். ஆனல் இப்போது நிலைமை மாறிவிட்டது. நெப்போலியனின் படை பலம் குன்றிவிட்டது. படைத் தலைவர்கள் தங்கள் வீரர்களோடு பகைவர் பக்கம் சேர்ந்து கொண்டனர்.

அமைச்: "மன்னரே! இஃதென்ன. நெப்போலியனுக்காக உயிரைத் தியாகம் செய்ய ஆயிரக்கணக்கான வீரர்கள் காத்திருக்கின்றனர்."

ருஷ்ய: "இல்லை. நெப்போலியனை அரச பதவியிலிருந்து நீக்குவதென்று முடிவு செய்யப்பட்டது. புதிய அரசும் ஏற்பட்டிருக்கிறது."

அமைச்: அப்படி யென்றால் வேறு வழியே இல்லையா? மன்னரே தங்களைத்தான் நம்பி இருக்கிறோம்.'' என்றான். ஒன்றும் பயன் தரவில்லை.

அரச மன்றத்தில் நெப்போலியனைப் பற்றிப் பலப் பிரச்னைகள் எழும்பின. நெப்போலியனின் பெருந் தன்மையைப் பற்றி சிலர் பேசினர், அவன் எவ்விதம் வஞ்சிக்கப் பட்டான் என்பதைப்பற்றி சிலர் எடுத்துரைத்தனர். என்ன பேசியும் வல்லரசுகள் நெப்போலியன் எழுதிக் கொடுத்த அறிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன. பிரஞ்சு நாடு நெப்போலியனின் பிள்ளைக்கு சேராது என்று வல்லரசுகள் முடிவு செய்து விட்டன.

நெப்போலியன் அரும் பாடுபட்டு கட்டிக்காத்த அரசு நிலை குலைந்து போனாலும், நாட்டு மக்களின் உண்மையான அன்பு மட்டும் குறையவில்லை. மக்கள் நெப்போலியனைத் தந்தைபோல் பாவித்து வந்தவர்களாயிற்றே!

நெப்போலியன் "பாண்டன் புளு" என்னும் இடத்தில் இருந்தான். அவன், தன்னுடைய நிலை இவ்விதமாயிற்றே என்று வருந்தவில்லை. பிரான்சு நாடு நிலை குலைந்துவிட்டதை எண்ணி மிகமிக வருந்தினான். மறுபடியும் தன் தாயகம் அடிமை நாடு ஆய்விடுமே என்பதை நினைக்கும்போது அவன் நெஞ்சில் ஆயிரம் தேள்கள் கொட்டுவதுபோ லிருந்தது. பதினைந்து ஆண்டுகளாக பிரான்சு நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு முன்னேற்றம் கண்டு களித்திருந்த நேரத்தில் அவன் கண்முன் அவனால் உருவாக்கப் பட்டவைகள் உருக்குலைந்துபோனது கண்டு கலங்கினான்.

பகைவர்கள் நெப்போலியன் படைவலுவின்றி இருப்பதை உணர்ந்து அவனைச் சிறைசெய்ய திட்ட

மிட்டனர். ஆனால் ருஷ்ய மன்னன் அதற்கு இடங் கொடுக்கவில்லை.

சிலர் நெப்போலியனை செயின்ட் ஹெலினா தீவிற்கு அனுப்பவேண்டும் என்றனர். சிலர் அவ்வீரனை அவனுடைய பிறப்பிடமாகிய கார்ஸிகாவுக்கு அனுப்ப வேண்டும் என்றனர். வேறு சிலர் எல்பா தீவிற்கு அனுப்பவேண்டும் என்றனர். கடைசியில் சிங்கத்தை சிறு நரிகள் கூட்டில் அடைக்க முயல்வதுபோல், நெப்போலியனை எல்பா தீவில் சிறை வைக்கத் தீர்மானித்தனர்.

எல்பா தீவு பிரான்சு நாட்டிற்கு அருகில் இருந்தமையால், பிரான்சின் புதிய அரசை ஏற்றுக்கொண்டவர்கள் மிகவும் பயந்தனர், நெப்போலியன் அவர்களுக்குத் தொந்தரவு தரலாம் என்ற எண்ணத்தால்.

இருந்தும் வல்லரசுகள் கீழ்கண்டவாறு தீர்மானித்தன.

"நெப்போலியனை எல்பா தீவுக்கு அனுப்பவேண்டும். அந்த தீவை அவனுக்கே உரிமையாக்கவேண்டும். ஒரு ஆண்டுக்கு இருபத்தைந்து லட்சம் பிராங்குகள் தரவேண்டும். அவனுடைய மனைவி மேரி லூயிஸாவிற்கும், மைந்தனுக்கும் மூன்று ஊர்களைத் தரவேண்டும். அவனுடைய தாய்க்கும், மற்ற உறவினருக்கும் அவரவர்கள் தகுதிக்கு ஏற்ற பணம் தரவேண்டும். நெப்போலியனின் முதல் மனைவி ஜோசப்பைனுக்கு ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்சம் பிராங்குகள் தரவேண்டும். நெப்போலியன் தன் பாதுகாப்புக்காக நானூறு வீரர்கள் கொண்ட ஒரு சிறிய படையை மட்டும் வைத்துக்கொள்ளலாம்" என்று முடிவுசெய்யப்பட்டது.

இரண்டு தினங்களில் நெப்போலியன் தன் நாட்டைவிட்டு எல்பாவுக்குச் செல்லவேண்டும் என்றும்,

கப்பல் ஏறும் வரையில் அந்த வீரன் காவலில் இருக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறந்தது.

இந்த மோசமான உத்தரவைக் கேட்டதும் நெப்போலியன் அடி ஒடிந்த மரமென கீழே சாய்ந்தான். அவமானத்தால் அவன் முகம் சிவப்பானது; உயிரை மாய்த்துக்கொள்ளவே அவன் தீர்மானித்துவிட்டான். தன்வாழ்வு பாழ்-பயனற்றது என்று கருதினன். அந்தச் சமயத்தில் அவனுக்கும், ஒரு பைத்தியக்காரனுக்கும் வித்தியாசமே தெரியவில்லை.

அப்போது உண்மை நண்பனும், அமைச்சனுமான கலேன் கோர்ட் நெப்போலியனைத் தேற்றினன்.

"நெப்போலியன் கப்பலேறி எல்பாவுக்குச் செல்லப் போகிருன்" என்ற செய்தி நாட்டு மக்களுக்குக் கிடைத்த ஒரு துக்க செய்தியாகும். நாட்டு மக்கள் நெப்போலியனின்மேல் உண்மையான அன்புடையவர்கள் என்பதை புதிய அரசினர் நன்கு அறிந்திருந்தனர். அதன் காரணமாக மக்கள் கலகம் செய்வார்களோ என அஞ்சி, நெப்போலியன் புறப்படும் இடத்திலிருந்து துறைமுகம் வரையில் படைகளை வரிசை வரிசையாக நிறுத்தி வைத்திருந்தனர்.

நெப்போலியன் போகும்போது, இருபுறங்களிலும் மக்கள் அணிவகுத்து நின்று, "வாழ்க மன்னன்" என்ற கூக்குரல் எழுப்பி தங்கள் அன்பையும், வணக்கத்தையும் தெரிவித்தனர். நெப்போலியனுடன் எல்பாவுக்குச் செல்ல வீரர்கள் போட்டியிட்டனர்.

கடைசியாக தன் நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டான் நெப்போலியன். அப்போது,

"அன்புள்ள நண்பர்களே! நான் எல்பாவில் என் அரசை நிலைநாட்டச் செல்கிறேன். பிரான்சு தேசத்தைச் சீர்திருத்தவே நான் எண்ணியிருந்தேன். ஆனல்

பிரான்சு நாட்டு மக்களிடம் உண்மையான நாட்டுப் பற்று இன்னும் முதிர்ச்சி அடையவில்லை. அவர்கள் தங்கள் கடமைகளை நன்கு உணரவில்லை. அறிவும், ஊக்கமும் நிறைந்த பிரஞ்சு மக்கள் இன்னும் சிறந்த வீரத்தைக் காட்டவேண்டும். என்னை எவரும் குறைகூற மாட்டார்கள். நான் பகைவர்களிடம் அன்பும், கருணையும் காட்டியவன். என்னை நேரான பாதையில் நின்று எதிர்க்க அஞ்சிய பகைவர்கள் வஞ்சனை மூலம் என்னைக் கொல்ல நினைக்கின்றனர். இருக்கட்டும், இறைவன் அனைவருக்கும் அருள் சுரப்பாராக!" என்று கூறி விட்டுத் திரும்பினன். தன்னைப் புடைசூழ்ந்திருந்த வீரர்கள் அணிவகுத்து நின்றனர்.

அவர்களை நோக்கி:—

"அன்புடையவர்களே! நான் உங்களை விட்டுப் பிரிய நேர்ந்து விட்டது. அது வருத்தத்திற்குரிய நிகழ்ச்சி தான். இருபத்தைந்து ஆண்டுகளாய் நீங்கள் வெற்றி மாலை சூடியவர்கள்; புகழ் கொடியை உயர்த்தியவர்கள் உங்களுடைய ஆண்மையையும், தளராத ஊக்கத்தையும் கண்டு புளகாங்கித மடைந்தேன். ஆனல் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து நம்மை எதிர்த்து விட்டன எதிர்பாராத விதமாக. இருந்தாலும் நாம் நமது போரை இன்னும் பல ஆண்டுகள் வரையில் நடத்தியிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் நமது நாடு பெருந் துன்பத்திற்காளாகும் என்று அஞ்சியே ஆம்! மக்களின் நன்மையை மனதில் கொண்டே போரை நிறுத்தினேம். நானும் என் உயிர் போன்ற உங்களை விட்டுப் பிரிய நேர்ந்தது. நீங்கள் கவலைப்பட வேண்டாம். புதிய அரசியலாரிடம் கட்டுப்பட்டு நடந்து கொள்ளுங்கள். பிரஞ்சு நாடு செழிப்புற்றிருக்க வேண்டும் என்பதே என் ஆசை. நாடு நலம் பெறுக, எல்லா நன்மைகளும் உங்களுக்கு உண்டாகுக. எனக்காக நீங்கள் வருந்த வேண்டாம் விடை கொடுங்கள் வீரர்களே!"

என்று கூறி முடித்தான்.

அப்போது அருகிலிருந்த படைத் தளபதி நெப் போலியனை வணங்கி பிரஞ்சுக்கொடியை உயர்த்தினன். உடனே நெப்போலியன் அவனையும் நாட்டுக் கொடியை யும் மார்புடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். எல் லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு கப்பல் ஏறி னன். அவன் பிரிவை கண்டு சகியாத வீரர்கள் கண் ணீர் சிந்தினர்.

பாவம் நாட்டு மன்னன் நெப்போலியன் நாட்டை விட்டுப் பிரியும் போது தன் மனைவி மக்களைக் காண முடியவில்லை. அப்போது நெப்போலியனின் மனைவி யும், மகனும் பாரீஸ் பட்டினத்தி லிருந்து நூறு மைல் களுக் கப்பால் இருந்தனர். அரசி லூயிசா தன் கணவனை காண எவ்வளவோ முயன்ருள். ஆனல் முடிய வில்லை.

நெப்போலியனின் எதிரிகள் அவன் மனைவியை அவளுடைய தந்தையான ஆஸ்திரிய மன்னனிடம் ஒப் படைத்தனர். அவளும் தன் மகனுடன் தன் தந்தை யைப் பின்பற்றி வியன்னுவிற்குச் சென்ருள்.

நெப்போலியன் எல்பா தீவை அடைந்தான். மரி யாதை குண்டுகள் முழங்கின. அவன் உடனே அரண் மனைக்குச் செல்லாமல் குதிரையின் மீது ஏறி அந்த தீவை சுற்றி பார்க்கப் புறப்பட்டான். அந்த தீவின் அமைப்பை நன்கு தெரிந்து கொண்டான். பிரான்சி லிருந்து இருநூறு மைல் தூரத்தி லிருந்தது அந்தத் தீவு. அதன் அளவு ஏறக்குறைய பதினறு மைல் நீள மும், பன்னிரண்டு மைல் அகலமும் கொண்டது. பதி மூன்ருயிரம் மக்களைக் கொண்டது. நீர்வளமும் நிலவள மும் மிக்கது.

நெப்போலியனுக்கு அந்த தீவின் வாசிகள் தங்கள் வணக்கம் கூறி வரவேற்றனர். இரண்டு மூன்று நாட்

களில், சுரங்கங்கள், காடுகள், கோட்டைகள் துறைமுகம் முதலியவற்றைப் பார்வை யிட்டுப் புதிய பாதைகளையும், கால்வாய்களையும், மருத்துவச் சாலைகளையும் அமைத் தான்.

நெப்போலியன் நாடு கடத்தப் பட்ட செய்திகேட்டு, மனமுடைந்தாள் முதன் மனைவி ஜோஸபைன். அவள் நெப்போலியனுக்குப் பல கடிதங்கள் எழுதினள். அவ னும் பல கடிதங்கள் வரைந்தான். அதிலொன்றில்,

"நான் கவலை யற்றிருக்கின்றேன். என் மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். வாள் பிடிக்கும் கையில் பேனவைப் பி டி த் து விட்டேன். இனிமேல் என் வாழ்க்கை வரலாறு வேடிக்கையாக இருக்கும். என் அன்பே! நான் உன்னை மறந்ததில்லை. அது போலவே நீ என்னை மறவாதே!" என்று தீட்டி யிருந்தான்.

நெப்போலியன் வந்த பிறகு அந்த தீவே புது மெருகுடன், புது முடுக்குடன் காட்சி யளித்தது. நெப் போலியனைக் காண பல நாட்டினர் எல்பாவுக்கு வந்து அவன் ஆற்றலையும் அறிவையும், பரந்த நோக்கத்தை யும் போற்றிச் சென்றனர். அங்கு நெப்போலியன் சுக மாக வாழ்ந்து வந்தாலும் அவன் மனம் மட்டும் பிரான் சிலேயே இருந்தது. எப்போது பிரான்சுக்கு செல்லும் வாய்ப்பு நேரும் என்பதை எதிர்பார்த்துக் கொண் டிருந்தான். தன்னை வஞ்சித்த வஞ்சகர்களான பகை வர்களின் முன்னல் மறுபடியும் தன் ஆட்சியை நிலை நிறுத்தியே தீர வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டான். மான மிழந்த வாழ்வு வாழ அந்த மாவீர னல் முடியவில்லை.

நெப்போலியன் நாடு கடத்தப்பட்ட செய்தி அறிந்த அவன் தாயும், தங்கையும் எல்பாவிற்குச் சென்றனர். புதிய அ ர சி ன ர் நெப்போலியனின் செலவுக்காக அனுப்பஒத்துகொண்டபடிபணம்அனுப்பவில்லை. நெப்

போலியன் தன் மனைவியை எல்பாவுக்கு அனுப்பும்படி பல கடிதங்கள் எழுதியும் ஆஸ்திரிய மன்னன் அனுப்ப வில்லை. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நெப்போலியனை சந்தோஷ முறவா செய்யும்?

இந்தச் சமயத்தில் நெப்போலியன் ஆட்சியில் நீதி மன்ற செயலாளராகப் பணி புரிந்து வந்த சாபோலன் என்பவர் மாறுவேட மணிந்து எல்பாவுக்கு வந்தார். நெப்போலியன் அவர் மூலம் பிரான்சின் நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டான். ஐரோப்பிய வல்லரசு களின் போட்டிகளும் தெரிந்து கொண்டான். பிரான்சு நாட்டை அரச பரம்பரையினர் மோசமான முறையில் நடத்தி வந்தனர். பதினெட்டாம் லூயி மன்னன் குடித்து மகிழ்வதிலும், உண்டு உறங்குவதிலும் கவனம் செலுத்தி வந்தான் என்பதையும் தெரிந்து கொண் டான். பிரஞ்சு மக்கள் நெப்போலியனைப் பெரிதும் விரும்பினர் என்றும் அதனல் நெப்போலியன் எப்படி யும் பிரான்சுக்கு வரவேண்டும் என்றும் சாபோலன் கேட்டுக் கொண்டார். நெப்போலியன் தான் எப்படி யும் பிரான்சுக்கு வந்து விடுகிறேன் என்று கூறி அவ னுக்கு விடை கொடுத்து அனுப்பினுன்.

நெப்போலியன் எவ்விதம் தப்புவது என்பதைப் பற்றி ஆழ்ந்து யோசிக்கலானுன். ஒருநாள் இரவு இரண்டு வீரர்களை அழைத்து "நாம் பொழுது விடிவ தற்குள் இந்தத் தீவை விட்டு புறப்படவேண்டும். துறை முகத்தி லிருக்கும் கப்பல்களைப் போக விடாதீர்கள். நமது வீரர்களை யெல்லாம் உடனே கப்பலில் ஏற்றி விடுங்கள் நமது கப்பல் நடுக்கடலை அடைவதற்கு முன் ஒரு கப்பலையும் போக விடாதீர்கள். இது மிகவும் இரக சியம். மிக்க ஜாக்கிரதையாகச்செய்ய வேண்டும் என்று கூறினுன்."

ஏற்பாடுகள் அனைத்தும் முறையே ஒழுங்காக நடை பெற்றது. நெப்போலியன் தன் வீரர்களுடன் கப்பலில்

ஏறிக்கொண்டான். கரையை விட்டு கப்பல் நகர்ந்த வுடன் "நாம் அனைவரும் பிரான்சுக்குச் செல்லுகி ரோம்" என்றான். அந்த சொல் அனைவருக்கும் மகிழ்ச்சி யளித்தது.

கப்பல் பிரஞ்சுக் கரையை அடைந்தவுடன் கடற் கரையிலிருந்து ஐம்பது மைல் தூரத்திலுள்ள 'கிராசி' என்னும் ஊருக்குப் போய்ச் சேர்ந்தனர்.

நெப்போலியன் ஏல்பாவிலிருந்து தப்பி பிரான் சுக்கு வந்துவிட்டான் என்ற செய்தி வெகு சீக்கிரத்தில் எங்கும் பரவிவிட்டது. உடனே நெப்போலியனின் இராணுவத்தில் பணியாற்றிய வீரர்கள் நெப்போலிய னுக்கு உதவி செய்ய முன் வந்தனர். மக்கள் அவனை மரியாதையுடன் வரவேற்றனர். சென்ற விடமெல்லாம் சிறப்புகள் நிகழ்ந்த வண்ண மிருந்தன. நாளுக்கு நாள் வீரர்களும் சேர்ந்து கொண்டே யிருந்தனர். குதிரை களும் போர்க் கருவிகளும் வந்து குவிந்து கொண்டே யிருந்தன.

எல்லா வசதிகளும் இலகுவில் கிடைத்தவுடன் நெப்போலியன் தன் வீரர்களுக்கும், பொது மக்களுக் கும் அறிக்கை விடுத்தான். அதில்:—

"மாவீரர்காள்! வெற்றி மாது மாண்டுவிடவில்லை. மாலை யேந்தி நிற்கிறாள். நிச்சயம் அது நம் கழுத்தில் விழும். நம்மில் சிலர் பிறந்த பொன்னாட்டையும், நாடா ளும் மன்னனையும் எதிரிகளிடம் காட்டிக் கொடுத்துவிட் டனர். நமது உழைப்பினால் கிடைத்த வெற்றியையும், புகழையும் நாடு நகரங்களையும், எதிரிகள் வசம் ஒப் படைத்து விட்டனர். இனியும் நாம் அப்படிச் செய்ய போவதில்லை. நமது பகைவர்கள் காரணமின்றி வீணா கத் தூற்றுகின்றனர். உலகம் நம்மீது வெறுப்படை யும்படி செய்கின்றனர். நான் நாடு கடத்தப்பட்டு ஏல்பா வில் இருந்தபோது, உங்களுடைய துன்பங்களைக் கேள்

விப்பட்டேன். அதனுல் அந்தத் துன்பங்களை போக்கு வதற்காகவே உயிரையும் பொருட் படுத்தாமல் ஓடி வந் தேன். இதனுல் எனக்கு ஏற்பட இருக்கும் தீமைகளை பொருட் படுத்த மாட்டேன். வீரர்களே! உங்கள் உதவி யால் வெற்றி கொடிகளை பறக்கவிட்ட நெப்போலியன் மீண்டும் உங்கள் முன்னுல் தோன்றியிருக்கின்றுன். இருபத்தைந்து ஆண்டுகளாய் பறந்து வந்த கொடியை பழையபடியே நிலைநாட்ட வேண்டிய கடமை நம்முடை யது. நம் நாட்டிற்கு நாமே மன்னர் என்ற உணர்ச்சி யுடன் புறப்படுங்கள். நெப்போலியன் உங்களுடைய உரிமைக்காகப் போராடுவான். பிரஞ்சு நாட்டிற்காக பாடுபடும் வீரர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டா வதாக.”

பொதுமக்களுக்கு:—

“பொதுமக்களே! நாம் பலநாட்கள் பாடுபட்டு பிரான்சுக்குச் சொந்தமாக்கிய நகரங்களை நம்மில் சிலர் நய வஞ்சகமாய் கணப்போதில் எதிரிகளிடம் ஒப் படைத்து விட்டனர். எதிரிகள் தோல்வி யடைந்து நமது காலில் விழும் நேரத்தில் பகைவர்களைப் பிரான்சு நாட் டுக் கதவுகளைத் திறந்து உள்ளே நுழைய இடம் கொடுத்து விட்டனர். அவர்கள் உண்மையான நாட்டுப் பற்றுடன் எதிர்த்து நின்றிருந்தால் நிலைமை வேறு வகையாக முடிந்திருக்கும். நமது வீரர்களின் நிலையை நினைக்க நினைக்க நெஞ்சம் உருகுகிறது. நான் கடல் நடுவில் காவல் வைக்கப் பட்டபோது நம் நாட்டைப் பற் றியே எண்ணி யிருந்தேன். என் உயிர் உள்ள வரையி லும் பிரஞ்சு நாட்டிற்காகவும், உங்களுக்காகவும் எது வேண்டுமானுலும் செய்யத் துணிந்து விட்டேன். நானும் எனது வீரர்களும் உங்களுடைய உதவியை எதிர் பார்க்கின்றேம்.

o o o

நெப்போலியன் தன் படையுடன் லயன்ஸ் நக ருக்கு வந்து சேர்ந்தான். இந்த செய்தியைக் கேட்ட அரச வம்சத்தினர் ஓட்டம் பிடித்தனர். நெப்போலியன் பாரீஸ் நகருள் பிரவேசிப்பதை தடுக்க இரு பெரும் சேனைகள் அனுப்பப்பட்டன. ஆனால் அந்த இரு படைகளும் நெப்போலியனுடன் சேர்ந்து கொண்டன. அதன் பிறகு நெப்போலியன் பெரிய படையுடன் பாரீஸ் நகரை நோக்கிப் புறப்பட்டான். மக்கள் அனை வரும் அவன்பால் பெரிதும் அன்புகாட்டினர். நெப் போலியனை எதிர்க்க மக்டனல்டு என்னும் படைத் தலை வனை அனுப்பினான். அவன் நெப்போலியனிடம் போர் புரிய மனமில்லாதவனாய் வேறு பக்கம் சென்று விட்டான். அவனுடைய வீரர்களும் நெப்போலியன் பால் சேர்ந்து கொண்டனர்.

இந்த செய்திகளைக் கேள்வியுற்ற லூயி மன்னன் நகரை விட்டு ஓடிவிட்டான். அவனைச் சேர்ந் தவர்கள் எல்லாம் ஹாலந்திற்குச் சென்றுவிட்டனர். நெப்போலியன் பாரீஸ் வந்து சேர்ந்தபோது மக்கள் விழாக் கொண்டாடினர். அவன் அரசவையில் புகுந்த போது மக்கள் தாங்கள் இழந்த பெரும் பொருளை மீண் டும் அடையப் பெற்றால் எவ்வளவு மகிழ் வெய்துவரோ அவ்வளவு மகிழ்ந்தனர்.

நெப்போலியன் போர் புரியாமல் இழந்த பொன் னாட்டை அடைந்து விட்டான். அன்புகாட்டி தீமை செய்தவர்களையும் மன்னித்து விட்டான்.

நெப்போலியன் சிறையி லிருந்து தப்பித்துக் கொண்டான் என்ற செய்தி கேட்டு வல்லரசுகள் நடுக்க முற்றன. மறுபடியும் அவனை சிறைபடுத்த அனைவரும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஆனால் நெப்போலி யன் யார் மீதும் போர் தொடங்க வேண்டும் என்ற எண்ணமின்றியே யிருந்தான். நெப்போலிய மன்னன் ஆஸ்திரிய .மன்னனிடம் தொடர்பு வைத்துக்கொள்ள

வேண்டும் என்று தன் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதி ஞன். ஆனால் அந்தக் கடிதம் அவள் கைக்கு சென்று சேராமல் ஆஸ்திரிய மன்னன் தடுத்துவிட்டான். அன்றியும் நெப்போலியன் தன் மகனை அழைத்துச் சென்றுவிடுவான் என்று கருதி அவனை காவலில் வைத்திருந்தான்.

வல்லரசுகள் நெப்போலியனின் மீது படையெடுக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தன. நெப்போலியனும் அரும்பாடு பட்டு இரண்டே முக்கால் லட்சம் வீரர்களை சேர்த்தான். எதிரிகள் படையில் ஆங்கில நாட்டுச் சேனைத் தலைவன் வெலிங்கடனும், பிரஷ்ய சேனைத் தலைவன் ப்ளுகரும், அணிவகுத்து நின்றனர். ரைன் ஆற்றங் கரையில் ஆஸ்திரிய சேனை அணிவகுத்து நின்றது. குடியரசு சேனை பிரான்சை நோக்கி புறப்பட்டுவிட்டது.

நான்கு புறங்களிலும் மிகப் பெரிய சேனைகள் சூழ்ந்து நெப்போலியனின் சேனையைத் தாக்கின. தன் சேனைகளை, எதிரிகளை தாக்க அனுப்பிவிட்டு, ஆங்கிலேயரையும், பிரஷியரையும் அவனே தாக்கினன், வெலிங்கடன் நெப்போலியனின் தாக்குதலுக்கு முன் நிற்க முடியாமல் பின் வாங்கினன். அந்த சமயத்தில் வேருெரு சேனை வெலிங்டன் சேனைக்கு உதவிபுரிய வந்தது. இந்த இரண்டு சேனைகளும் வாடர்லூ என்னும் இடத்தில் போர்புரிந்தன. நெப்போலியன் இரவு பகல் கண்ணுறங்காமல் தன் வீரர்களுக்கு உற்சாகமளித்து வந்தான். மிகப் பயங்கரமான போர் நிகழ்ந்தது. ஆனல் நெப்போலியன் முயற்சிக்கு வெற்றி தரவில்லை. பிரிஷியப் படைகள் ஆங்கிலப் படைகளுக்கு உதவியாக வந்து அதனை வலிவு படுத்தியது. ஆகவே இந்தப் போரில் நெப்போலியன் தோற்ருன்.

உடனே யுத்த களத்தை விடுத்து பாரீஸுக்கு வந்து நீதிமன்றத்தைக் கூட்ட ஏற்பாடு செய்தான்.

அந்த நீதி மன்றத்தில், "இன்னும் எட்டு தினங்களில் எதிரிகள் பாரீஸுக்குள் வந்துவிடுவார்கள். அவர்களைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்றுகூடி தாக்கவேண்டும்" என்று கூறினான். ஆனால், பல உறுப்பினர்கள் இதனை எதிர்த்தனர். சிலர் ஆதரித்தனர். சிலர் பகைவர்களுடன் கூடி மூலைக்கு மூலை கலகங்கள் செய்தனர். நெப்போலியன் எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவர்கள் கேட்கவில்லை. பொது மக்கள் நெப்போலியனை விரும்பினர். ஆயினும் அரச அவை உறுப்பினர் அவனுக்கு எதிராக வாதாடினர்.

இறுதியில் பிரான்சில் பெரிய உள்நாட்டுக் குழப்பம் ஏற்படும்போ லிருந்தது. ஆகவே நெப்போலியன் தனது ஆட்சியை விட்டு வெளியேற துணிந்து விட்டான்.

அரச சபையில் குழப்பம் விளைவித்தவர்களை சிறை செய்ய வீரர்கள் முன்வந்தனர். நெப்போலியன் அவ்வீரர்களைத் தடுத்து நிறுத்தினான். அதன்பிறகு வீரர்களை நோக்கி, "அன்புள்ள வீரர்களே! இனிமேல் நான் தனிமையாகச் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. பகைவர்களைத் துரத்தி பிரான்சு நாட்டைக் காபாற்ற வழிதேடினேன். ஆனால் அரசமன்ற உறுப்பினர் அதற்கு உடன்படவில்லை. நாட்டின் அமைதிக்கு நான் தடையாக இருப்பதாகக் கூறுகின்றனர். நாட்டின் நன்மைக்காக எதையும் செய்ய சித்தமா யிருப்பவன் நான். ஆகவே நான் இந்தப் பதவியை விட்டுவிடுகிறேன்" என்றான்.

அதன்பின்னர் நெப்போலியன் பொதுமக்களுக்கு ஓர் அறிக்கை விடுத்தான். "நாம் விடுதலைக்காகப் போர்

புரிந்தோம். போர் தொடங்கும்போது வெற்றிக்குரிய அறிகுறிகள் தோன்றின. ஆனால் முடிவு நாம் எதிர் பார்த்தவாறு இல்லை. பிரான்சு நாட்டின் பகைவர் களுக்கு என்னையே இரையாக்கிக் கொள்கிறேன். இன்றோடு என் அரசியல் வாழ்க்கை முடிவடைகிறது. எனது மகனை இரண்டாம் நெப்போலியன் என்னும் பெயரால் பிரஞ்சு நாட்டின் அரசனாக நியமிக்கின் றேன். நமது நாட்டின் நன்மைக்காக நாம் அனைவரும் ஒற்றுமையுடன் உழைப்போமாக!" என்பதே அறிக்கையாகும்.

இந்த அறிக்கை மக்களை மிகவும் வருத்தத்தில் ஆழ்த்தியது. தன் அரச பதவியைத் துறந்த நெப்போ லியன், எல்சி என்னும் இடத்திற்குச் சென்றான். தன்னைக் காணவந்தவர்களிடம், "நாட்டைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும்" என்று கூறினான்.

நெப்போலியன் விலகினான். உடனே புதிய அரசு ஏற்படுத்தி அதற்கு போசீ என்பவனைத் தலைவனாக்கினர். நெப்போலியன் பிரான்சில் இருக்கும் வரையில் பகை வர்கள் போரை நிறுத்தமாட்டார்கள் என்று சிலர் குறைகூறி வந்தனர். அதனால் நெப்போலியன் அமெரிக்கா அல்லது இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் செல்ல தீர்மானித்திருந்தான். அவன் முடிவின்படியே அமெரிக்காவுக்குச் செல்ல நிச்சயித்துக்கொண்டு அனைவ ரிடமும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

நெப்போலியனுக்குப் பிறகு புதிய அரசின் தலைவ னாக போசீ என்னும் இதயமற்றோன் நெப்போலியன் கப்பலேறியதும் ஆங்கிலேயரின் உதவியால் அவனைச்

சிறைப்படுத்த ஏற்பாடு செய்தான். ஆம்! சிங்கத்தைச் சிறு நரிகளுக்குக் காட்டிக் கொடுத்தான் அந்த துரோகி.

நெப்போலியன் கப்பலேறினன். அவனுடன் அவனுடைய உண்மை நண்பர்களும் உடன்சென்றனர். நெப்போலியன் ஏறியிருந்த கப்பலை இரண்டு போர்க் கப்பல்கள் வட்டமிட்டுக்கொண் டிருந்தன. நாற்புறங் களிலும் ஆங்கிலேயரின் கப்பல்கள் சூழ்ந்துகொண் டன. இதைக் கண்ட நெப்போலியன் செய்வதொன் றும் தோன்ரும லிருந்தான். அப்போது அவன் நண்பர்கள், "பிரஞ்சுக் கப்பல்களை ஏவி போர் செய்யத் தூண்டலாம். இந்தப் போர் முடிவதற்குள் நாம் நெடுந் தூரம் சென்றுவிடலாம்" என்று யோசனை கூறினர். அப்போது, "நண்பர்களே! என் ஒருவன் உயிருக்காக பலர் உயிரிழக்க வேண்டாம்" என்ருன் நெப்போலியன். மற்றும் சிலர், "ஆங்கிலேயர் கண்களில் படாமல் மாறு வேடமணிந்து சென்றுவிடலாம்" என்றனர்.

"மாற்று வேடமணிந்து மறைந்து செல்வது மாவீரர்களின் வீரமன்று. நமது மதிப்பையும், பெருமை யையும் நாமே குறைத்துக்கொள்ளக் கூடாது. என் உயிர்தானே போகும். போகட்டும். அதனை நான் மதிக்கவில்லை" என்ருன் பெருமிதத்துடன்.

கடைசியில், "நான் அரசியல் துறையிலிருந்து விலகிவிட்டேன். இனிமேல் இங்கிலாந்தில் வாழ விரும்புகின்றேன்" என்று ஆங்கில நாட்டு மன்ன னுக்கு ஒரு கடிதம் வரைந்து அனுப்பினன் நெப்போலி யன். அடுத்து தன் கப்பலை இங்கிலாந்தை நோக்கி செலுத்துமாறு கட்டளையிட்டான்.

அந்தச் சமயத்தில் தப்பிச் செல்லவேண்டும் என்று அவன் கருதியிருந்தால் அப்படியே செய்திருக்கலாம்; மீண்டும் போர் துவங்கியிருக்கலாம். ஆனல் அவன் அப்படிச் செய்யாமல் பெருந்தன்மையுடனும், கண்ணியத்துடனும் நடந்துகொண்டான்.

நெப்போலியன் ஏறிவந்த கப்பல் பிலிமத் துறை முகத்திற்கு வந்து சேர்ந்தது. அந்தக் கப்பலைச் சுற்றி லும் பல படகுகள் காவல் புரிந்துகொண் டிருந்தன.

நெப்போலியனை லூயி மன்னனிடம் ஒப்படைப்பதா, அல்லது சிறையில் வைப்பதா? என்ற பிரச்னையைப்பற்றி இங்கிலாந்தில் பெரிய விவாதம் நடைபெற்றது.

நெப்போலியனைக் காண ஆயிரக் கணக்கான ஆங்கில மக்கள் திரண்டு வந்தவண்ண மிருந்தனர். நெப்போலியனுடன் போர்புரிந்த ஆங்கிலேய வீரர்கள் நெப்போலியனின் பெருங்குணச் சிறப்பைப் பற்றியும், ஏழை மக்களிடம் அவன் காட்டிய அன்பைப் பற்றியும் விளக்கினர். மக்கள் படகேறி அந்த நல்லவனைக் காணச் சென்றனர். ஆனல் காவல் காப்போர் தடுத்து விட்டனர். இதனல் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது. நெப்போலியனிடம் இவர்கள் காட்டும் பற்றைக் கண்டு அஞ்சிவிட்டனர். ஒருவேளை இவர்கள் நெப்போலியனை விடுவித்து விடுவார்களோ என்றும் பயந்துவிட்டனர்.

இரவெல்லாம் நெப்போலியன் இருந்த கப்பலின் இருபுறமும் போர்க் கப்பல்களை நிறுத்தி காவல் புரிந்தனர்.

மறுநாள் காலை ஆங்கில நாட்டு அமைச்சன் நெப் போலியன் இருந்த கப்பலுக்கு சென்று ஓர் அறிக் கையைப் படித்தான். அதில் "ஐரோப்பாவின் அமை திமை மீண்டும் நெப்போலியன் கெடுக்காமல் தடுக்க வும், எங்கள் நாடுகளை நாங்கள் காப்பாற்றிக் கொள்ள வும் இப்போது நெப்போலியனைச் சிறை செய்திருக் கிறோம். செயின் எலினா தீவில் நெப்போலியனை வைக் கும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம். இஃது ஆங்கில மன்னரின் கட்டளை" என்றிருந்தது.

மேலும் நெப்போலியன் தன்னுடன் வைத்துக் கொள்ள ஒரு மருத்துவனும், பன்னிரண்டு பணியாட் களும் அனுமதிக்கப்பட்டது. அத்துடன் அவன் குடும்பத்தினர் எவரேனும் அவனுடன் இருந்தால் அவர்களும் சிறைப்பட்டவர்களைப் போலவே நடத்தப் படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது. இதனை அமைதி யுடன் கேட்டுக் கொண்டிருந்த நெப்போலியன், "நான் இங்கிலாந்துக்கு விருந்தினனாக வந்தேனேயல் லாது, சிறையாளனாக வரவில்லை. நானே வலிய வந் தேன். தானாக வந்தவனை இப்படி நடத்துவது முறையா?" என்று கேட்டான்.

அவன் மனம் மிகவும் புண்பட்டது. "என்னை இங்கிலாந்தில் சிறை வைத்திருந்தாலும் குறை கூற மாட்டேன். என்னை தீவுக்கு அனுப்புவதைக் காட்டி லும் தூக்கு தண்டனை கொடுத்திருக்கலாம் இப்படி நடக்கும் என்று நான் எதிர்பார்க்க வில்லை" என்று தன் நண்பர்களிடம் கூறிக்கொண்டான்.

பின்னர் நெப்போலியன் ஆங்கில நாட்டு அரச னுக்கு ஒரு கடிதம் வரைந்தான். அதில் "அரசே!

எனக்கிருக்கும் உரிமையைப் பறித்து துன்பம் தருவது நீதியல்ல. நான் விரும்பியே இங்கு வந்தேன். என்னை எவரும் சிறை பிடிக்கவில்லை. உங்கள் நாட்டிற்கு விருந்தினனாகவே வந்தேன். ஆங்கிலேயர்களின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கவே என் நண்பர்களுடன் புறப்பட்டு வந்தேன். இருபத்தைந் தாண்டுகளாக எதிர்த்து நின்ற ஒருவன் இப்பொழுது அடைக்கலமாக வந்தால் இப்படித்தான் நடத்துவதா ?" என்று எழுதியிருந்தது.

இங்கிலாந்தில் நெப்போலியனை விடுவிக்க சிலர் முயன்றனர். ஆனால் முடியவில்லை. கடைசியில் நெப்போலியன் செயின்ட் ஹெலினா தீவிற்குக் கொண்டு போகப்பட்டான். நெப்போலியனிடமிருந்த வாளைத் தவிர மற்றவர்களிட மிருந்த வாட்களை பறிமுதல் செய்தனர். நெப்போலியனைப் பின்பற்றிய சிலநண்பர்களைத் தவிர மற்றவர்கள் பெருங் கவலையுடன் அவனை விட்டுப் பிரிந்தனர்.

கப்பல் ஹெலினா தீவுக்குப் புறப்படுமுன் பிரான்சு நாடு இருக்கும் திக்கு திரும்பி "மாவீரர்களை பெற்றெடுத்த பிரஞ்சு நாடே! மக்கள் நன்மைக்கும், உரிமைக்கும் போர்புரிந்த பொன்னாடே! விடை கொடு! நான் செல்கின்றேன் என்னைப் பெற்ற பொன்னாடே விடை கொடு!" என்று உரக்க கூவினான்.

பத்து தினங்களில் கப்பல் தீவை அடைந்தது. ஐரோப்பாவுக்கு ஆறாயிரத்து இருநூறு மைல் தூரத்திலிந்தது அந்த நாடு. பத்து மைல் நீளமும், ஆறு மைல் அகலமும் கொண்டது அந்தத் தீவு. அந்தத் தீவில்

ருந்த ஜேம்ஸ் நகரில் வ சி த் த ா ன் நெப்போலியன். அவன் வீட்டைச் சுற்றிலும் ஆயுதம் தாங்கிய வீரர்கள் காவல் புரிந்தனர்.

அந்த தீவில் நெப்போலியன் நாள் ஒன்றுக்கு பத்து மணி நேரத்திற்கு மேல் படித்துக் கொண்டிருப்பான். மற்ற நேரத்தை வருகிறவர்களுடன் இனிமையாக உரையாடுவான். அங்கிருந்து நெப்போலியன் தப்பிச் சென்றுவிடுவான் என்று அஞ்சி அதிகமாக வீரர்களை காவலில் வைத்திருந்தது அரசாங்கம்.

அவன் உடல் கருத்தது; தேகம் மெலிந்தது. கற்பாறைகள் நிறைந்த தீவின் உஷ்ணம் அவன் உடலைப் பாதித்தது. அவன் உடல் நலம் குன்றிவிட்டது. அந்த தீவில் கூட ஏழை மக்களிடம் "நல்ல துரை" என்ற பெயரைப் பெற்றுவிட்டான் நெப்போலியன்.

நெப்போலியனுக்கு பல இடங்களிலிருந்து புத்தகங்களும், பத்திரிகைகளும் வந்து குவிந்தன. என்ன விருந்தும் நெப்போலியனின் உடல் நாளுக்கு நாள் மெலிவடைந்துவந்தது. நேப்போலியனுடைய உறவினர்களுக்கு கடிதம் எழுதி ஒரு மருத்துவரை வரவழைத்தனர். அந்த மருத்துவருடன் இரண்டு பாதிரிமார்கள் வந்தனர். அவர்கள் நெப்போலியனுடைய மைந்தனின் புகைப்படம் ஒன்றை அவனிடம் கொடுத்தனர். அதனைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

உடல் சற்று நலமுற்றது. ஆனல் அது நீடிக்கவில்லை. அவன் காலில் வலி ஏற்பட்டது.

திடீரென்று நெப்போலியனின் தங்கை இறந்துவிட்ட செய்தி கேட்டு மிகவும் வருந்தினன். பின்னர்

தன் மைந்தன் தனக்குப் பின்னர் எவ்விதம் ஆட்சி நடத்த வேண்டும் என்னும் முறையை அவன் தன் நண்பர்களிடம் சொல்லி அனுப்பினான்.

நெப்போலியன் செயின் ஹெலினா தீவிற்கு வந்து ஆண்டுகள் ஆறு நகர்ந்தன. அவன் உடல் நலம் நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. பாவம் அவனுக்கு வயிற்று வலி வந்து வாட்டியது. அப்போது அவன் மருத்துவரிடம் கீழ் வருமாறு கூறி வருந்தினான்.

"ஒரு காலத்தில் ஆற்றல் நிறைந்த வீரனாக இருந்தேன். ஆனால் இப்பொழுதோ செயலற்று செத்த பிணம் போல் கிடக்கின்றேன். என் வலிமையும், ஆற்றலும், எல்லாம் பழங் கதைகளாகிவிட்டன."

ஒருநாள் வாழ்வு தாழ்வு இரண்டிலும் தன்னை விட்டுப் பிரியாத உண்மை நண்பர்களை நோக்கி, "நண்பர்களே! நான் மிக விரைவில் இறந்துவிடுவேன். நான் இறந்தபிறகு நீங்கள் ஐரோப்பாவிற்குச் சென்று, நம் நண்பர்களையும், உறவினர்களையும் கண்டு அவர்களுக்கு என் வணக்கத்தைக் கூறுங்கள். நடைபிணமாக நான் இருக்கும்போதுகூட இந்த ஐரோப்பா என்னைக் கண்டு அஞ்சுகிறது" என்று புன்முறுவலுடன் கூறினான்.

1821 - ஆம் ஆண்டு ஏப்ரல் எட்டாம் நாள் நெப்போலியனின் உடல்நிலை மிகவும் மோசமான நிலைமையி லிருந்தது.

அந்தப் பெருவலியில் துன்புற்றிருந்தபோது தன் நண்பர்களிடம், "நண்பர்களே! அருகில் வாருங்கள், நான் பிரான்சு நாடு பெருமை யடையப் பாடுபட்டேன்; பணியாற்றினேன். மக்களிடம் அன்பு காட்டத் தவறியதில்லை. அவர்களும் எனக்குப் புகழ் மாலை சூட்ட மறக்கவில்லை. இருந்தும் எனக்கு இக்கதி வருவானேன். நான் ஒரு சிறைக் கைதியாகக் காலம் கழிக்க வேண்டிய

நிலை எப்படி ஏற்பட்டது? குற்றம் புரியாதவன் குற்ற வாளி? எப்படி இருக்கிறது? சொந்த மனைவியை விட்டு; பெற்ற மைந்தனைப் பிரிந்து, பேணி வளர்த்த தாயை மறந்து மானமிழந்து, வாழ வேண்டிய நிலை யேற்பட்டு விட்டது.

நான் வீரனாக இருந்தது குற்றமா? வீரத்தோடு விவேகமும் கலந்திருந்தது குற்றமா? என் வீரத்தின் முன் மற்ற முடிமன்னர்கள் நிற்க முடியாத நிலைமைக்கு நானா குற்றவாளி?

காட்டிலே சிங்கம் வாழ்வது குற்றமானால் நாட்டிலே நெப்போலியன் வாழ்வது குற்றம்? இதனை உணரவில்லையே உலகம். உலகம் மறந்தாலும் பரவாயில்லை ஆனால், பிரான்சு மறக்கலாமா? பிரஞ்சு மக்கள் அறிவோடு சற்று விழிப்போடு இருந்தால் எனக்கு இந்த நிலை வருமா? பிரான்சு நாடு தான் சீரழியுமா? என் பொன்னாட்டை ஒரு முறையாகிலும் போய் பார்க்க முடியுமா? ஐயோ! ஆசையே! நீ ஏன் என்னை துளைத்துத் தள்ளுகிறாய்? என்ன செய்தேன் உனக்குத் துரோகம்? வேண்டாம் ஆசையே! நீ ஒழி! என்னைவிட்டு ஓடு! நீ என்னுள் புகுந்து கொண்டு நாளுக்கு நாள் அணுவணுவாக என்னை அரித்துக் கொல்லாதே!

விருந்தினனாக வந்த எனக்கு விலங்கு மாட்டி அழகு பார்க்கின்றனர் கொடியவர்கள்! அவர்கள் வாழ்கின்றனர் நான் வாடுகின்றேன்! நல்லது செய்தேன், ஒழுங்காக நடந்தேன். ஆனாலும் நான் அவதியுறுகின்றேன். என்னை புரிந்து கொள்ளாத புல்லர்கள் ஆனந்தமாக வாழ்வு நடத்து கின்றனர். சிங்கம் சிறையில் சிறு நரி சிங்காதனத்தில். ஏன் என் உடம்பில் உயிர் இருக்க வேண்டும்? ஒழியக் கூடாதா?

அய்யோ! கண்ணே! ஜோசபின்! உன்னைப் பார்க்காமல் உயிர் விடப் போகிறேன். "மன்னனை மணந்தோம்

மகிழ்ச்சியோடு வாழ்வோம்" என்று மனக் கோட்டை கட்டியிருப்பாய் ஆம்! அதனை நான் தூள் தூளாக்கி விட்டேன். மன்னிப்பாயாக! ஆசை மகனே! உன்னைப் பெற்றேன். ஆனால் வளர்க்க முடியாதவனாக, உன் அன்பு மொழிகளை உடனிருந்து கேட்க முடியாதவனாக வாழ்கிறேன். இல்லை இதனை நினைத்து மாள்கிறேன். பிள்ளைப் பாசம் என்னை விடவில்லையே!

ஆகாய வீதியிலே ஆடிப்பாடும் பறவைகளே உங்கள் இறகுகளை எனக்கு இரவல் தாருங்கள். என் மனைவியையும் மகனையும் பறந்துசென்று பார்த்து வருகிறேன். நீங்களா தரப் போகிறீர்கள் மனிதர்களே இரக்கத்தை விற்று வாழ்வு நடத்துகின்றனர். உங்களுக்கா என் மீது இரக்கம் ஏற்படப் போகிறது?" என்று கூறி பின்னர் சற்றுத் தெளிந்து:—

"நான் இறந்தபிறகு என்உடலை வெட்டி, அதனுள் புதைந்து கிடக்கும் என் இதயத்தை என் மனைவி மேரி லூயிசாவுக்கு அனுப்பிவிடுங்கள். என் உள்ளம் அவளையே நாடுகிறது. எனக்கு அவள்மீது இருக்கும் அன்பை எடுத்துச் சொல்லுங்கள். என் தந்தையும் வயிற்று வலியினால்தான் உயிர் துறந்தார். நானும் அதனால்தான் இறக்கப் போகிறேன். என் மகனுக்கு இந்தக் கதி வரக்கூடாது. அவனுக்கு இந்த நோய் வராமல் தடுக்க வேண்டிய மார்க்கங்களைக் கூறுங்கள். நான் இறந்தபிறகு இந்தச் செய்தியை என் அன்னைக்கு அனுப்பிவிடுங்கள்" என்று வேண்டிக்கொண்டான்.

1821 - ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் நாள் நெப்போலியன் அமைதியாகப் படுத்துக்கொண்டிருந்தான். அவன் முகம் மலர்ந்திருந்தது. அவன் வாய், "பிரான்சு, பிரான்சு" என்று மெள்ள உச்சரித்தது. ஆனால் அவன் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து விட்டது. செய்தி உடனே ஊரெங்கும் பரவிற்று.

மக்கள் கூட்டம் திரண்டுவந்தது, அந்த மாவீரனின் திருமுகத்தை கடைசி தடவை கண்டு தங்கள் கடைசி மரியாதையைத் தெரிவிக்க.

நெப்போலியனின் உடலை பிரான்சுக்கு கொண்டு போக அரசாங்கம் அனுமதி தரவில்லை. பிரான்சு மண்ணிலே 1769 - ஆண்டு தோன்றி, 1821 - ஆம் ஆண்டு செயின்ட் ஹெலினு தீவின் மண்ணிலே புதை யுண்டு மறைந்தான்.

என்ற கட்டத்தை படித்து முடித்தான் அந்த ஆர்வமுள்ள இளைஞன். அவனை அறியாமல் அவன் கண்கள் நீர் சிந்தின. கற்சிலை போல் உட்கார்ந்திருந் தான் நினை விழந்து.

"படித்து விட்டாய் போலிருக்கிறது" என்ற குரலை எழுப்பிக் கொண்டே தந்தை உள் நுழைந்தார்.

அதன் பிறகு நினைவு பெற்று தன் நிலை உணர்ந்து "ஆம் தந்தையே! ஆம்! அந்த பெருவீரனின் வீர வரலாற்றைப் படித்தேன். இல்லை. அதிலேயே படிந்தேன்" என்றான்.

"மிக்க மகிழ்ச்சி என்ன தெரிந்து கொண்டாய் அம் மாவீரனைப் பற்றி கூற முடியுமா?"

ஆம்! கூறமுடியும் கேளுங்கள் தந்தையே. "நெப் போலியனுக்கு புகழ் கிடைத்த தென்றால், அது சாதா ரண மானதல்ல! அவனுக்கு கிடைத்த வெற்றிகள் தற் செயலாகக் கிடைத்ததல்ல! உலகம் கண்டு அதிசயிக்கும் அரிய காரியங்களில் அவன் காட்டியுள்ள மகத்தான யுக்திகளும், முன்பின் யோசிக்காமல் திடீரென்று தோன்றிய யோசனைகள் அல்ல.

அவன் அடைந்த பெருமைகளும் புகழும் அவன் பெரியோனுகிய பின் கிடைத்தது மட்டுமல்ல சிறுவய திலேயே ஒழுக்கமும் நற்குணமும் உள்ளவன். பெரி

யோனுயினபின் மக்கள் குலத்திற்கு அதனை [illegible]த்திருக்கிருன். அவனிடம் இருக்கும் எல்லா பலத்தைவிட மனேபலம் இயற்கையாக அமைந்திருந்தது. அவனுக்கிருந்த விடா முயற்சி அவன் மனே பலத்தை இன்னும் பலமுள்ள தாக்கியது. அவன் காரியங்களில் ஈடுபடும் போது அது முடியும் வரையில் இராக் காலங்களில்கூட தூங்கியதே யில்லை."

"ஆம்! மகனே நீ கூறியவை உண்மைதான். நெப்போலியன் சிறுவனுயிருந்த போது நடந்த ஒரு நிகழ்ச்சியை உனக்குச் சொல்லுகின்றேன். ஒரு சிறுவன் குற்றம் செய்துவிட்டான். ஆனல் நெப்போலியன் அவனைக் காட்டிக் கொடுக்கவில்லை. அந்த குற்றத்தை தானே ஒப்புக்கொண்டு தண்டனையும் அடைந்தான். தண்டனையுடன் நின்றுவிடவில்லை மூன்று நாள் குறைந்த ஆகாரம் தான் தரப்பட்டது. இவ்வளவும் சகித்துக் கொண்டான். ஏன் அப்படி செய்தான் என்ருல் அந்த சிறுவன்பால் இருந்த அன்பால் அல்ல. குற்றம் செய்தவனைக் காட்டிக் கொடுத்தால் தண்டனையை ஏற்றுக் கொள்ள பயந்த கோழை உள்ளம் படைத்தவன் என்று தன்னை யாரேனும் கருதிவிடப் போகிருர்கள் என்பதினல்தான்."

"அவன் வீர உள்ளம் படைத்த வீரன்! நல்லவர்களாலும், வல்லவர்களாலும் போற்றப்பட்டவன். தனக்கென வாழமல் நாட்டு நலங் கருதியே தன்னைக் கொன்றுக் கொண்ட தியாகி. பேராசைக்காரன் அல்ல. பெருநோக்கம் படைத்தவன். அவன் வாழ விரும்பினன். அத்துடன் தன் நாடாகிய பிரான்சு நாட்டையும் வாழ வைக்க விரும்பினன். இந்த நல்ல காரியத்தை செய்து கொண்டிருக்கும் வேளையில் சிங்கத்தை சிறு நரிக் கூட்டம் கூடி மாய்த்ததுபோல் வல்லரசுகள் அவனை சிறை வைத்துக் கொன்றனர்.

ஆம்! நெப்போலியன் நிச்சயமாகப் பேராசைக்காரனல்ல! பெரியோன். வீணனல்ல வீரன்! காமுகன் அல்ல கண்ணிய மிக்கவன்! அவன் மறைந்தான். ஆனால் அவன் புகழ் மங்காது மறையாது.

வாழ்க அவன் வீரம்!

"அவன் வீரம் வாழும்! அவனை உலகம் புகழும்"

"எப்படி"

"நேற்று பார்த்தா யல்லவா? பெரு வீரன் நெப்போலியனிடம் மக்கள் காட்டிய ஆர்வத்தை"

"ஆம்! பார்த்தேன். அவனுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பவும், அவனை உலகறியச் செய்யவும் பிரான்சு நாட்டு மக்கள் முடிவு கட்டினர்"

"இவ்விதம் முடிவு கட்டி விட்டால் மட்டும் போதாது"

"பின்னர்"

"மகனே எல்லாவற்றையும் முடிவு கட்டி விடுவதும், தீர்மானித்து விடுவதும் சுலபமான காரியம் ஆனல்"

"ஆனல் என்ன?"

"முடிவு கட்டியபடி முயற்சியில் இரங்கி காரியத்தை நிறைவேற்ற வேண்டும் அதுதான் கடினம். எனக்குத் தெரியும் எவ்வளவோ விஷயங்கள் முடிவு செய்யப்பட்டு, தீர்மானிக்கப்பட்டு இன்று வரையிலும் செயல் முறைக்கு வராமல் இருக்கின்றன வென்று. ஆனல் நெப்போலியன் விஷயமும் அப்படி இருந்து விடக் கூடாது."

"முடிவு கட்டிய காரியங்கள் முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன தந்தையே?"

"காரணமா கேட்கிருய்? கேள்! ஆனல்,"

"ஏன் அடிக்கடி 'ஆனல் பேடுகிறீர்கள்"

"நானு ,போடுகின்றேன் போட வேண்டிய நிலை ஏற்படுகிறது"

"சரி தொடருங்கள்"

"முயற்சியின்மை—வசதியின்மை இவைகள் தான் முக்கிய காரணம். சில சமயங்களில் ஏமாற்றமும் காரணமாக அமையும்.இவைகளினுல் நிச்சயம் காரியம் சித்தி அடையாது"

"முயற்சி யின்மை, வசதி யின்மை காரணங்களாக அமைவது பொறுத்தம் தான் ஆனல் ஏமாற்றம் எப்படி காரணமாக அமையும்?"

"ஒரு சிலர் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டி நம்முடன் கூடி, நமது தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பதாகக் கூறிவிட்டு, அவர்கள் காரியம் முடிந்ததும், நம்மையும், நமது தீர்மானத்தையும் அனுதரவாக விட்டுவிட்டுப் விலகி விடுவார்கள். அப்போது நமது எண்ணங்களும், தீர்மானங்களும் நிச்சயமாக நிறைவேருது"

"ஆம்! தாங்கள் கூறுவது உண்மையே நாம் நமது நெப்போலியனின் வீரமும், அருங்குணச் சிறப்புகளும் உலகெல்லாம் பரவ ஏதாகிலும் செய்தா லென்ன?"

"உன் யோசனை சரியானது தான். நாம் நம்மாலானதை செய்ய வேண்டும். நெப்போலியனை உலகிற்கு ஒழுக்கமுள்ள உத்தமனுகக் காட்ட வேண்டும்."

"தந்தையே! நமது நாட்டில் வீரர்களுக்குப் பஞ்சமில்லை யல்லவா?"

"ஆம்! நமது நாடு பல வீரர்களை உண்டு பண்ணியிருக்கின்றன. பல வீராங்கனைகளையும் பெற்றெடுத்துள்ளது. அது மட்டுமில்ல நல்ல அறிஞர்களையும்,

தோற்றுவித்துள்ளது. நமது நாட்டின் வீரம் என்னும் தாயின் இருகண்கள் போல இருவர் விளங்கினர். அவர்களில் ஒருவன் நெப்போலியன். அடுத்தவள் ஒரு பெண்.''

''என்ன! பெண்ணு! அந்த வீராங்கனை யார்?''

''ஜோன்'' என்னும் பெயருடையவள். பட்டிக்காட்டில் பிறந்து, மண்டலாதிபதிகளை மருளச் செய்தவள். பாவம் அவளின் முடிவு நெப்போலியன் முடிவைவிட மோசமானது அவளை, அந்த வீரமங்கை ஜோனை, இதயமற்றவர்களான ஆங்கிலேயர்கள் உயிருடன் எரித்தனர். பதினெட்டு வயதுடைய அந்த அழகியின் உடம்பை அக்கினி தேவன் அணைத்துக் கொண்டான். அவள் எந்த விதமான குற்றமும் செய்யவில்லை. நாட்டுக்கு நன்மை செய்தாள். ஆனால் அவள் பலியானாள்.''*

''அப்பா நமது நாட்டுக்கு நல்லது செய்த இருவரையும் உலகம் மறக்கக் கூடாது. இதற்கு நாம் ஏதாகிலும் செய்தாக வேண்டும்''

''நம்மால் என்ன செய்ய முடியும் சரித்திரம் அவர்களை தன் ஏடுகள் என்ற தங்கக் கரத்தால் கட்டி அணைத்துக் கொண்டுதான் இருக்கிறது. இருந்தாலும் நமது நாட்டு பெரு வீரர்களின் வீர வரலாற்றை எல்லா மொழிகளிலும் எழுதத் தூண்டுவோம். இதற்காகவே நாம் நமது வாழ் நாளை அர்ப்பணிப்போம்.

வாழ்க வீரர்கள்! வாழ்க அவர்களின் புகழ்!!

---

* வீரமங்கை ஜோன் என்னும் புத்தகத்தில் ஜோன் வரலாறு விரிவாக வரையப் பெற்றுள்ளது.

2-338

# இங்கர்சாலின்

## இணையற்ற நூல்கள்

ஊடுருவி:

| | |
|---|---|
| அறியாமை | 1—0 |
| உண்மை | 1—0 |
| கோயில்கள் | 1—0 |
| கடவுள் | 1—0 |
| மக்கள் உரிமை | 1—0 |
| மதங்கள் | 1—0 |
| சீர்திருத்தம் | 1—0 |
| மூடநம்பிக்கை | 1—0 |
| வால்டேர் | 1—0 |

[ கேட்லாக் இனாம் ]

விபரங்களுக்கு :—

**கலை மன்றம்**

**சென்னை-1**

Srimagal Press, Madras-1